ஒத்துழையாமை ஏன்?

விருத்தாந்தமும்

மகாத்மா காந்தியின் உபந்யாசங்களும்

கணேஷ் கம்பெனி

ண. 8 சென்னை

இந்தியாவும் சுய ஆட்சியும்

தேச ராஜீய சரித்திரநூல்

"இந்தியாவும் சுய ஆட்சியும்" என்ற புத்தகம் சுமார் 360 பக்கங்கள் [illegible] டது. இப்புத்தகத்திற்கு திருமயிலை முனீந்திரர் [illegible] டாக்டர் சுப்பிரமணிய ஐயர் ஓர் அரிய முக வுரை எழுதி யிருக்கின்றனர். இந்தியா பண்டைக் காலத்து அடைந்திருந்த பெருமையும், அங்கிலேயர் இந்தியாவுக்கு வியாபாரவிஷயமாக எங்ஙனம் வந்தனரென்பதும், அன்னார் கைத்தொழில் சம்பந்தமாக அநுசரித்து வந்த முறையினால் [illegible]யா படும் துன்பமும், இந்தியாவைப் பற்றிப் பிரிட் [illegible] வர்ன்மெண்டார் அவ்வப்பொழுது கொடுத்த உறுதி [illegible]கள் நிறைவேற்றப்படாமையும், சுய ஆட்சிக் கிளர்ச்சி [illegible]வில் தோன்றிய விதமும், 1917-ம் வருஷம் ஆகஸ்டு மா [illegible] 20-ந் தேதி மிஸ்டர் மாண்டேகு பார்லிமெண்டில் வெளிப்படுத்திய அறிக்கையைப்பற்றியும், 1918-ம் வருஷ இறுதியில் நடந்த டில்லிக் காங்கிரஸ் நடவடிக்கைகளும். பிறவும் விளக்கமாக இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றன. ஆங்கில மறியாத் தமிழர் ஒவ்வொருவரும், இவ்வரிய நூலை வாசிக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம். இந்திய அரசியல் விஷயங்கள் யாவும் இந்த ஒரு நூலில் அழகாகத் தொகுத்துக் காட்டி யிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. இந்நூலை வெளிப்படுத்தியவருக்குத் தமிழ் மூலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றதென்று நாம் கூறுவது மிகையாகாது. இந்நூல் உயர்ந்த கடிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூபாய் 1-8-0."—தேசபக்தன் மதிப்புரை.

மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

சுயராஜ்யம் என்பதை நன்கு [illegible]க்கி அதியில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் [illegible] பெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி [illegible] தேசத்தில் "நாகரீகம் நாகரீகம்" என்று [illegible] பலரையும் மயக்கி வருத்தும் விஷய விவர[illegible] நிர்மல சிந்தையுடன் விளக்கப் பட்டுள்ளன. படிப்போர் [illegible] தெளிவுஉண்டாகி, தேசாபிமான உதயம் [illegible] அணா 8.

கணேஷ் கம்பெனி, [illegible]9 தம்பு செட்டி தெரு, சென்னை

ஒத்துழையாமை ஏன்?



இதே பதிப்பு கொந்தியில்
இருக்கிறது.
இது இந்தியாவுக்கு.



ஒத்துழையாமை ஏன்?

விருத்தாந்தமும் மகாத்மா
காந்தியின் உபந்யாசங்களும்

கணேஷ் கம்பெனி

சி. முனிசாமி முதலியார் அண்டு சன்ஸ்,
"சிவகாமி விலாசம் பிரஸ்,"
41, லிங்க செட்டி தெருவு, மதறாஸ்.

முகவுரை

தற்காலம் பாரத தேச மெங்கும் ஒத்துழை யாமை இயக்கம் ஓங்கிப் பரவிவருகிறது. மகாத்மா காந்தியும், காங்கிரஸ் மகாசபையும் ஒத்துழையாமைக் கொடி நாட்டிவருகையில், அதன் விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய் அனைவரும் அறிய விரும்புவது சகஜம் ஆதலின், வங்காளப் பிரிவினை முதற்கொண்டு ஜனநாயக முழக்கம் கடலொலியினும் பன்மடங்கு ஒலிக்க, புதிய சகாப்தம் உதிக்க, ஸத்தியாக்கிரக விரதம் தலையெடுக்க, இதுகாரணமாக அதிகாரச் செருக்குற்றவர்கள் செய்கைகளால் பஞ்சாப் படுவதைதலைவிரித்தாட, பழிக்குப் பழி பரவ, கலீபாவும் கிலாபத்தும் பங்கப்பட, நவசக்தி உதயமாக, மகாத்மா காந்தியின் போதம் ஜீவஹிம்ஸை சொப்பனத்தும் இல்லாத சுயராஜ்யப் போருக்கு அழைப்பது வரை ஸகல சம்பவங்களும் இச்சிறு நூலிலே இனிய தமிழ் நடையில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் வகைப்படி எடுத் துரைக்கப்பட்டுள்ளன. ஆங்கில மறியாத தமிழ் மக்கள் அனைவரும் விஷயத்தை உண்மையா யுணர்ந்து, சுயராஜ்யப் போரில் உழன்று உய்வார்களாயின், அதுவே பதிப்பாசிரியர்கள் எதிர்பார்க்கும் கைம்மாறுகும்.

கணேஷ் கம்பெனி.

பொருளடக்கம்.

ஒத்துழையாமை ஏன்?

I

ஜன நாயக முழக்கம்

இந்தியாவின் இராஜீயவாழ்க்கை மிகவும் சிக்கலானது. ஒருகாலத்து உயர்ந்தும் மற்றொரு காலத்து தாழ்ந்தும், ஓரோர் சமயத்து பிரகாசித்தும் மற்றோர் சமயத்து மங்கியும் இருக்கும். இராஜீய வாழ்க்கை உயருங் காலத்து நாட்டில் அடக்குமுறைகள் ஏற்படுகின்றன. அன்னிய பிரபுத்துவத்தில் வாழுங் குடிகளுக்கு இராஜீய வாழ்க்கை அபாயமானதென்பது பலர் கொண்ட அபிப்பிராயம். இது இந்தியா விஷயத்தில் உண்மையாக விருக்கின்றது. இந்தியாவின் இராஜீய வாழ்க்கைக்குக் காரணம் காங்கிரஸ் மகா சபை யென்பர் சிலர்; அதிகாரிகளின் அத்துமீறின அடக்குமுறைகளே காரணம் என்பர் மற்றுஞ் சிலர்: இந்தியாவில் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஆட்சி புரிந்த இராஜப் பிரதிநிதி கர்ஸன் பிரபுவே காரணமென்பர் பின்னுஞ் சிலர். இப்படி பலவித அபிப்பிராயங்கள் உண்டு. உற்று நோக்குமிடத்து இந்தியாவின் தீவிர இராஜீயக்கிளர்ச்சிக்கு கர்ஸன் பிரபுவே காரணமென்பது உலகறிந்த விஷயம். இவர் 1905-ம் வருடம் அக்டோபர் மாதம் 16-ந் தேதி எட்டுக்கோடி ஜனங்கள் வசிக்கின்ற வங்காளத்தைப் பிளவு படுத்தினர். 1903-ம் வருடத்தி லிருந்தே வங்காளிகள் பிளவைப் பற்றிக்

கண்டனஞ் செய்து வந்தனர். என்றாலும், கர்ஸன் பிரபு பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கவனியாது வங்காளத்தை இருபிரிவாகச் செய்தார். ஜனத் தலைவர்கள் பெருத்த கிளர்ச்சி செய்ய வாரம்பித்தனர். சுதேசிய இயக்கம் உண்டாயிற்று. வந்தே மாதரம் என்னும் மந்திரம் எண்டிசையும் ஒலித்தது. மாணவர்கள் கல்விச் சாலைகளி னின்றும் வெளி வந்தனர். மாதர்கள் தாய் நாட்டுத் திருத்தொண்டுக்கு முன் வந்தனர். நாடெங்கும் சுதந்தர ஒளி வீசியது. தேசமெங்கும் சுதேசிய நாதம் எழுந்தது. ஜனங்கள் வெளிநாட்டுச் சாமான்களை விலக்கினர். ஆறுகளிலும் கோயில்களிலுஞ்சென்று ஜனங்கள் இரட்சா பந்தனங் கட்டிக் கொண்டனர். வீதிகள் தோறும் சுதேசிய பஜனைகள் ஏற்பட்டன. தெருத் தெருவாக ஊர் வலங்கள் வந்தன. மகா நாடுகள் பல கூடின. தீர்மானங்களும் பிரசங்கங்களும் ஓயாமல் செய்யப்பட்டன. தந்திகள் இங்கிலாந்திற்குப் பறந்தன. அதிகார வர்க்கத்தினர் பொதுக் கூட்டத்தைக் கலைத்தனர். கூட்டங்கள் கூட்டக் கூடாதெனச் சட்டங்களை யவர்கள் பிறப்பித்தனர். அதிகாரிகள் அடக்குமுறைகள் செய்யச் செய்ய ஜனங்களின் மனோநிலைமை ஸ்திரப்பட்டது. அக்கினி மலையிற் கர்ப்பூர பாணம் பிரயோகிப்பதுபோல அதிகாரிகள் தம் அடக்குமுறைகளினால் இராஜீயக் கிளர்ச்சியைப் பலப்படுத்தினார்கள், பத்திரிகைகள் பல கஷ்டப்பட்டன. பத்திரிகாசிரியர் பலர் சிறை புகுந்தனர். பாலர்களிற் சிலர் தண்டனை யடைந்தனர். ஜனங்கள் ஸ்வராஜ்ய

தாகங் கொண்டனர். ஜாதீய கலாசாலைகளை ஸ்தாபித்தனர். ஊழியப் படைகள் சேர்க்கப்பட்டன. கிராமப் பிரசாரகர்கள் அணியணியாகப் புறப்பட்டனர். அன்னிய அரசாங்கம் அரைக்கணமும் உதவாதென்கிற பேச்சே எங்கு முண்டாயிற்று. இராஜ நிந்தனைக் குற்றத்திற்காகப் பல தலைவர்கள் தண்டனையடைந்தனர். ஸ்ரீ பிரம்ம பாந்த உபாத்யாயர், பூபேந்தர நாதர், ஸ்ரீ அட்சய குமாரர் முதலானோர் வங்காளத்திலும், லோக மான்ய திலகர், பரஞ்சபே, முதலானோர் பம்பாயிலும், ஜசவந்தராய், அதவாலி, பிண்டிதாஸர் முதலானோர் பஞ்சாபிலும், சிதம்பரம் பிள்ளை, கிருஷ்ணஸ்வாமி சர்மா, ஹரிசர்வோத்தம ராவ் சென்னையிலும் தண்டிக்கப்பட்டனர். அது காலை இங்கிலாந்தில் பல இந்தியச் சிறுவர்கள் இந்தியாவை மீட்சி செய்ய, சங்கமொன்று ஸ்தாபித்தனர். புத்தகங்கள் பல இந்தியாவிற்கு அனுப்பினர். இதாலி சுதந்தர மடைந்த விஷயமாகவும், பிரான்சு சுதந்தரப் போர் தொடுத்த விஷயமாகவும், மாஜினி முதலானோர் ஜீவியசரித்திர விஷயமாகவுமுள்ள பலபுத்தகங்களை அவர்கள் அனுப்பினார்கள். தவிர, வெடிகுண்டுகள் செய்யும் வழிகளையும், கைத்துப்பாக்கிகளையும் இந்தியாவிற்கு அவர்கள் அனுப்பினர். வங்காளத்தில் வெடிகுண்டுகள் செய்ய இரகஸியச் சங்கங்களைப் பல யௌவனர்கள் ஸ்தாபித்தனர். வெடிகுண்டு எறிதலும் துப்பாக்கிப் பிரயோகமும் வங்காளத்தில் பலமாக விருந்தது. சில வெள்ளைக்காரர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கான சிறு

வர்கள் தண்டனை யடைந்தனர். சிலர் தூக்கு தண்டனையும் சிலர் தீவாந்தர சிட்சையு மடைந்தனர். ஸ்ரீ அரவிந்தர் குற்றஞ் சாற்றப்பட்டார். * இங்ஙனம் வங்காளமும் மற்ற மாகாணங்களும் தலைவிரி கோலமாய்ச் சுதந்தரத்திற்குப் போராட்டஞ் செய்து வருகையில் இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரி ஜனங்களை சமாதானப்படுத்த சீர்திருத்த மொன்றைக் கொடுத்தார். அதுதான் மிண்டோ—மார்லி சீர்திருத்தமாகும். சீர்திருத்தம் வந்தாற்போல் சில புதிய சட்டங்களும் வந்தன. அச்சுக்கூடச் சட்டமொன்று 1910-ம் வருடத்தில் பிறந்தது. இச்சட்டத்தின் பயனால் இந்தியாவில் அன்று முதல் இன்று வரை சுமார் 360 பத்திரிகைகள் கஷ்டப்பட்டன. 310 பத்திரிகைகளின்மீது ஜாமீன் தொகை கேட்கப்

---

* இவர் வங்காள மாகாணத்தைச் சேர்ந்தவர். நற்குடியிற் பிறந்தவர். பால்மணம் மாறாச் சிறு பிராயத்திலிருந்தே இங்கிலாந்தில் கல்வி கற்றவர். கலெக்டர் பரீட்சைக்குப் படித்திருந்தார். பரோடா மகாராஜாவிற்கு அந்தரங்க காரியதரிசியாகச் சின்னாள் இருந்தார். வங்காளத்தில் ஜாதீய கலாசாலையில் ஆங்கில பாஷா போதகராக விருந்தார். 'வந்தேமாதரம்' 'கர்மயோகி' முதலிய பத்திரிகைகளுக்கு இவர் ஆசிரியராக விருந்தார். வங்காள வெடிகுண்டு கேஸில் இவரைச் சிக்க வைத்தார்கள். பிறகு விடுதலை யானார். தற்பொழுது தென்னிந்தியாவின் கண்ணுள்ள புதுவையி லிருக்கிறார். நல்ல வேதாந்தி. சிறந்த இராஜயோகி. பத்திரிகைக்கு விஷய தானஞ் செய்வதில் இவருக்கு இணை இந்தியாவில் கிடையாது. மகா உத்தம தேசாபிமானி.

பட்டது. ஜாமீன் தொகை இதுவரை பறிமுதல் செய்யப்பட்டது சுமார் 7 லட்சம் ரூபா. சீர்திருத்தம் வந்ததும் பலர் அம் மாயவலையிற் சிக்கினர். தேசாபிமானங் கொண்டவர்கள் சிறை புகுந்ததினும், அதிகாரிகளின அடக்கு முறைகளுக்குப்பயந்து பலர் தேசாபிமான உணர்ச்சியை விட்டதினுலும், யாவரும்கண்டு நடுங்கும்படியாக வங்கச் சிறுவர் சிலர் கொலையையும் களவையும் மேற்கொண்டதினுலும் கொஞ்சங் கொஞ்சமாக சுதேசீயக் கிளர்ச்சி 1910-ம் வருடத்தில் குறைய வாரம்பித்தது. நாட்டைப் பற்றிய நினைவு பலருக்குப் பறந்தது. நாட்டின் இராஜீய வாழ்க்கையில் தாமச நிலைமை ஏற்பட்டது. இராஜீய வாழ்க்கை அற்றுப்போய் விட்டது. 1908-ம் வருடத்தி லிருந்து காங்கிரஸ் மகா சபையும் ஒளி குன்றி அழ வாரம்பித்தது. தன் அழுகையைப் பம்பாயில் நடந்த 1915-ம் வருடத்திய காங்கிரஸ் மகாசபையுடன் நிறுத்திற்று. நிற்க, இந்தியாவிற்கு வெளியே வசித்து வந்த இந்தியர்களிற் சிலர் பல காரியங்களைச் செய்து வந்தனர். அங்ஙனம் செய்து வந்தவர்களில் ஷாமாஜி கிருஷ்ண வர்மா, சவர்கார், மாது காமா, ஹரிதயால் ஆகிய இவர்களே முக்கியமானவர்கள்.இவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த தேசபக்தர்கள். நாட்டின்விஷயத்தில் துயிலொழித்தவர்கள். இப்படி யிருக்கையில் அமெரிக்காவிலுள்ள கானடாஎன்னும் பிரிட்டிஷ் குடியேற்றநாட்டில் ,பல இந்தியர் வசித்துவந்தனர். அக்கானடா பிரதேசத்து வெள்ளையர்கள் ஒருசட்டத்தை யேற்படுத்தி இந்தியர்

களை நாட்டைவிட்டுப்போகும்படி செய்தார்கள். அது காலை அவ்விந்தியர்களிற் பலர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது கோபங்கொண்டு கப்பல் நின்ற இடங்களிலெல்லாம் கலவரஞ் செய்தார்கள். அவர்களைத் தான் 'காதர்' கூட்டத்தவர்களென்பார்கள். அவர்கள் கல்கத்தாவில்வந்ததும் பட்ஜ் பட்ஜ் என்னுமிடத்தில் பெரிய கலகம் ஏற்பட்டது. அதுவிஷயமாகப் பலர் தண்டனை யடைந்தனர். பஞ்சாப் மாகாணத்தில் பலர் சிறை புகுந்தனர். * பாய் பரமாநந்தர் தீவாந்தர சிட்சை பெற்றார். இவ்வளவு அமளி குமளி நடந்தும், காங்கிரஸ்மகா சபையாகிலும் அதைச் சேர்ந்தவர்களாகிலும் தீவிர இராஜீய வாழ்க்கையைப் பற்றினதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் பலர் சீர்திருத்த விஷயமாக ஏற்பட்ட உத்தியோகங்களுக்கும் அதிகாரங்களுக்கும், ஸ்தானங்களுக்கும் சென்றனர். என்றாலும் நாட்டின் பல இடங்களில் தேசாபிமான உணர்ச்சி ததும்பிக்கொண் டிருந்தது. வெளிப்படையாக முன்போல் பலர் வெளிவர வில்லையாயினும் தனிப் படையாக ஒவ்வொருவரும் தீவிரமாக இராஜீய வாழ்க்கையைப் பற்றி யிருந்தனர். இராஜரீகத்தில் நம்பிக்கை வர வர குறைவுபட்டதை அதிகாரிகளும் அறிந்தனர். ராஜரீகமுறையில் வெறுப்பும் அதிருப்தியும் இன்னும் இந்தியாவில் உலாவி வருகின்றனவென்பதை அதிகாரிகள் உணர்ந்தனர். சாசு

* சமாதானக் கொண்டாட்டத்தின்போது இவர் விடுதலை பெற்றார். தற்பொழுது லாலா லஜபதியுடன் இருந்து வருகிறார்.

வதமாக இவ்வுணர்ச்சியைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணம் அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. நல்ல தருணமும் வாய்த்தது. ஐரோப்பா யுத்தம் ஆரம்பித்தது. ஜர்மெனியர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் சண்டையுண்டாயிற்று: யுத்த காலத்தில் இந்தியாவில் ஏதாகிலும் அராஜரிக காரியங்கள் உண்டாகலாமெனக் கொண்டு பற்பல காரணங்களைத் தெரிவித்து 1915-ம் வருடத்தில் இந்தியப்பாதுகாப்புச்சட்ட மொன்றைப் பிறப்பித்தனர். சின்னஞ் சிறிய தேசங்களின் சுதந்தரத்தைக் காப்பதற்கே இங்கிலாந்து தர்ம யுத்தஞ் செய்யத் தலைப்பட்டதென்று நம்மவர் இந்தியாவில் நம்பும்படி பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கூறி வந்தனர். இவ்வார்த்தைகளில் நம்பிக்கை கொண்ட இந்தியர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குப் பக்கத் துணையாக விருந்து பொருளாலும் ஆள் படையாலும் உபசரிக்க முன்வந்தனர். ஐரோப்பா யுத்தத்திற்குப் பிறகு இந்தியாவிற்கு நற்காலம் வருமென்பதை அனைவரும் அறிந்தனர். நம்மவர்க்கு ஒரு புதிய உணர்ச்சி யுண்டாயிற்று. இனி இந்தியாவிற்குப் புதிய சகாப்தம் உண்டாகுமெனத் தலைவர்கள் எண்ணினர். இவ்வாறு பற்பலமாதிரி எண்ணி நம்பிக்கை கொண்டதின் பேரில் 1915-ம் வருடத்திய பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றிய பெருங் கிளர்ச்சி அக்காலத்தில் இந்தியர்கள் செய்யவில்லை. வைஸிராய் சட்ட சபையில் அரசாங்க அங்கத்தினர்களும் இச்சட்டம் பிரிட்டிஷாருக்கு விரோதமாகச் சண்டை புரியும் சத்துருக்க

ளுடன் சகவாஸம் வைத்திருப்பவர்களைத்தான் பாதிக்குமே தவிர மற்றவர்களுக்கு இதனால் ஓர் ஆபத்துங் கிடையாதெனத் தெள்ளெனக் கூறினர். அந்தோ! அவர்கள் கூறினதற்கு விரோதமாக அனுஷ்டானத்தில் காண்பித்தனர். முதன் முதல் முஸ்லீம் தலைவர்களான அலி சகோதரர்களைச் சிறைப்படுத்தினர். வங்காளத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அடக்குமுறை வலை வீசி எண்ணிறந்தவர்களைச் சிறைப்படுத்தினர். இங்ஙனமிருக்க 1916-ம் வருடத்தில் இராஜப் பிரதிநிதியும் அவரது நிர்வாக சபை அங்கத்தினர்களும் இந்தியாவின் அரசியற்றுறையில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென அவாக் கொண்டனர். ஆனால் ஹார்டின்சு பிரபு உத்தியோகப்பதவி புரியுங் காலந்தீர்ந்து விட்டபடியால் அவர் அப்பதவியி னின்றும் விலகிக் கொண்டார். லார்ட் செம்ஸ்போர்ட் இராஜப்பிரதிநிதியானார். நிர்வாக சபை அங்கத்தினர்கள் சீர்திருத்த வழியாக ஒரு திட்டத்தைத் தயார் செய்தனர். அத்திட்டம் இந்தியர்களின் முன்னேற்றத்திற்குப் பல வழிகளிலும் தடங்கலாக விருப்பதைக் கண்ட இந்தியநிர்வாக அங்கத்தினரான ஸர்.சங்கரன் நாயர் அவர்கள் அத்திட்டத்தில் கைச்சாத்திடாமல் கண்டித்துத் தாம் தனியே மறுப்புரை யொன்று எழுதினர். இந்நிலைமையை யறிந்த தேசத் தலைவர்களிற் சிலர் வைஸிராய் சட்டசபையி லிருந்தபடி ஒரு திட்டத்தைத் தயார் செய்து பத்தொன் பதின்மர் கையெழுத்திட்டு இராஜப் பிரதிநிதிக்கு அனுப்பினர்கள். தவிர, அவ்வருடக் கடைசியில் இலட்சுமணபுரி

(லக்நௌ) யில் கூடின பாரத ஜனசபையில் ஒரு திட்டத்தைத் தயார் செய்து அரசாங்கத்தினருக்கு அறிவித்தனர். அத்திட்டத்திற்குத் தான் காங்கிரஸ்—லீக் திட்டமெனப்படும். இராஜீய வாழ்க்கை இவ்வாறிருக்க, அவ்வருடத்தின் ஆரம்பத்திலேயே அன்னி பெஸண்டு சுய ஆட்சிச் சங்கங்களை நாடெங்கும் ஏற்படுத்தி அதன் வழியாகப் பெரிய கிளர்ச்சி செய்தாள். சுய ஆட்சி யென்னும் வார்த்தை காட்டுத் தீ போல் பரவிற்று. இந்தியா சுய ஆட்சி பெற வேண்டுமென்கிற உணர்ச்சியை அம்மாது ஊட்டினதும் அது கரை புரண்ட வெள்ளம் போல் வந்தது. கிராமங்களிலும் மூலை முடுக்குகளிலுமுள்ளவர்களும் சுய ஆட்சியைப்பற்றி யறியலானார்கள். அநேக பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் இந்தியாவிற்கு சுய ஆட்சியே இன்றியமையாதெனக் கூறியிருக்கின்றனர். 1916-ம் வருடம் டிசம்பர் மாதம் வைஸிராய் லார்ட் செம்ஸ்போர்டும், கல்கத்தா இந்தியர் சங்கத்தில் 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்கீழ் சுய ஆட்சியை யனுபவித்து வரும் குடியரசு நாடுகளுக்குச் 'சமமாக இந்தியாவும் ஒருகாலத்தில் வர நேரிடும்' என்பதாகக் கூறினர். சுய ஆட்சி விஷயமாக எண்ணிறந்தவர்கள் மேடைப் பிரசங்கங்களிலும் பத்திரிகைகளிலும் வெளியிட்டிருந்தனர். நிற்க, இச் சுய ஆட்சி விஷயமாக ஏற்பட்ட கிளர்ச்சி கலகப்புரட்சியென்று அதிகாரிகள் கருதலானார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சிக்கு ஆபத்துவந்துவிட்டதென்று சில ஆங்கிலோ இந்தியப்

பத்திரிகாசிரியர்கள் கூறிவந்தனர். டைம்ஸ் பத்திரிகை எச்சரித்தது. பயனியர் பத்திரிகை பயமுறுத்திற்று. இங்கிலீஷ்மன் பத்திரிகை இந்தியாவில் அடக்குமுறை யனுஷ்டிக்கத் தூண்டிற்று. இங்ஙனம் சுய ஆட்சி விஷயமாக ஆங்கில அதிகாரிகள் தலை மாடு கால்மாடு தெரியாமல் தன்னரசு கொண்டனர். இராஜப் பிரதிநிதிசபை நிர்வாக அங்கத்தினர்கள் அடக்குமுறை கொள்ள முன் வந்தனர். இராஜப் பிரதிநிதியும் மாகாண கவர்னர்களும் அடக்குமுறைகளை யனுஷ்டிக்க முற்பட்டனர். பாஞ்சாலத்தைப் பரிபாலித்த ஸர் மைகல் ஒட்வியர் பேயாடுவதுபோ லாடலானார். வைஸிராயி னின்றும் மாகாணத் தலைவர்களுக்கு உத்திரவுகள் பிறந்தன. இந்தியப் பாதுகாப்புச் சட்டங்கள் அதிவேகமாய்ச் சகடக்கால்போல உருண்டன. வாக்குரிமை யிழந்தவர்கள் சிலர், நடமாடுஞ் சுதந்தர மிழந்தவர்கள் சிலர், நபர் பந்தோபஸ்து சொத்து பந்தோபஸ்து முதலியவைக ளிழந்தவர்கள் சிலர். இங்ஙனம் உரிமைகள் பறிக்கப்பட்டன. சென்னையில் அன்னிபெஸண்டும் அவருடைய சகாக்களும் சிறைப்பட்டனர். வங்காளத்தில் சியாம சுந்தர சக்கரவர்த்தி முதலானோர் சிறைப்பட்டனர். வங்காளத்தில் சுமார் எண்ணூறு பேர் அடக்குமுறைகட்கு அகப்பட்டனர். மாதர்களும் அடக்கு முறையால் அலைபட்டனர். பத்திரிகைகள் சிறகிழந்த பறவைகள்போலாயின. இந்தியருக்குப் பலவிதத்திலும் துன்பம் மூண்டது. இந்தியாவில் கிளர்ச்சி வெகு பலமாகவே, இங்கிலாந்தில் கேள்விகள் பிறந்

தன. அதல்லாமலும் ஐரோப்பாவில் பிரன்சு பூமி யில் பிளாண்டர்ஸ் என்னும் யுத்தரங்கத்தில் ஜர்மெ னியர்களுடைய குண்டுகளுக்கு முன் நிற்கமுடியாமல் பிரன்சு சேனையும் இங்கிலீஷ் சேனையும் பின்வாங்கின காலத்தில், இந்தியாவி லிருந்து போன இந்திய சேனு வீரர்கள் யுத்தத்தில் முன்னணியில் நின்று வெகு தைரியமாகப் போராடினர். ஜர்மெனிய வீரர்களும் பின் வாங்கினர். அதுகாலை, அமெரிக்கா முதலிய பல நேசக் கட்சியினர் இந்தியர்களைக் கொண்டாடி அவர்களைப் பற்றி விசாரிக்க முன் வந்தனர். அச் சமயத்தில் தான் இந்தியாமந்திரி பார்லிமெண்ட் மகா சபையில் 1917-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 20-ந் தேதி பின் வருமாறு விளம்பரஞ் செய்தார் 'இந்தி யாவைப் பரிபாலிக்கும் ஒவ்வொருகாரியத்திலும் இந் தியருக்குள்ள சம்பந்தத்தை அதிகப்படுத்த வேண்டு மென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஓர் உறுப் பாக இந்தியா ஆகவேண்டுவதற்காக ஜனங்களுக்கு ஜவாப்தாரியான அரசாங்கம் வர வர விர்த்தியாவ தற்கு ஜனப் பிரதிநிதி சபைகளை விர்த்தி செய்ய வேண்டுமென்றும் பிரிட்டிஷ் கவரன்மெண்டார் எண் ணங்கொண் டிருக்கிருர்கள். இந்தியா கவரன்மெண் டாரும் அதை முற்றிலும் அங்கீகரித்திருக்கிருர்கள். எவ்வளவு சீக்கிரமாக சாத்தியப்படுமோ அவ்வளவு சீக்கிரத்தில், இவ்வழியில் அடியெடுத்து வைக்க வேண்டுமென்று பூர்வாங்கமாக யோசனை செய்ய வேண்டு மென்றும், இந்தியாவிலும் இங்கிலாந்திலு முள்ள அதிகாரிகள் தாராளமாக விட்டுச் சொல்லி

அபிப்பிராயங்களைக் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கவரன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால், இவ்விஷயங்களைப் பற்றி இராஜப் பிரதிநிதியுடனும் இந்தியா கவரன்மெண்டுடனும், யோசனை செய்யவும், மாகாண கவரன்மெண்டுகளின் அபிப்பிராயங்களை இராஜப் பிரதிநிதியுடன் சேர்ந்து யோசனை செய்கிறதற்காகவும், பிரதிநிதி சபைகள் முதலியவற்றின் யோசனைகளை இராஜப் பிரதிநிதியுடன் கூடவிருந்து கேட்டுக்கொள்ளும்படியும் நான் இந்தியாவுக்குப் போகவேண்டுமென்று இராஜ சக்கரவர்த்தியின் சம்மதத்தின்மேல் அவருடைய கவரன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த எண்ணத்தை நிறைவேற்றும் விஷயத்தில் நாம் படிப்படியாகத் தான் முன்னேற்றமடைய முடியும். இந்தியாவின் ஜனங்களுடைய க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பொறுப்பு வகித்திருக்கிறவர்களாகிய இந்தியா கவரன்மெண்டும் பிரிட்டிஷ் கவரன்மெண்டுமே ஒவ்வொரு படியையும் விட்டு இன்னொரு படிக்குப் போகவேண்டிய காலத்தை நிர்ணயிக்க வேண்டும். தேச சேவை செய்ய சந்தர்ப்பம் பெறப்போகிற ஜனங்களின் கூட்டுறவையும் அவர்களுடைய பொறுப்புணர்ச்சியையும் எவ்வளவு தூரம் நம்பலாமென்று தெரிகிறதோ அதையும் உத்தேசித்து படிதாண்ட வேண்டிய காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும். செய்யப்படப்போகிற பிரேரணைகளைப் பற்றி வாதம் செய்யப் போதுமான சாவகாசம் கொடுக்கப்பட்டு அவைகள் பார்லிமெண்டில் ஆஜர் செய்யப்படும்.

இவ்வறிக்கையின் பயனாக இந்தியத்தலைவர்களுக்குள் பேத மேற்பட்டது அவ்வறிக்கை, பொறுப்பாட்சிக்குரிய வழியைக் குறிக்கின்றதென்பர் ஒரு கூட்டத்தார்; மற்றும் ஒரு கூட்டத்தார் அவ்வறிக்கை பயனற்றதென்பர். இங்கிலையில் ஊர் இரண்டுபட்டது. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிகளுக்குக் கொண்டாட்டம் என்பதுபோல இராஜீய வாழ்க்கையில் தலைவர்கள் இரண்டு படவே அதிகாரவர்க்கத்தினர் ஒரு கட்சியைத் தாங்க வாரம்பித்தனர். அவர்களுக்கு உற்சாகத்தை மூட்டினர். நீங்களே நல்ல பிள்ளைகளென முதுகில் தட்டிக் கொடுத்தனர். இப்படி தலைவர்கள் வித்தியாசப்பட்டிருக்கையில் அதிகார வர்க்கத்தினர் அராஜரிக விஷயங்களை ஆராய்ச்சி செய்ய இதுவே தருணமெனக் கொண்டனர். 1917-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் அதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதனுடைய தலைவரது பெயரைக் கொண்டு இப்பொழுது அதற்கு 'ரௌலட் கமிட்டி' என்று பெயர் வழங்குகிறது. இந்தியாவில் நடைபெறும் கலகப்புரட்சியான இயக்கத்தில் சம்பந்தப்பட்ட சதியாலோசனைகளைப் பற்றி அக் கமிட்டி விசாரித்து, அம்மாதிரி சதியாலோசனைகளைக் கவரன்மெண்டார் அடக்குவதில் அவர்கள் அனுபவித்த கஷ்டங்களைச் சட்டபூர்வமாக எங்ஙனம் நிவர்த்தி செய்துகொள்ளலாமென்று யோசனை சொல்லும்படி அந்த கமிட்டி ஸ்தாபிக்கப்பட்டது.

II

புதிய சகாப்தம்

இந்தியா மந்திரியான மாண்டேகுவின் விளம்பரம் இந்தியாவிற்கு ஒரு புதிய சகாப்தமெனச் சிலர் கூறினர். அடக்கு முறைகளுக்கும் அதிகாரிகளின் அட்டூழியங்களுக்கும் புதிய சகாப்தமெனக் கூறலாம்.

இதுவரை அதிகார வர்க்கத்தினர் செய்யாத அட்டூழியங்களை 1918-ம் வருடத்தி லிருந்து செய்யவாரம்பித்தனர். 1918-ம் வருடத்தில் ஜனவரி மாதத்தில் சதியாலோசனை கமிட்டி வேலைசெய்ய வாரம்பித்தது. கமிட்டியார் இரகஸ்யமாக விசாரணை செய்து ஏப்ரல் மாதத்தில் தங்களுடைய அபிப்பிராயக் குறிப்புகளை யனுப்பி விட்டனர். அவர்கள் தங்கள் குறிப்புகளில் செய்த சிபார்சுகள் பிரஜா சுதந்தரங்களைப் பறிக்கக் கூடியதா யிருந்தன. ஒருவன் குற்றஞ் செய்ததாக ருசுப்படுத்தினலொழிய அவன் குற்றஞ்செய்து விட்டதாக வைத்துக் கொள்ளக் கூடாது. வெளிப்படையான நீதி மன்றத்தில் தக்கபடி விசாரணை செய்யப்பட்டு முடிவாகும் வரையிலும் ஒருவன்மீது எவனும் தண்டனை விதிக்கக் கூடாது என்பது உலகத்திலுள்ள எல்லா நாகரிக முள்ள அரசாங்கங்களிலு முள்ள சட்டங்களின் அடிப்படையான கோட்பாடாகும். இக்கோட்பாட்டுக்கு விரோதமாக ரௌலட் கமிட்டியார் சில சிபார்சுகள் செய்திருக்கின்றனர். இதை யறிந்ததும் இந்தியாவில் பல மாகாணங்களிலுங் கூடின கான்பரன்ஸுகளும், பம்பாய் நகரில் கூடின

விசேஷ காங்கிரஸும், சர்வ இந்திய முஸ்லீம் மகா சபையும் மேற்சொன்ன சிபார்சுகளைக் கண்டனஞ் செய்திருக்கின்றன. இங்ஙனம், தேச மகா சபைகளும் தேசத்தலைவர்களும் ஒருங்கே அச்சிபார்சுகளைக் கண்டனஞ்செய்ததுடன் நிற்காமல், பிரஜா சுதந்தரக் காப்புச் சட்டம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தினால் பம்பாயில் நடந்த விசேஷ காங்கிரஸ் மகா சபையில் ஜீவாதாரமான உரிமைகளைப் பற்றிய தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவையாவன:—

1. இராஜ சக்கரவர்த்தியின் இந்தியப் பிரஜைகளும், இந்தியாவில் ஸ்திரவாசம் பெற்ற இதரப் பிரஜைகளும், சட்டப்படி சம அந்தஸ்துள்ளவர்களாகவிருக்க வேண்டும். அவர்களுக்குள் வித்தியாசம் பாராட்டக் கூடியதான சட்டம் எதுவுமிருக்கக் கூடாது.

2. சாதாரண நீதி மன்றத்தில் கிரமமாகவும் வெளிப் படையாகவும் விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்புச்சொன்னாலொழிய, எந்த இந்தியப் பிரஜையின் சரீர சுதந்தரத்தையும் சொத்து பந்தோபஸ்தையும், நபர் பந்தோபஸ்தையும், பேசும் சுதந்தரத்தையும், எழுதுஞ் சுதந்தரத்தையும், சேர்ந்து சகவாஸஞ் செய்யும் சுதந்தரத்தையும் இழந்துவிடக் கூடியதாகவிருக்கக் கூடாது.

3. இங்கிலாந்தில் நடப்பதுபோல், லைசென்ஸுக்குப் பணங்கொடுத்து வாங்கிவிட்டால், தாராள

மாக ஆயுதந் தரிக்க எந்த இந்தியப் பிரஜையும் சுதந்தரமுள்ளவராக விருக்கவேண்டும். நீதிமன்றத்தில் தீர்ப்புச் செய்தா லொழிய அப் பாத்தியதையை வேறு எவரும் எடுத்துவிடக்கூடாது.

4. பத்திரிகைகளும் அச்சுக் கூடங்களும் சுதந்தரமுள்ளவைகளாக விருக்க வேண்டும்; ஒரு பத்திரிகை அல்லது அச்சுக்கூடம் ஏற்படும் பொழுது ஜாமீன் கட்டும்படி அதைக் கேட்கக் கூடாது.

5 இராணுவத்திலும் கடற்படையிலும் உள்ள மற்ற பிரிட்டிஷ் பிரஜைகள் எந்த வழிகளில் சரீர தண்டனை யடைகிறார்களோ அந்த வழிகளில் தவிர, அப்படைகளி லிருக்கும் இந்தியருக்குச் சரீர தண்டனை வேறு விதமாக விதிக்கக் கூடாது.

மேற்கூறின சுதந்தரம் பிரஜைகளுக்குண்டென்று பார்லிமெண்டினால் சட்ட பூர்வம் உறுதிப் படுத்த வேண்டுமென்று காங்கிரஸ் தீர்மானித்தது. ஆனால், இத்தீர்மானங்களுக்கு விரோதமாக ரௌலட் கமிட்டியின் சிபார்சுகளை யனுசரித்து இரண்டு மசோதாக்களைக் கவரன்மெண்டார் வெளியிட்டிருக்கிறார்கள். அம்மசோதாக்களின் மூலமாக யுத்தத்தை முன்னிட்டு ஏற்பட்ட இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தைச் சாசுவதமாகச்செய்துவிட உத்தேசித்ததே இதன் நோக்கமாகும். இந்தியாவில் கலகப் புரட்சியான இயக்க மிருக்கிறதாகக் கூறி, அது சம்பந்தமாகச் சதியாலோசனைகளை யடக்க இம்மசோதாக்கள் காரணமே தவிர வேறெதற்குமில்லை யென்றார்

கள். ஆனால், அம்மசோதாக்கள் கலகப்புரட்சி செய்வோரையாவது சதியாலோசனை செய்வோரையாவது பாதிக்காமல் கவரன்மெண்டின் காரியங்களைக் கண்டனஞ் செய்து எழுதுவோரையும் பேசுவோரையும் சட்டத்திற்குட்பட்டு கிளர்ச்சி செய்வோரையும் பாதிக்கும். ஒருவன்மீது நடவடிக்கை நடத்தும்படி அரசாங்கத்தார் உத்திரவு செய்வதற்குமுன் இராஜாங்கத் துவேஷத்தைப் பற்றியும், இராஜாங்கத் துவேஷமான தஸ்தாவேஜி வைத்திருந்ததைப் பற்றியும் போலீசார் விசாரிக்கும்படி ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்யலாமென்று இந்த மசோதாக்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. வீடுகளைப் பரிசோதனை செய்யலாம், சம்சயப்பட்டவர்களைப் போலீஸார் கைதி செய்து அடைத்து வைக்கலாம். இராஜாங்கத் துவேஷக் கேஸில் ஒரு மனிதன் சரியாகவோ தப்பாகவோ தண்டனை யடைந்து விட்டால், அவனுடன் சகவாசம் செய்கிறவர்களுக்கும் புது மசோதாக்களின்படி கஷ்டம் உண்டாகிறது. மேலும், இந்தியா கவரன்மெண்டார் ஒரு விளம்பரஞ் செய்தால், உடனே ஹைக்கோர்ட் ஜட்ஜுகளின் உதவியின்றி அவசரமாகவும் இரகஸ்யமாகவும் விசாரணை செய்யலாம். நல்ல நடத்தையுடன் இருப்பதாக ஜாமீன் கொடுக்கும்படி எந்த மனிதனுக்கும் கவரன்மெண்டார் உத்திரவு செய்யலாம். அதல்லாமல் அவன் தன்னுடைய இருப்பிடத்தைத் தெரிவித்துக்கொண்டு இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்ட காலம் வரையில் போலீஸ் ஸ்டேஷனில் ஆஜராக வேண்டும் என்

றும் இன்ன விஷயமாய்ப் பேசக்கூடாதென்றும், எழுதக்கூடாதென்றும் அல்லது வேறெந்தக் காரியத்தையும் செய்யக் கூடாதென்றும் அவர்கள் உத்தரவு செய்யலாம். இந்த உத்தரவுகளுக்குக் கீழ்ப்பட்டு அவன் நடக்கும்படி செய்ய என்ன வேண்டுமானாலும் மாகாண கவரன்மெண்டார் செய்யலாம். இந்த உத்திரவுகளைப் பற்றி ஒரு கோர்ட்டிலும் தாவா செய்ய முடியாது. அப்பீலும் செய்ய முடியாது.

இத்தகைய சட்டங்களினால் கவர்ன்மெண்டுக்கு அதிக அதிகாரம் உண்டாய் விடுகிறது. அரசியல் ஜனங்களுக்குத் தீங்கு யுண்டுபண்ணக் கூடியதாகி விடும். இவ்வாறு அம்மசோதாக்களையுணர்ந்த தேசாபிமானிகள் சட்டங்களாகவிடாதபடி பெருத்தகிளர்ச்சி செய்தும் அப்பிரயத்தனங்கள் யாவும் யாதொரு பிரயோசனமுமின்றி ஆற்றிற் கரைத்த புளிபோ லாய்விட்டன. இந்தியாவில் இராஜீயநிலைமையையறியவும், சுதந்தரக் கிளர்ச்சியைத் தந்திரமாக அழிக்கவும், மாண்டேகு பிரபு இங்கிலாந்தை விட்டு இந்தியாவுக்கு விஜயமானார். அவரும் அவருடன் வந்த சகாக்களும் நாட்டிலுள்ள தலை நகரங்களுக்குச் சென்று பல கனவான்களைப் பார்த்தனர். மாண்டேகுவைப் பார்க்கப் பல சங்கத்தவர்கள் தங்கள் தங்கள் கோரிக்கைப்படி திட்டங்களை யேற்படுத்தி யனுப்பினார்கள். மாண்டேகுவும் அவைகளையேற்றுக்கொண்டு அந்தந்தப்பிரதிநிதிகளைப் பார்த்து அன்னவர் கூறிய வாக்குமூலங்களையும் காது கொடுத்துக் கேட்டார். ஒவ்வொரு பிரதிநிதிக்கும் தக்கபடி பதி லளித்து அனைவரையும்

வெகு சாதுரியமாகச் சந்தோஷப்படுத்தி விட்டுச் சென்றார்.

நிற்க, இந்தியா விஷயமாகச் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டி மந்திரியும் இராஜப் பிரதிநிதியும் ஒரு திட்டத்தைத் தயார்செய்து வெளியிட்டனர். அத்திட்டம் வெளி வந்ததும் இந்தியாவில் பல கட்சிகள் உண்டாயின. அத்திட்டம் மிகவும் திருப்தியற்றதென்று ஒரு கட்சியினர் கூறினர். ஏதோ சில குறைகளிருக்கின்றன; ஆனாலும் அது கொள்ளத் தக்கதே யென மற்றொரு கட்சியினர் கூறினர். இங்ஙனம் பல்வேறுகட்சிகள் இதுவிஷயமாகப் போராடி வருகையில் பம்பாயில் விசேஷ காங்கிரஸ் மகா சபை கூடிற்று. அச்சபைக்குச் சில மிதவாதிகள் வரவில்லை. மாண்டேகு—செம்ஸ்போர்டு திருத்தங்களை நிராகரிக்கவே இந்த மகா சபை கூட்டப்பட்டிருக்கிறதென்று தங்களுக்குத் தாங்களே நினைத்துக் கொண்டு நல்ல சமயத்தில் மிதவாதிகளிற் சிலர் மகாசபையில் சேராமல் ஒதுங்கி நின்றனர். மாண்டேகு திருத்தங்களை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று தேசத்தில் ஒரு கட்சியாரும் சொல்லக் காணவில்லை. திருத்தங்களைச் செய்தவர்களே அவை பூரணமானவை யென்று சொல்லவில்லை. ஆகவே மிதவாத கனவான்களிற் சிலர் ஒதுங்கி நின்றது அதிகார வர்க்கத்தினருக்குப் பலமாயிற் றென்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

பொதுவாக மாண்டேகு—செம்ஸ்போர்டு பிரேரணைகள் அதிருப்திகரமானவை, ஏமாற்றத்

தைத் தரக்கூடியவை என்று பம்பாய் காங்கிரஸ் தீர்மானித்தது. காங்கிரஸ்—லீக் திட்டங்களுக்கு மாறுபாடாகப் பலபிரேரணைகளை மாண்டேகு செய்திருக்கிறார் என்பதே தேசீயக் கட்சியினரின் அபிப்பிராயம். நிற்க, காலஞ்சென்ற லோக மான்ய * திலகருக்கு அறுபதாம் ஆண்டு விழா ஊரெங்கும் கொண்டாடி, அவருக்குப் புனா நகரில் அன்று 1-லட்சம் ரூபா காணிக்கையாகவும் ஜனங்கள்

* லோகமான்யர் புனா நகரில் பிறந்தவர் மகாராஷ்டர பிராமண குலத்தவர். வான சாஸ்திரத்திலும் சோதிட நூலிலும் கணிதத்திலும் சமஸ்கிருத பாஷையிலும் நல்ல தேர்ச்சியுள்ளவர். புனாநகரிலுள்ள பர்கூஸன்கலாசாலையை ஸ்தாபித்தவர்களுள் ஒருவர். 'மராடா' 'கேஸரி' பத்திரிகைகளுக்கு ஆசிரியரா யிருந்தவர். இயற்கையிலேயே நல்ல சுதந்தரத் தன்மை யுள்ளவர். வேதங்களின் 'துருவ நிலை' என்னும் நூலையும் 'ஓரியன்' என்னும் நூலையும் இயற்றியவர். ஆரியர்கள் ஒரு காலத்தில் வட துருவத்தில் இருந்தார்களென்பது இவர் சித்தாந்தம். இவர் பகவத்கீதைக்கு வெகு அழகாக கர்ம யோக சாஸ்திரப்படி வியாக்கியானஞ் செய்துள்ளார். சட்டத்தில் சிறந்த பாண்டித்திய முள்ளவர். வெகு தீரர். அஞ்சா நெஞ்சுடையவர். சிவாஜி மகாராஜாவின் அருங் குணங்களைக் கொண்டவர். அன்னியப் பிரபுத்துவத்தில் முற்றும் நம்பிக்கை யற்றவர். இவர் ஸ்வராஜ்யத்திற்காகப் பாடு படுகையில் அதிகார வர்க்கத்தினர் இவரை மூன்று முறை சிறைபுகச் செய்தார்கள். இவர் தம் வாணாளில் பாதி காலத்தை நாட்டிற்காகவும் சுதந்திரத்திற்காகவும் சிறையில் கழித்தவர். இத்தகைய அரும் பெருங் குணங்கள் ஒருங்கே அமையப்பெற்ற தேசாபிமானி இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகு ஏறினார்.

கொடுத்தனர். அதிகார வர்க்கத்தினருக்கு இது பொறுக்கவில்லை. உடனே புனா மாஜிஸ்டிரேட் திலகரை நன்னடைக்காக 40,000 ரூபா கட்டும்படி ஓர் உத்திரவு பிறப்பித்தார். இது பின்னர் அப்பீலில் அடிபட்டுப் போய்விட்டது. 1918-ம் வருடத்தில் லோகமான்யருக்கு இந்தியப்பாதுகாப்புச்சட்டப்படி உத்திரவுகள் சில பிறந்தன. பஞ்சாப் மாகாண கவர்னரும், டில்லி கமிஷனரும் திலகர் வரக் கூடாதென்ற உத்திரவு செய்தனர். பம்பாய் கவரன்மெண்டார் பேசக்கூடாதென்று உத்திரவு செய்தார்கள். என்றாலும் விசேஷ காங்கிரஸ்சபை நடவடிக்கை சமயத்தில் மட்டும் பேசலாமென்று தற்கால சாந்தியாக ஓர் உத்திரவையும் பம்பாய் கவரன்மெண்டார் பிறப்பித்தார்கள். *விபின சந்திர பாலருக்கும் சில உத்திரவுகள் பிறந்தன. தேசத்தில் நாலுபக்கங்களிலுமுள்ள அருந்தேசபக்தர்கள்மீது பாதுகாப்புச் சட்டப்படி அடக்குமுறைகளை யனுஷ்டித்தனர்.

---

* இவர் வங்க நாட்டைச் சேர்ந்தவர். நல்ல மேடைப் பிரசங்கி. வங்காளப் பிரிவினையில் வெகு பாடுபட்டவர். சென்னை இராஜதானியில் இராஜீய ஊக்கத்திற்குக் காரணமா யிருந்தவர் இவரே யாவர். வந்தேமாதர பத்திரிகைக்கும் இவர் பத்திரிகாசிரியராக விருந்தார். ஸ்ரீ அரவிந்தர்மீது இராஜ நிந்தனைக்குற்றம் ஏற்பட்ட காலத்தில் அரசாங்கத்தார் பாலரை சாட்சியங்கொடுக்க அழைக்கவே சாட்சியங் கொடுக்கமாட்டேன் என்று மறுத்து அதற்காக 6-மாத காலம் சிறை புகுந்தார். இராஜீய விஷயத்தில் நல்ல ஞானங் கொண்டவர்.

என்றாலும் ஜனங்கள் வர வர இராஜீய விஷயத்தில் அதிக ஊக்கங் கொள்ள வாரம்பித்தனர். மகாத்மா காந்தியும் ஊக்கம் பன்மடங்கதிகரிக்க இந்தியாவின் இலட்சியத்தைப் பற்றி ஒரு மகஜர் தயார் செய்தார். அம் மகா மகஜரை கிராமங்கள் தோறும் ஊழியர்கள் எடுத்துக்கொண்டு கிராம வாசிகளிட மிருந்து கையெழுத்து வாங்கினார்கள். இலட்சக் கணக்கான கையெழுத்துக்கள் ஆயின. இதனால் மூலை முடுக்குகளி லுள்ள கிராமவாசிகளும் நாட்டின் நிலைமையைப் பற்றி யறியலானார்கள். காங்கிரஸ் மீண்டும் டிசம்பர் மாதத்தில் டில்லியில் கூடிற்று. பண்டித மதன மோகன மாளவியா அக்கிராசனம் வகித்தார். இம் மகா சபைக்கு விவசாயிகள் (கிருஷிகர்) பலர் பிரதிநிதியாக வந்தார்கள். மிதவாத கனவான்களும் தனியாக சபை யொன்றைக் கூட்டினார்கள். முதற் சபை சுரேந்தரநாத பானர்ஜியின் அக்கிராசனத்தின் கீழ் பம்பாயில் நடந்தது. இரண்டாவது ஸர்.பி.எஸ். சிவசுவாமி ஐயர் அக்கிராசனத்தின் கீழ் 1918-ம் வருடம் டிசம்பர் மாதக் கடைசியில் கல்கத்தாவில் நடந்தது. டில்லிக் கூட்டத்திற்கு 20000 ஜனங்களும் கல்கத்தா கூட்டத்திற்கு 200 பேர்களும் விஜயமாயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. டில்லிமா நகரில் கூடின காங்கிரஸில் தேசியத் தலைவர்களுக்கும் அன்னிபெஸண்டு, கனம் சாஸ்திரியார் இவர்களுக்கும் சீர்திருத்த விஷயமாகப் பலத்த வாதங்கள் உண்டாயின. அன்னிபெஸண்ட் தேசீயக் கட்சியினின்றும் விலகும் வழியை டில்லி காங்கிரஸி லிரு

ந்தே தேடிக் கொண்டாள். டில்லி காங்கிரஸில் இந்தியா பொறுப்பாட்சி பெறவேண்டிய கால நிர்ணயமுஞ் செய்யப்பட்டது. அடுத்த வருடத்தில் காங்கிரஸ் சார்பாகச் சில தூதர்களை இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டியதென்பதாகவும் அக்காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்டது. இந்தியாவிற்கு சுயநிர்ணய விஷயமாக சர்வ தேச சமாதான் கான்பரன்ஸில் அரசாங்கத்தார்களினலேயே நியமிக்கப்பட்ட லார்ட் ஸின்ஹவும் பிகானீர் மகாராஜாவும் உண்மைப் பிரதிநிதிகளல்ல ரென்றும், அவர்களுக்குப் பதிலாக திலகர், காந்தி யிவர்களையே ஏற்படுத்த வேண்டுமென்றும் அக்காங்கிரஸ் தீர்மானஞ் செய்தது. இளவரசர் இந்தியாவிற்கு விஜயஞ் செய்யப் போவதாக விருந்த விஷயத்தில் வரவேற்புக்காக இந்தியா தற்பொழுது ஒன்றுஞ் செய்ய முடியாதென்கிற அபிப்பிராயத்துடன் காங்கிரஸ் மகா சபை வரவேற்பு விஷயமாகச் சும்மா விருந்து விட்டது. இது விஷயத்தில் பல தலைவர்கள் விஷய ஆலோசனை கமிட்டியில் பலமாக வாதித்தனர். நிற்க, ரௌலட் மசோதா விஷயமாக ஒரே அபிப்பிராயத்துடனே மிதவாதிகளும் தேசீயக் கட்சியினரும் கிளர்ச்சி செய்தார்கள். ரௌலட் மசோதா இராஜப் பிரதிநிதி சட்ட சபைக்கு வந்தது. பலமான வாதங்கள் ஏற்பட்டன. ஜனப் பிரதிநிதிகளனைவரும் கண்டித்தார்கள். அதிகாரிகளின் குறுகின புத்தியைப் பற்றித் தாக்கினர். கள். என்ன செய்தும் பிரயோசன மில்லை. கடைசியாக நடுநிசியில் ரௌலட் சட்டம் சட்டமா

யிற்று. இச்சட்டம் தீர்மானமானதும் சில தலைவர்கள் சட்ட சபையை விட்டு இராஜிநாமா செய்தனர். சிலர் நடவடிக்கை காலத்தே வெளி வந்தனர். ஜாதீய மரியாதையுள்ள எந்த இந்தியனும் இனி தன் மதிப்புடன் இருக்க முடியாதென்பதே அவர்களுடைய நோக்கம். ரௌலட் சட்டம் பொது ஜன அபிப்பிராயங்களுக்கு விரோதமாக்வும் இந்திய சட்ட சபை மெம்பர்களின் முறையீட்டிற்கு விரோதமாகவும் தீர்மானமாயிற்று. அதிகார வர்க்கத்தினர் வெற்றிபெற்றனர். தேசாபிமானர்கள் தியங்கினர். பெரியோர் மனங் கசிந்தனர்.

III

சத்யாக் கிரகம்

இங்ஙனம் ரௌலட்சட்டம் நிறைவேறாமலிருக்கச் செய்த பிரயத்தனங்கள் யாவும் பிரயோசனமற்றுப்போகவே, * மகாத்மா காந்தி சத்யாக்கிரக இயக்கத்தை ஏற்படுத்தினார். ரௌலட் சட்டமானது

* மகாத்மா காந்தி பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த குஜராஷ்டரத்தில் பிறந்தவர். இவர் பிறந்த ஊர் கத்தியவாடென்ப. இவர் தகப்பனாரும் பாட்டனாரும் திவான் வேலையி லிருந்தவர்கள். இவர் தாய் அன்பும் ஆற்றலு மிக்குள்ளவளா யிருந்தாள். இவர் சிறு பிராயத்திலேயே நன்றாகக் கல்வி கற்றுப் பிறகு பாரிஸ்டர் பரீட்சைக்குச் சீமைக்குப் போனார். ஆங்கு இவர் அப்பரீட்சையில் தேறி இந்தியாவிற்குத் திரும்பினார். அதுகாலை சில வியாபாரிகள் இவரை தட்சிண ஆப்பிரிக்காவிற்கு அனுப்பினார்கள். அதற்கிணங்கி தென்னாப்பிரிக்காவில் வக்கீலா யிருந்து திரண்ட திரவியத்தை சம்பாதித்தார். இந்தியர்களை மரியாதையின்றி அவ்வூர் வெள்ளையர்கள் நடத்தினதின்பேரில் இவர் முன்னின்று போராடினார். இரண்டு மூன்று முறை சிறை புகுந்து இந்தியர்களின் கஷ்டங்களை ஒருவாறு நீக்கினார். பிறகு இந்தியாவிற்குத் திரும்பி சிலகாலம் நாட்டின் நிலைமையைப் பற்றிக் கவனித்து வந்தார். சம்பரானி லுள்ள நீலத்தோட்டக்காரர்கள் இந்தியத் தொழிலாளர்களை வருத்தினதினால் அவர்களுக்காகஉழைத்து அன்னவர்களின் கஷ்டங்களை நீக்கினார். பிறகு கெய்ரா ஜில்லாவில் பஞ்சம் ஏற்பட்டு அதனால் கஷ்டப்பட் டிருந்த குடியானவர்களுக்காக உழைத்து வரி இல்லாமல் சில காலம் செய்தார். இங்ஙனம்

அநியாயமானதும் அதர்மமானதும் பிரஜைகளின் ஜீவாதாரமான உரிமைகளைப் பறிக்கக் கூடியதுமாக விருப்பதினாலும், சமூக வாழ்க்கையும் அரசாங்க நிலைமையும் சீர்கெடச் செய்ய வல்லதுமாக விருப்பதினாலும் அச்சட்டத்தையும் அதுபோன்ற வேறு சட்டங்களையும் பாராட்டாது அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்காமல் சத்தியம் ஒன்றையே பற்றி ஒருவருக்கும் துன்பமின்றி நடக்க வேண்டுமென்கிற ஓர் அறிக்கையை மகாத்மா காந்தி வெளியிட்டார். அவ்வறிக்கை வெளி வந்ததும் பனி மலை முதல் குமரி முனை வரையிலுமுள்ள யாவரும் அங்கீகரித்து நடக்கலானார்கள். 'சத்யாக் கிரக நாள்' என்று ஒருநாள் துக்க நாளாகக் கொண்டாடப்பட்டது. அந்நாளில் பலர் விரதம் அனுஷ்டித்தார்கள். பலர் உபவாச மிருந்தார்கள். கோயில்களில் பூசையும் அபிஷேகமும் விசேஷமாக நடந்தன. தேவதார்ச்சனைகள் நடந்

இவர் நம் தாய் நாட்டுக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்து வருகிறார். பண்டைக்காலத்திய ரிஷி போன்றவர். கலியுக அரிச்சந்திரன். ஏழைகளுக்குச் சிறந்த கற்பகம். அறத்திற் கிருப்பிடம். ஞானக் களஞ்சியம். இன்மொழியே நன்மொழியாகக் கொண்டவர். ஆன்ம சக்தியையே ஆபரணமாகப் பூண்டவர். இத்தகைய மகான் நம்பொருட்டு தேசத்தில் சதா உழைத்து வருகிறார். இவருடைய ஆக்ஞையினாலே தான் நாட்டில் இராஜீய ஊக்கம் பலப்பட்டு வருகிறது. இவர் தான் நமக்கு மார்க்க சகாயியாகவிருந்து வருகிறார். இம்மகான் சத்யாக்கிரக இயக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்.

தன. பஜனைகள் வீதி வலம் வந்தன. ஊர்வலங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடைகள் மூடப்பட்டன. பலர் தம் வேலைகளையும் நிறுத்தஞ் செய்தனர். கறுப்புக் கொடிகள் பறந்தன. மகா நாடுகள் பல கூட்டப்பட்டன. தலைவர்கள் பலர் பிரசங்கமாரி பொழிந்தனர். இவ்வளவு நிலைமையிலும் அதிகார வர்க்கத்தினர் மரப்பாவைபோ லிருந்தனர். ஜனங்களுக்கு சத்யாக் கிரக இயக்கத்தில் நம்பிக்கை யிருந்தது. ஆனல் சில மிதவாத கனவான்களுக்கும் மற்ற சில இராஜ தந்திரிகளுக்கும் நம்பிக்கை கிடையாது. சத்யாக் கிரகம் இந்தியா தேசத்து ஜனங்களுக்குப் புதிதன்று. ஏனெனில், இவர்களுக்கு மத விஷயமாக அதிக நம்பிக்கை யிருப்பதால் இவ்வியக்கத்தில் பக்தியும் உறுதியும் உண்டு. சத்யாக் கிரகமென்பது ஆன்ம சக்தியைப் பற்றினது. மிருக சக்திக்கு மாறுபாடானது. மிருகசக்தியானது இராஜ தாமச குணங்களுக்குக் கட்டுப்படுவதினல் அது அசுரத் தன்மையாகவே யிருக்கும். இதை துராக் கிரகம் என்பர். துராக்கிரகம் பெருந் தீங்குடையது. காம சங்கற்ப முடையது. மும்மலங்களைப் பற்றியது. பொச்சாப்பு, வெகுளி, தன்னலம் இவைகளை யுடையது. சத்யாக்கிரகமோ இயற்கையானது. சுதந்தர முள்ளது. சைதன்யமானது. ஜீவகாருண்யங் கொண்டது. சத்யம், தர்மம், சாந்தி சீலம் இவைகளை யுடையது. ஒருவன் சத்யாக் கிரகத்தை யனுஷ்டிப்பானே யானல், அவனுக்கு மனே சஞ்சல மிராது. சத்தியத்திற்கு முன்

அசத்யம் நிற்காதது போலும், தர்மத்திற்கு முன் அதர்மம் வியாபிக்காதது போலும், வெளிச்சத்திற்கு முன் இருள் தங்காதது போலும், சூரியனுக்கு முன் பனிப் படலங்கள் பரவாதது போலும், சத்யாக் கிரகத்திற்கு முன் துராக்கிரகம் வெற்றி யடையாது. துராக்கிரகத்தைக் கொள்ளும் ஒருவன் தற்பொழுது வெற்றி பெற்றதாக ஜயபேரிகை கொட்டினாலும், நாள் செல்லச் செல்ல துராக்கிரகம் ஒடுங்கி சத்யாக் கிரகமே குன்றின் மேலிட்ட விளக்குபோல் ஓங்கிப் பிரகாசிக்கும். துராக்கிரகி யொருவன் தனக் கேற்பட்ட அந்தஸ்தினாலும் அதிகாரத்தினாலும் அகங் காரங்கொண்டு சத்யாக்கிரகியொருவனைத் துன்புறுத்த லாம், வதைக்கலாம். ஆனால் முடிவில் சத்யாக்கிரகியே ஜயம் பெறுவான். சத்யாக் கிரகி யொருவனுக் கேற் பட்ட துன்பங்களை யவன் சந்தோஷத்துடனும் மனோ வுறுதி யுடனும் நிதானத்துடனும் ஏற்றுக் கொள்ளு கிறான். மானம் வரினும் அவமானம் வரினும் சுக துக்கங்கள் அடுத்தடுத்து நேரிடினும் சத்யாக் கிரகி யொருவன் வருந்தான். ஏனெனில், அவன் தன்னை யறிவான். தன்னைத்தா னறிவதே தத்துவம். இதை சத்யாக் கிரகி யறிந்தே சகல காரியங்களையும் தனக் கெனச் செய்யாது சாட்சாத் பகவானுக்காகச் செய் கிறேனென்று சித்த சுத்தியுடன் நிஷ்காமமாகச் சாத் வீகத் தியாகத்துடன் செய்கிறான். இவனுக்கு இம் மையிலும் மறுமையிலும் ஆகவேண்டிய தொன்று மில்லை. இவன் அரசாங்கத்திற்கேனும் சமூகத்திற் கேனும் சட்டங்களுக்கேனும் திட்டங்களுக்கேனும்

பயப்படான். துறவிக்கு வேந்தன் துரும்பு. சத்யாக்கிரகியொருவன் விரோதத்தை சிநேகத்தாலும், மிருக சக்தியை ஆன்ம சக்தியாலும், துன்பத்தைத் தானே வருந்துதலாகிய இன்பத்தாலும் கொல்கின்ருன். சத்யாக்கிரகத்தை யனுஷ்டிக்கு மொருவன் பிரம்ம சரியத்தை யனுஷ்டிக்க வேண்டும். இன்மொழியையே கூறவேண்டும். சுவை யடக்கம், டாம்பீகமற்ற வாழ்க்கை இவைகளையுங் கொள்ள வேண்டும். ஆகவே, சத்யாக்கிரகியொருவன் உலகம் வருந்துங் காரியத்தை யொருநாளுஞ் செய்யான். பண்டைக்காலத்திலும், இடைக்காலத்திலும்,இந்நாட்டிலும் மேனுட்டிலும் சிறந்த சத்யாக்கிரகிகள் இருந்தனர். இரணிய கசிபுவின் திருக்குமாரரான பிரக்லாதாழ்வான், பால் மணம் மாருச் சிறு பிராயத்தில் தந்தை செய்த சித்திரவதைக்கும் துன்பத்திற்கும் சற்றேனுஞ் சலியாது தாங்கித் தந்தையார் ஒடுங்கும் வரை வருந்திக் கடைசியில் யாவர்க்கும் கிட்டாத மனேவாக்குக் கெட்டாத சாட்சாத் பகவானைத் தரிசித்தார். மீராபாய், நசிகேதஸ் முதலானேரும் அனுஷ்டித்தார்கள். ஆப்பிரிக்கா தேசத்தில் முராகோ என்னும் ஒரு தேசமுண்டு. அதில் ஆரபி மகம்மதியர்களே அதிகம். பிரன்சுக்காரர்களுக்கு இத்தேசத்தைப் பற்றவேண்டுமென்னும் ஆசையுடன் ஆரபியர்களை யெதிர்க்கையில் ஆரபியர்கள் தங்களுடைய மதத்தின் பற்றுதலினுல் மரியாதையைக் காப்பாற்ற உடனே பிரன்சுவீரர்கள் வைத்திருந்த பீரங்கி வாயுள் புகுந்தனர். பிரன்சுபடை வீரர்கள் அதைக்

கண்ணுற்று ஆச்சரியங்கொண்டு ஆரபியர்கள் காண்பித்த சத்யாக் கிரகத்தை மெச்சி அவர்களைக் கொண்டாடி யுத்தம் புரிதலை யொழித்தனர். இம்மாதிரியான சம்பவங்கள் பல உலகில் நடைபெற்றுள்ளன. ஆகவே, மகாத்மா காந்தி இதையெல்லாம் அறிந்து சத்யாக் கிரக இயக்கத்தை அனுஷ்டிக்கும்படி ஆக்ஞை பிறப்பித்தார். இந்தியர்கள் சத்யாக்கிரகத்தை யனுஷ்டிக்கத் தயாராக வில்லை யென்றால் உலகில் மற்றெவரும் தயாரா யிருக்க மாட்டார்கள். இந்தியர்களுக்கு சதயாக் கிரக புத்தி இயற்கையாகவே யுள்ளது. நித்ய வாழ்க்கையே இவர்களுக்கு சத்யாக்கிரக தத்துவத்தைப் பற்றியது. உலகந்தோன்றிய நாள் முதற்கொண்டு இந்தியர்கள் துராக்கிரகத்தையே வெறுத்தவர்கள். நிற்க, மகாத்மா காந்தி சத்யாக் கிரகத்தை நாட்டினதும் ஆண் பெண் இருபாலாரும் அவர் வழி பற்றினர். அவர் வழி பற்றியவர்களிற் சில்லரை அதிகார வர்க்கத்தினர் துன்பப்படுத்தினர். சிறை புகும்படி சிலரை யனுப்பினர். சத்யாக் கிரகத்தைத் தாங்கின பத்திரிகைகளுக்கு ஜாமீன் தொகை கேட்கப்பட்டது. 1910-ம் வருடத்திய அச்சுக்கூடச் சட்டத்தினால் 1919-ம் வருடம் சற்றேறக் குறைய 391-பத்திரிகைகளின்மீது ஜாமீன் கேட்கப்பட்டது. அன்றுவரை பறி முதல் செய்த தொகை சுமார் $6\frac{1}{2}$ இலட்சம் என்பதாகத் தெரிய வருகிறது. வட இந்தியாவில் அநேகமாக எல்லா இந்தியப் பத்திரிகைகளின் மீதும் நடவடிக்கை நடத்தப்பட்டது. தமிழ் உலகிலும்

* சுதேசமித்திரன், தேசபக்தன், இந்துநேசன், ஹிந்து முதலிய பத்திரிகைகளின்மீது சத்யாக் கிரக இயக்கத்திற்காக ஜாமீன் கேட்கப்பட்டது. இங்ஙனம் நாளுக்கு நாள் காட்டுத் தீபோல் சத்யாக் கிரக இயக்கம் பரவி வந்தது. 1919-ம் வருடம் ஏப்ரல்மீ 6-ந் தேதி சத்யாக் கிரக விரதம் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்தவரும் கொண்டாடினார்கள். இந்துக்களும் முகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் ஆகிய அனைவரும் சகோதர பாவனை கொண்டு ஒருவரோடொருவர் அன்பு மிகுந்தவர்களா யிருந்தார்கள். இந்துக்களும் முகம்மதியர்களும் சண்டை யிடுகிறார்களென்று அதிகார வர்க்கத்தினர் கூறுவதை யொழித்து இருவர்களும் ஒன்று சேர்ந்து விட்டார்களெனக் கூறினார்கள். ஒன்றாக விருப்பதைக் காணச் சகியாதவர்களாய் இவ்விருவர்களும் ஒன்றுபட்டு இராஜாங்கத்துடன் போர்புரிய சதியாலோசனை செய்கிறார்களென்ற அபாண்டமான வார்த்தைகளைக் கூற அதிகாரிகள் முற்பட்டு விட்டார்கள். ஏறினால் குற்றம், இறங்கினால் குற்றமாக முடிந்தது. நிற்க, சத்யாக் கிரகத்தைச் சிறப்பாக நடத்த டில்லிமாநகரில் தலைவர்கள் எத்தனிக்கையில் அதிகார வர்க்கத்தினர் குறுக்கிட்டு ஜனங்களை பயமுறுத்தினார்கள். ஆனால் சந்யாசியான

* இப் பத்திரிகைகளின்மீது ஏற்பட்ட ஜாமீன் தொகையைச் சென்ற வருடத்தில் அரசாங்கத்தார் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

* ஸ்வாமி சிரத்தானந்தர் வெகு ஜாக்கிரதையுடனும் சாமர்த்தியத்துடனும் இந்துக்களையும் முஸ்லீம்களையும் அணைத்து ஆதரித்து வந்தார். என்றாலும் அதிகார வர்க்கத்தினர் சும்மா விருக்கவில்லை. அடக்கு முறைகளைச் செய்தனர். கடைகளை மூடக் கூடாதென பயமுறுத்தினர். இராணுவ வீரர்கள் ஜனங்களைத் துன்பப் படுத்தினார்கள். ஜனங்களும் கலகஞ் செய்ய வாரம்பித்தனர். என்றாலும் நல்ல வேளையாகத் தலைவர்களின் முயற்சியால் ஒருவாறு ஓய்ந்தது. டில்லிமாநகரில் ஜனங்கள் கலகம் விளைக்கிறார்க ளென்கிற செய்தி மகாத்மா காந்திக்கு எட்டினவுடனே, அவர் பம்பாயை விட்டு டில்லிக்குப் புறப்பட்டார். புறப்பட்ட மகாத்மாவை அதிகாரிகள் பாதுகாப்புச் சட்டப்படி சிறைப்படுத்தினர். மகாத்மா காந்தி சிறைபட்டார் எனக் கேள்வியுற்ற டில்லிமாநகர வாசிகள் ஆக்கிரகங் கொண்டு கலகம் விளைக்க வாரம்பித்தனர். மகாத்மா காந்தியை சும்மா விட்டிருந்தால் பஞ்சாப் படுவதை நடந்திராது. இதுவும் ஒரு நன்மைக்கேயாம் என்பது பொய்யா மொழி.

* ஸ்வாமி சிரத்தானந்தருக்கு பூர்வாசிரமத்தில் மகாத்மா முன்ஷிராம் என்ற பெயருண்டு. இவர் ஆரிய சமாஜக் கொள்கையிற் சேர்ந்தவர். ஹரித்துவாரத்தில் உள்ள குருகுல வித்யாசாலையை ஸ்தாபித்தவர். இதற்காகத் தம் திரவியத்தையும் தியாகஞ் செய்தவர். நல்ல மனவுறுதி கொண்டவர் தேசாபிமானம் பழுத்தவர். மகாத்மா காந்தியிடத்தில் அத்யந்த அன்பு கொண்டவர். இவரிடத்தில் வட இந்தியாவில் ஜனங்களுக்கு மிக்க மரியாதை யுண்டு.

IV

பஞ்சாப் படுவதை

பாஞ்சால நாட்டிற்குத் தலை நகரான லாகூரில் சத்யாக் கிரகநாள் இனிது நிறைவேறிற்று. எப்ரல்மீ 10-ந் தேதி வரை ஒரு கலவர மின்றியே யிருந்தது. 10-ந் தேதி யன்று, அமிர்தசரஸ் நகரவாசிகளான டாக்டர் சத்யபாலரையும் டாக்டர் ஸவுடீன் கிச்சுலு வையும் கண்காணாத இடத்திற்கு அதிகாரிகள் அழைத்துச் சென்றனர். அதே தினம் மகாத்மா காந்தியும் சிறைபட்டார். இவ்விரண்டு செய்திகளை யும் லாகூர் மகா ஜனங்கள் அறிந்து, லப்டினண்ட் கவர்னரிடம் முறையிடக் கும்பலாகச் சென்றனர். போகும் வழியில் ஜனங்கள் ஒருவருக்குந் தீங் கிழைக்கவில்லை. பல ஐரோப்பியர் வசிக்கும் இடங்களையுந் தாண்டிச் சென்றனர். கடைசியாக சில போலீஸார் அக்கூட்டத்தை மடக்கித் திருப்பினர். திரும்பின ஜனங்களின்மீது துப்பாக்கிப் பிரயோக மும் செய்தனர். ஜனங்கள் ஆத்திரப்பட்டனர். உடனே இராணுவ வீரர்கள் அழைக்கப்பட்டனர். ஜனங்கள் அமரிக்கையாய்த் திரும்பி வருகையில் இராணுவ சிப்பந்திகள் சிலரைச் சுட்டனர். என்று லும், ஜனங்களை வெகு அமரிக்கையாகத் தலைவர்கள் நடத்திக் கொண்டு போயினர். பேரஹரி தர்வா ஜாவுக்கு ஜனங்கள் போய்க்கொண் டிருப்பதை இரா ணுவ வீரர் அறிந்து சூழ்ந்து கொண்டனர்.

பண்டித ராம்போஜ்தத், லாலா ஹரிகிருஷ்ணலால், துன்னிசந்த் இவர்கள் சிறைபட்டனர். கடைகள் மூடியே யிருந்தன. ஏழைகளுக்குப் பொதுஜனங்கள் அன்னம் படைத்து வந்தனர். லாகூரில இராணுவச் சட்டம் பிறந்தது. கர்னல் ஜான்ஸன் ஜனங்களைப் பலவிதமாகத் துன்புறுத்தலானார். இராணுவ அதிகாரிகள் மூலை முடுக்குகளி லுள்ள சாது ஜனங்களை வருத்தினர். கலாசாலை மாணவர்களைக் கடும் வெய்யலில் 16-மைல் நித்தம் நடக்கும்படி இராணுவ வீரர்கள் உத்திரவிட்டனர். இங்ஙனம், லாகூரில் நடந்தது. ஆனால் அமிர்த ஸரஸில் என்ன நடந்த தென்பதைக் கவனிப்போம். அமிர்தஸரஸ் நகரில் மற்றஊர்களைப் போலவே ஜனங்கள சத்யாக்கிரக தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஏப்ரல்மீ 6-ந் தேதி யன்று நடக்கும் சத்யாக் கிரக தினத்தன்று மாலையில் நடக்கும் மகா நாட்டில் பேசக்கூடாதென்று பாதுகாப்புச் சட்டத்தின்படி சர்க்கார் சில குறித்த நபர்களுக்கு உத்திரவு பிறப்பித்தார்கள். அப்படியே அவர்களும் அவ்வுத்திரவுக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர். நிற்க, 9-ந் தேதி ஸ்ரீராம நவமி தினமாதலால் அமிர்த ஸரஸைச் சுற்றிலுமுள்ள பல கிராமங்களிலிருந்து அநேக கிராமவாசிகள் வந்தனர். ஹிந்துக்களின் உற்சவமாகிய இதற்கு மகம்மதீயத் தலைவர்களும் முகம்மதீயர்களும் இந்துக்களுடன் சேர்ந்து கலகமில்லாமல் வெகு ஒழுங்காய் நடத்திவைத்தனர். டாக்டர் கிச்சுலுவும், டாக்டர் சத்யபாலும் ஜனங்களை வெகு ஜாக்கிரதையுடன் நடத்தி வந்தனர். உற்

சவத்தில் தலைவர்களுக்கு 'ஜேய்' ஒலி பிறந்தது. முகம்மதியர்களும் இந்துக்களும் ஒன்றாய் வருவதைக் காண அதிகார வர்க்கத்தினர் மனங்கசிந்தனர். கிச்சுலு, சத்யபால் இவர்கள்மீது உத்தியோகஸ்தர்கள் ஆத்திரப்பட்டனர். உடனே மறுநாள் அவ்விருவரையும் அதிகாரிகள் சிறைபடுத்தினர். சிறைபட்ட இவர்களை மீட்கும் பொருட்டுப் பொது ஜனங்கள் ஒன்றாகக்கூடி டிப்டி கமிஷனரான மிஸ்டர் மைல்ஸ் இர்வின் என்பவரைக் காணச் சென்றனர். ஜனங்கள், உத்தியோகஸ்தர்கள் வசிக்கும் விடுதிக்குச் செல்கையில் ஒரு பாலம் தாண்டவேண்டும். பாலத்திற்குச் சமீபமாக ஜனங்கள் வருவதைக் கண்ட சில இராணுவ அதிகாரிகளும் ஸிவில் உத்தியோகஸ்தர்களும் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ய வாரம்பித்தனர். ஜனங்களிற் சிலர் காயமடைந்தனர். சிலர் கொல்லப்பட்டனர். உடனே ஜனங்கள் ஆத்திரங் கொண்டு திரும்பினர். திரும்புகையில் ஒவ்வொரு கடையையும் மூடும்படி ஆக்ஞையிட்டு வந்தனர். நாஷனல் பாங்கிக்கு வந்து அதை மூடச்சொல்லினர். பாங்கின் மானேஜர் ஜனங்கள் கொள்ளையடிக்க வருகிறார்களென்று எண்ணிக்கொண்டு கைத்துப்பாக்கி கொண்டு சுட்டார். உடனே ஜனங்களின் ஆத்திரம் அக்கினி மலையில் கர்ப்பூரபாணம் பிரயோகித்ததுபோலாயிற்று. பாங்கி கொளுத்தப்பட்டது. மிஸ்டர் ஸ்டுவர்ட்டும் மிஸ்டர் ஸ்காட்டும் உடனே கொல்லப்பட்டனர். டவுன்ஹால், சாட்டர்ட் பாங்கி, அலையின்ஸ் பாங்கி, கிறிஸ்துவ மாதா கோயில்,

கிறிஸ்துவ வேத சங்கம் ஆகிய இவைகள் தீக்கிரையா யின, மற்றும் மூன்று ஐரோப்பியரும் கொல்லப் பட்டனர். ஐரோப்பிய கிறிஸ்துவ சங்கத்தைச் சார்ந்த ஒருமாது சிறிதுதுன்புறுத்தப்பட்டாள். இத் தனை கொடுங் காரியங்களையும் சில துன்மார்க்கர்கள் வெறி பிடித்த தன்மையால் செய்தனர். இராணுவ அதிகாரிகள் சுட்டதினுல் மாண்டவர்கள் வெகு சிறப்பாக ஊர்வலத்துடன் பொது ஜனங்களால் தக னஞ் செயயப்பட்டனர். ஊரெங்கும் 'வந்தேமாதர' கோஷமும், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு 'ஜே' என்கிற ஆரவாரமும் கோடையிடிபோல் குமுறின. ஜனங்களால் துராக்கிரகமாகக் கொல்லப் பட்ட ஐரோப்பியர்களும் விசேஷ மரியாதையுடன் அதிகாரிகளினுல் அடக்கஞ்செய்யப்பட்டார்கள். 11, 12-ந் தேதிகளில் நடந்த விபரீதங்களி ஞல் ஜனங்கள் என்ன நேருமோவென்று ஏக் கங்கொண்டு இரவு கழித்து வந்தார்கள், ஏப்ரல் 13-ந் தேதி பொழுது புலர்ந்ததும் ஜனங்கள் இன்ன செய்வதென் றறியாமல் திகைத்து நின்றனர். நாட்டின் நிலைமை விஷயமாகவும் ஜனங்களின் வெறி பிடித்த தன்மை விஷயமாகவும் அறிந்து பரிகாரந் தேட 13-ந் தேதி யன்று மாலை 4-30 மணிக்கு ஜாலி யன்வாலா திடலில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டினர். லாலா கன்யாலால் பிரசங்கஞ் செய்வாரெனப் பறை சாற்றப்பட்டது. லாலா கன்யாலால் மிக்க மரியா தையுள்ள தனவந்தர். ஜனங்களுக்கு இவரிடத்தில் மிக்க கண்ணியமுண்டு. இங்ஙனம் பொதுக்கூட்ட

யென்று பறை சாற்றப்பட்டவுடனே, பீரங்கி வண்டியொன்று ஆயுதந் தரித்த போலீஸார்களைத் தாங்கிக் கொண்டு ஊரைச்சுற்றி வலம் வந்து, அமிர்த சரஸில் இனி பொதுக்கூட்டங் கூட்டக்கூடாதென்று 1908-ம் வருடத்தில் அராஜரிகக் கூட்டச் சட்டத்தின்படி தடுக்கப்பட்டதென்று பறை சாற்றிக்கொண்டே அதி வேகமாகச் சென்றது. ஜனங்களுக்குச் சரியாகப் புலப்படவில்லை. உத்திரவு யார் பிறப்பித்தார்கள், எம்மாதிரியான உத்திரவு என்பதை அறியக் கூடாமல் ஜனங்கள் தயங்கினர். இராணுவ அமுல் இன்னமும் ஏற்படவில்லை. நிற்க, ஹம்ஸராஜ் என்பானொருவன், ஜனங்களைச் சும்மா பயமுறுத்துவதற்காக அவ்வித உத்திரவு பிறப்பித்தார்கள் என்று கூறி மாலைக்கூட்டத்திற்கு எல்லோரும் வரவேண்டுமென்று தூண்டிக்கொண்டே சென்றான். பிறகு நடந்த விசாரணையில் இவன் அப்ரூவராகத் தோன்றி தண்டனையின்றி அதிகாரிகளினல் இரட்சிக்கப்பட்டான். அதிகாரிகளினுடைய தூண்டுதலினலேயே இவன் ஜனங்களைத் தூண்டினன் என்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர்கள். எப்படியிருந்தும் கடைசியாக சுமார் 4-மணிக்கே முப்பதினயிரம் ஜனங்கள் கூடினதும் மேலே ஆகாயவிமானமொன்று ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டு பறந்தது. ஜனங்கள் பயங்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகக் கலைய வாரம்பித்தனர். ஆனல் ஹம்ஸராஜ் ஜனங்களுக்கு ஆத்திர முண்டாகும்படி வசனங்களைப் பொழிந்து போகவொட்டாமல் தடுத்தார். பிறகு துர்க்கதாஸ்

என்பவர் பிரசங்கஞ் செய்தார். ஒரே நிச்சப்தமாக விருந்தது. சற்று நேரங் கழிந்தபிறகு, திடீரென்று ஜாலியன்வாலாத் திடலின் பின்பக்கத்தி லிருந்து ஸீக்கிய படைவீரர்களும், ஸிந்து படைவீரர்களும், குருக்கிய படைவீரர்களும் ஆறு ஆங்கில யுத்தவீரர்களும் ஒரு இயந்திர பீரங்கியுடன் அவ்வழியின் முகத்துவாரத்தில் இயமபடர்கள்போல் நின்றனர். வந்து நின்றதும் நில்லாததுமாக எச்சரிக்கை யின்றி துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். ஜனங்கள் தப்பியோட வழியில்லாமல் தியங்கினர். ஜாலியன்வாலா திடலுக்கு வரும் வழி மிகக் குறுகலாயிருந்ததினால் ஆயுதந் தரித்த வண்டி வரமுடியவில்லை. ஆயுதந் தரித்த வண்டி வந்திருந்தால் இப்பொழுது மாண்டவர்களைக் காட்டிலும் பன்மடங்கதிகமாகவே மாண்டிருப்பார்கள். தெய்வச் செயலால் சிலரே மாண்டனர். இராணுவ அமுலைத் தெரியாது நிரபராதிகளான ஜனங்கள் நிராயுதபாணிகளா யிருக்கையில் நீதியின்றியும் தர்மமின்றியும் ஜீவகாருண்ய மின்றியும் அவர்களை ஜனரல்டையரும் அவருடைய சகாக்களும் படுவதை செய்த அநியாயச்செயலுக்கு ஜர்மெனியர் பெல்ஜியத்தில் செய்த அட்டூழியங்கள் வெகு சாமானியமே. பிரிட்டிஷ் கௌரவத்தைக் காப்பாற்ற, வீரன் என்னும் பெயரைக் காப்பாற்ற, இராணுவ அதிகாரிகளின் உத்திரவை எவரும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று உலகத்தாருக்குக் காட்ட, பிரிட்டிஷ் இராணுவத்தின் பலம் இத்தன்மையது என்று ஜனங்களுக்கு உணர்த்த, குண்டுகள்

ஆகும் வரையிலும் சுட்டேன், சுட்டேன், சுட்டேன் என்று ஜனரல் டயர் ஹண்டர் கமிட்டி முன்பாக சாட்சியங் கூறியுள்ளார். ஜாலியன்வாலா திடலில் சர்க்கார் கணக்கின்படி 1650-குண்டுகள் பிரயோகிக்கப்பட்டன. 379-பேர் மரண மடைந்தனர். 1200-பேர் காய மடைந்தனர். ஆனால், காங்கிரஸ் கமிட்டியார் கணக்கின்படி இன்னும் அதிகமாகவே குறிக்கப்படுகின்றது. மாண்டவர்களைப் பார்க்க பந்துக்கள் வெளியே புறப்பட முடியாமல் இராணுவச் சட்டம் குறுக்கிட்டது. இரவு 8-மணிக்கு மேல் ஒருவரும் வீதிகளில் வரக்கூடாதென்கிற உத்திரவு பிறந்தது. காய மடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்வா ரொருவரு மில்லை. காயமடைந்தவர்களை சிகிச்சை செய்ய என்ன செய்தீர் என்று ஹண்டர் கமிட்டியார் ஜனரல் டயரைக் கேட்கையில், அவர் 'அது என்னுடைய வேலை யல்ல; அது என்னுடைய கடமையு மல்ல' என்று பதி லளித்திருக்கிறார். மரணதாகத்தால் தத்தளித்துக்கொண் டிருந்தவர்களுக்கு ஜலம் கொடுப்பா ரொருவரு மில்லை. இங்ஙனம் பால் வடிந்த பிள்ளைகளும், காளைப் பருவத்தைக் கொண்டிருந்தவர்களும், வயதால் முதுகு வளைந்து தண்டூன்றிய வயோதிகர்களுமாகப் பலர் எமபுரிக்குப் போயினர். அந்தோ! இந்தியர்களின் உயிர் கேவலம் புழுக்கள் போலதாயிற்றன்றோ? அமிர்தசரஸில் இருந்த அநேகர் நிஷ்காரணமாகக் கைதி செய்யப்பட்டார்கள். ஸ்திரீகளின் மானம் அழிந்தது. வெளியே புறப்படப் பயப்படும்

மாதர்களின் கற்பு அழிக்கப்பட்டது. அவர்கள் துன் புறுத்தப்பட்டார்கள். தலைவர்களும் கண்ணியம் வாய்ந்தவர்களும் வீதி நடுவே முக்கோணங் கட்டி யடிக்கப்பட்டார்கள். வக்கீல்மார்கள் ஜனங்களு டைய தரப்பில் நீதிமன்றத்தில் வாதிக்க இடங் கொடுக்கப்படவில்லை. ஸ்ரீமான் ஸி. ஆர். தாஸ். தடுக்கப்பட்டார். இவர் வங்காள தேசத்தைச் சார்ந்த வர். பெரிய பிரபல வக்கீல். ஜனங்கள் படும் அவஸ் தையைக் கேட்டு வாதிக்க முன்வந்த இவரை வரக் கூடாதென அதிகாரிகள் தடுத்தனர். ஸி. எப். ஆண்ட்ரூஸ் தடுக்கப் பட்டார். இவர் கிறிஸ்துவ பாதிரி. ஆனால் உண்மை கிறிஸ்துவர். இயேசுநாத ரின் உண்மைச் சீடர். ஜீவகாருண்யங் கொண்ட பரோபகாரி. சுதந்தர வடிவம். இவர் மகாகவி ரவீந்தர நாதரால் ஸ்தாபிக்கப்பட்ட சாந்தி நிகேத னம் என்னும் வித்யாலயத்தில் போதகாசிரியராக விருந்து வருகிறார். பஞ்சாபிலுள்ள வக்கீல்மார்கள் கோர்ட்டுகளுக்குப் போகக்கூடாதென்றும் தடுக்கப் பட்டார்கள். பலர் அகாரணமாகக் கைதி செய்யப் பட்டுக் கடைசியாக ஒருநாள் இரண்டுநாள் கழித்து விடுதலை செய்யப்பட்டனர். ஜனங்கள் வீதிகளில் மார்பினால் புழுக்கள் நெளிவதுபோலவும் நெளியும் படி டையர் உத்திரவு செய்தார். நல்ல கடும் வெய்யி லில் நிற்கும்படி உத்திரவு செய்தார். ஜனங்களைக் கூப்பிட்டு அவர்களை நிர்வாணமாக்கி உடம்பில் சுண் ணாம்பையும் கீலையும் அடித்து அனுப்பினார். ஐரோப்பியர்களைக் காணும் பொழுதெல்லாம் அடி

பணிந்து தலை குனிந்து சலாம்போடும்படி வற்புறுத்தினர். கல்விச் சாலையில் கல்வி கற்கும் மாணவர்களையும் சில போதகாசிரியர்களையும் பலவிதமாக வருத்திக் கைது செய்தார். வெய்யிலில் கால்நடையாகப் பல மைல்கள் நடக்கும்படி உத்திரவு செய்யப் பட்டது. புருஷர்களும் ஸ்திரீகளும் குடும்பங்களினின்று பிரிக்கப்பட்டனர். சரியான விசாரணையின்றி இராணுவ அதிபதிகளினால் பல தலைவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். சிலர் தீவாந்தர சிட்சை அடைந்தனர். சிலர் மரண தண்டனையைச் அடைந்தனர். இங்ஙனம் அமிர்த சரஸ் இரத்த சரஸாக ஆயிற்று, பிணமலை குவிந்தது. குடும்பங்கள் அழிந்தன. பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய் தந்தைமார்களின் துயரமும், கணவன்மார்களை யிழந்த கைம்பெண்களின் அழுகையும் எங்கும் நிரம்பின. திருநீங்கின நகர்போலாயிற்று. அமிர்தசரஸில் தான் இப்படியென்றால், இதர இடங்களில் என்ன இன்னும் சம்பவித்த தென்பதைக் கவனிப்போம். லாகூருக்கு 37-மைல் தூரத்திலுள்ள கஸ்ஸுரில் ஜனங்கள் தலைவிரிகோலமா யிருந்தனர். குஜரான்வாலாவிலும் அப்படியே. இங்கு இராணுவ அதிகாரி ஆகாய விமானத்தி லிருந்து வெடிகுண்டுப் பிரயோகஞ் செய்து ஜனங்களை மாய்த்தார். மரணமடைந்தவர்கள் சுமார் 20. காய மடைந்தவர்கள் சுமார் 50. ஆறவீஸபாத், ஷேக்குபாரா, வஸீரபாத், அகல்காரா, சங்களா, குஜராஷ்டிர ஜில்லா, லயல்புரி ஜில்லா முதலிய இடங்களிலும் ஜனங்களுக்கும் அதி

காரிகளுக்கும் பெருத்த கலகம் ஏற்பட்டது. ஜனங்கள் பல இடங்களில் தந்திக் கம்பிகளை அறுத்தனர். ரெயில் தண்டவாளங்களைப் பிடுங்கினர். சில ஸ்டேஷன்களின்கட்டடங்களும் நாசப்பட்டன. சில இடங்களில் பொதுக் கட்டடங்கள் தீக்கு இரையாயின. ஜனங்கள் சில இடத்தில் வீணை கலகங்களும் செய்தனர். பல இடங்களில் அதிகாரிகளும் இராணுவ உத்தியோகஸ்தர்களும் ஜீவகாருண்யமின்றிப் படுவதை புரிந்திருக்கிறார்கள். தவிர, பம்பாய்மாகாணத்தில் ஆமதாபாத்திலும் விபரீதங்கள்உண்டாயின. இங்ஙனம் ஆள்பவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் ஏற்பட்ட விபரீதம் இதுகாறும் எந்நாட்டிலு மிருந்ததில்லை, இனி இருக்கப் போவதுமில்லை, அரசாங்கமானது குடிகளின் பொருட்டு குடிகளுக்காக ஏற்பட்டதென்பதுபோய் அரசாங்கத்திற்காகக் குடிகள் ஏற்பட்டார்களென்ற முறையில் இந்தியாவில் அரசாட்சி நடத்தப்பட்டு வருகின்றது. ஜனங்களைப் பாதுகாப்பதும், அவர்களுடைய ஜீவாதாரமான உரிமைகளைப் போற்றுவதும், குடிகளை அபிவிர்த்தி யடையும்படி நானுபக்கங்களிலும் ஆதரிப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும். இதை யறியாமல், பிரிட்டிஷ் நீதியின் பெயரால், மன்னர் பெருமானுடைய ஆக்ஞையின் பெயரால், மாஜினி, கரிபாலிடி முதலானவர்களுக்கு அபயங் கொடுத்துக் காப்பாற்றின சுதந்தர நாடு என்னும் பெயரால், இந்தியாவிலுள்ள அதிகாரிகள் மானிட தர்மத்திற்கு விரோதமாக ராட்சசத் தன்மையான காரியங்களைச் செய்து வருகின்றனர்.

மிதமிஞ்சின அதிகாரங்களினாலும், சட்ட திட்டங்களினாலும், அடக்கு முறைகளினாலும், பிரிவினைகளினாலும், பயமுறுத்துதலினாலும் ஒரு நாட்டாரை அரசாள்வதென்பது எப்பொழுதும் ஆகாத காரியம். குடிகளின் அன்பினாலும், ஆதரவினாலும், ஸ்நேக வழியினாலும், ஒற்றுணர்ச்சியினாலுமே அரசாங்கம் நடைபெறும் என்பதை இந்நாட்டவர்களும் மேனாட்டவர்களும் அறிந்திருக்க, இந்தியா தேசத்து அதிகார வர்க்கத்தினர்கள் அறியாம லிருப்பது அவர்கள் செய்த பாவமோ அல்லது இந்நாட்டினரின் ஊழ்வினையோ? பஞ்சாப் படுவதையைக் கேட்கக் கேட்க மனிதர்களின் மனந் தடுமாறுகின்றது. இங்கிலாந்தில் அநேகர் பிரிட்டிஷ் நீதி பரிபாலனத்தைக் கண்டித்தனர். அமெரிக்காவி லுள்ள சில இராஜ தந்திரிகள் "இந்தியாவில் கெய்ஸர் முறை" யென்று பத்திரிகையில் விளம்பரஞ்செய்தனர். இந்தியாவில் பலர் நடுங்கினர். மகா கவி ரவீந்திரர் தமக்கு அரசாங்கத்தார் கொடுத்த 'ஸர்' பட்டத்தை வீசி எறிந்தார். என்றாலும் அதிகாரி வர்க்கத்தினர்களின் அட்டூழியங்கள்மட்டும் அடங்கவில்லை. வைஸிராய் சட்ட சபையில் மதனமோஹன் மாளவியா சற்றேறக் குறைய 90 கேள்விகளைப் பஞ்சாப் படுவதை விஷயமாகக் கேட்டார். மாளவியா காஸ்மீர தேசத்து பிராமணர் குலத் துதித்தவர். இவர் சிறந்த தேசாபிமானி. காங்கிரஸ் கட்சியைத் தாங்கினவர். தீவிர கட்சியினருக்குச் சற்றே பின்னடைந்தவராயினும் தேசாபிமானத்திலும் பொதுஜன ஊழியத்திலும்

தேசியக் கட்சியினர்கள்கூட இவருக்குமுன் நிற்கார்கள். கல்வித் துறையில் இவருக்கு அதிகப் பற்று. இத்தகைய புருஷன் பஞ்சாப் மாகாணத்தில் இரவும் பகலும் தங்கி ஜனங்களுடைய கஷ்டத்தை நீக்கிருர். நிற்க, பஞ்சாப் விஷயமாக இந்தியாவில் இருள் மூடிற்று. இருளைக் கண்டு மருளுவாருமுண்டு; அவ்விருளை நீக்க வழி தேடுவாருமுண்டு.

V

பழிக்குப் பழி

1918-ம் வருடத்தில் டில்லிமாநகரில் நடந்த காங்கிரஸ் மகா சபையில் காங்கிரஸ் தூதர்களிற் சிலரை இங்கிலாந்திற்கு அனுப்பி இந்தியா விஷயத்தை நன்கு எடுத்துக்கூற வேண்டுமென்று தீர்மானித்ததை நேயர்கள் அறிவார்கள். 1919-ம் வருடத்தில் சிலர் தூதர்களாகச் சென்றனர். காலஞ்சென்ற லோகமான்யர் ஏற்கனவே இங்கிலாந்தில் அரிய பெரிய காரியங்களைச் செய்து வந்திருந்தார். பஞ்சாப் படுவதையுண்டானதும் இங்கிலாந்தில் பெருத்த கிளர்ச்சி யுண்டாக்கி ஒரு கமிட்டியை விசாரணைக்கு அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தினமையால் மாண்டேகு ஒரு கமிட்டியை யேற்படுத்தி அக் கமிட்டிக்கு லார்ட் ஹண்டரைத் தலைவராக நியமித்து அனுப்பினார். அக் கமிட்டியில் லார்ட் ஹண்டர், கனம் ரைஸ், ஸர் ஜார்ஜ் பாரோ, ஜட்ஜி ரான்கின், தாமஸ் ஸ்மித், பண்டித ஜகத் நாராயண், ஸர் சிம்மன்லால் ஹரிலால் சிதல்வாட், சுல்தான் ஆமித்கான் ஆகிய இவர்கள் அங்கத்தினர்கள். மூன்று இந்தியர்களும் ஐந்து ஐரோப்பியருமாகச் சேர்ந்த இக்கமிட்டியார் கடைசியாக 1919-ம் வருடம் அக்டோபர்மீ 29-ந் தேதி யன்று எவ்விதமாக விசாரணை நடத்துவதென்பதை முதல் முதல் ஆலோசித்தார்கள். பஞ்சாப் படுவதை சம்பவத்தில் தண்

டனை யடைந்தவர்களை ஹண்டர் கமிட்டியார் விசாரணை செய்யுங் காலத்தில் தக்க ஜாமீன்பேரில் தற்சமயம் விடுதலை செய்ய வேண்டுமென்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் லார்ட் ஹண்டருக்குத் தெரிவித்து மன்றுடியும் லார்ட் ஹண்டர் நிராகரித்து விட்டார். காங்கிரஸ் கமிட்டியார் ஹண்டர் விசாரணைக்கு முன் வராமல் தாங்களே ஒரு கமிட்டியை நியமித்து சாட்சிகளை விசாரித்து விசாரணை நடத்தி வந்தார்கள். காங்கிரஸ் கமிட்டிக்கு மகாத்மா காந்தி, ஸீ, ஆர். தாஸ், டியாப்ஜீ, ஜயகர், மோதிலால் நேரு இவர்கள் அங்கத்தினர்களாக விருந்தனர். நிற்க, 1919-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் அமிர்தசரஸில் கூடின காங்கிரஸ் மகா சபையில் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி தண்டனை யடைந்த பலர் இராஜ விளம்பரத்தை யொட்டி விடுதலை யடைந்தனர். அலி சகோதரர்கள், பஞ்சாப் தலைவர்கள் பலர், சியாம சுந்தர சக்ரவர்த்தி முதலானோர் காங்கிரஸுக்கு விஜயமாயினர். டிசம்பர் மாதம் 30-ந் தேதி லார்ட் ஹண்டருக்கு மாளவியா பின் வருமாறு தந்தி யடித்தார். "இராஜ விளம்பரத்தினுல் பல தலைவர்கள் விடுதலை பெற்றதினுல் தற்பொழுது உங்கள் கமிட்டி முன்பாக விசாரணைக்கு வந்து சாட்சியங் கூறத் தயாராயிருக்கின்றனர். இன்னும் சர்க்கார் தரப்பில் சாட்சியங் கூறினவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய சமயம் நேரிட்டால் அதற்கும் வழி தேடவேண்டும்." இவ்வாறு அடித்த தந்திக்கு லார்ட் ஹண்டர் முடியாதென்று பதில் தந்தி யடித்து விட்டார். லார்ட்

ஹண்டர் கமிட்டியி லிருந்த ஐரோப்பிய அங்கத்தி னர்கள் தனியாக ஒரு ரிபோர்ட்டையும் இந்திய அங் கத்தினர்கள் தனியே ஒரு ரிபோர்ட்டையும் வெளி யிட்டார்கள். ஐரோப்பிய அங்கத்தினர்களின் ரிபோர்ட்டுக்கு மெஜாரிடி ரிபோர்ட் என்றும் மற் றென்றுக்கு மைனரிடி ரிபோர்ட் என்றும் பெயர். மெஜாரிடி ரிபோர்ட்டில், ஏற்கனவே கலகம் செய்வ தற்குத் தக்க முஸ்திப்புடன் ஜனங்கள் இருந்தார்க ளென்றும் அதைத் தடுப்பதற்கே இராணுவ அமுல் அத்யாவசியமா யிருந்ததென்றும் தெரிவிக்கிறது. மைனரிடி ரிபோர்ட்டோ, ஏற்பட்ட அமளி கலகத் திற்கல்ல வென்றும் இராணுவ அதிகாரிக ளின்றியும் இராணுவ அமுல் இன்றியும் சாதாரண உத்தியோ கஸ்தர்களைக் கொண்டே அமளியை யடக்கி யிருக் கலா மென்றும் கூறுகிறது. டில்லிக்குப் போவதா யிருந்த காந்தியைத் தடுத்திராம லிருந்தால் இன்னும் விபரீதமான கலகம் ஏற்பட்டிருக்குமென்றும் அதைத் தடுக்கவே தான் அரசாங்கத்தார் முன் எச் சரிக்கையுடன் காந்தியைக் கைதி செய்து தடுத்தார்க ளென்றும் மெஜாரிடி ரிபோர்ட் எழுதுகிறது. ஆனல் மைனரிடி ரிபோர்டோ காந்தியைத் தடுத்திராம லிருந்திருந்தால், அவருடைய வார்த்தைகளினல் ஜனங்கள் கட்டுண்டு அமரிக்கையா யிருந்திருப்பார்க ளென்று தெரிவிக்கிறது. சர்க்கார், கலகங்களை யடக் கக் கொண்டு வந்த முறைகள் சரியே, இராணுவ சகாயம் ஆவசியமாயிருந்தது, கலகம் விளைத்தவர் களே படு வதைக்குக் காரணம், என்று மெஜாரிடி

ரிபோர்ட் கூறுகிறது. மைனாரிடி ரிபோர்ட் இராணுவ சகாயத்திற்கு ஆவசியமில்லையென்றும், அதிகாரிகளின் அடக்குமுறைகளே கலகத்தை அதிகப்படுத்திற்றென்றும், அபிப்பிராயப்படுகிறது. ஜாலியன்வாலா படுவதை விஷயமாக ஜனரல் டையர் தனக்குரிய கடமையைத் தைரியமாகச் செய்தார். ஆனால் அவர் சற்றே பிசகாக நினைத்துச் செய்துவிட்டார் என்று மெஜாரிடி ரிபோர்ட் கூறுகிறது. மைனாரிடி ரிபோர்ட்டானது அமிர்தசரஸில் மீட்டிங்கு கூடக்கூடாதென்று அதிகாரிகள் சரியானபடி விளம்பரஞ் செய்யவில்லையென்றும், ஜனரல் டையர் ஆயுத பீரங்கி உள்ளே வந்திருந்தால் அவசியம் பிரயோகித்திருப்பாரென்றும், ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்யாமலே ஆரம்பத்திலேயே துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தாரென்றும், ஜனங்கள் கலைந்து சிதறிக்கொண்டு ஓடுங் காலத்திலும் குண்டுகள் ஆகும் வரையிலும் சுட்டது மிக்க பாதகமான காரியமென்றும், அவர் அனுஷ்டித்த முறை ஜீவகாருண்யமற்ற செயலும் பிரிட்டிஷ் நீதிக்கு விரோதமான காரியமுமென்றும், இந்தியா படையினாலேயே ஆளப்படுமென்று சித்தாந்தப்படுத்தினாரென்றும், பஞ்சாப் கவரன்மெண்டின் பிழையான அரசாட்சி முறையே இதற்குக் காரணமென்றும், பல மாதிரியாகத் தெரிவித்திருக்கிறது. ஜாலியன்வாலா திடலில் நடந்த சம்பவத்தை ஆதரித்த ஸர் மைகல் ஓட்வியரையும் மைனாரிடி ரிபோர்ட் கண்டித்திருக்கிறது. இதன்றியும், கர்னல் ஓ பிரயன், பாஸ்வொர்த் ஸ்மித்,

ஜெகப் முதலானவர்களின் நடத்தையையும் கண்டித்திருக்கிறது. லார்ட் ஹண்டர் ரிபோர்ட்டை ஆராய்ச்சி செய்து இந்தியா கவரன்மெண்டார் ஒரு அறிக்கையை மாண்டேகுவிற்கு 1920-ம் வருடம் மேமீ 3-ந் தேதி அனுப்பினார்கள். அதில் சர்க்கார் தரப்பிலுள்ள நிர்வாக அங்கத்தினரான மிஸ்டர் ஷாபி ஒருவரே தனியாக ரிபோர்ட் ஒன்று தயாரித்து அனுப்பினார். ஷாபி அவர்கள் மைனாரிடி ரிபோர்ட்டின் அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார். நிற்க, காங்கிரஸ் கமிட்டியார் விசாரித்த ரிபோர்ட் ஹண்டர் கமிட்டி ரிபோர்ட்டுக்கு முன்னமே வெளி வந்தது. காங்கிரஸ் கமிட்டியார் கூறுவது யாதெனில்:—பஞ்சாப் ஜனங்களை அம் மாகாணத் தலைமை அதிகாரியான ஸர். மைகல் ஓட்வியர் ஐரோப்பிய யுத்தத்தின் பொருட்டு யுத்த நிதிக்காக நிலச் சுவான்தார்களையும் வியாபாரிகளையும் கிராமத்திலுள்ள பெரிய குடித்தனக்காரர்களையும் வருத்திப் பயமுறுத்தினார். ஆள் படைக்காக வேண்டி துராக்கிரமமாகக் குடும்பங்களிலுள்ள ஆண்மக்களை அழைத்துச் சென்றார். சாமானிய உத்தியோகஸ்தர்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்து ஜனங்களை யுத்தத்திற்கு உதவி செய்யும்படி ஆக்ஞை யிட்டதால் அவர்கள் மிதமிஞ்சின வழியில் நடந்து ஜனங்களைப் பிழிந்தார்கள். இராஜீய வழியில் உழைப்பவர்களையும், பொது ஜனங்களுக்காகப் பாடுபடுபவர்களையும் அடக்கு முறைச் சட்டங்களினால் சிறைபுகச் செய்தார். பத்திரிகைகளுக்கு விபரீதமான ஜாமீன் தொகை கேட்டுப் பறிமுதல்

செய்தார். கட்சிப் பிரதி கட்சி யேற்படுத்தி ஒரு சமூகத்தாரின்மீது மற்றொரு சமூகத்தாரை ஏவினார். மற்ற மாகாணங்களி லிருந்து வரும் தலைவர்களை பஞ்சாபில் நுழையாதபடி தடுத்தார். பாலர், திலகர், காந்தி முதலானோர் வராதபடி தடுத்தார். ஹிந்து, அமிர்தபஜார் பத்திரிகை, பம்பாய் கிரானிகல், இண்டிபெண்டண்ட்முதலிய பத்திரிகைகள்வராதபடி-யும் தடுத்தார். இங்ஙனம் மிருக சக்தியினாலும், பயத்தினாலும், அடக்குமுறைகளினாலும் ஸர்மைகல் ஒட்வியர் பஞ்சாப் மாகாண ஜனங்களைப் பரிபாலித்து வந்தார். நிற்க, பிரிட்டிஷ் இராணுவபலத்தைக் காண்பிப்பதற்கே இராணுவ அமுலை யேற்படுத்தி ராட்சத் தன்மையும் அநாகரிகமானதுமான பல கொடிய உத்திரவுகளை சாது ஜனங்களின்மீது சுமத்தினார். ஜாலியன்வாலா திடலில் வேண்டுமென்றே ஜனங்களைக் கொலை செய்ய ஜனரல் டயர் முன் யோசனை காட்டியே செய்திருக்கிறார். தலைவர்களைக் கண்காணாத இடத்தில் சிறைவைத்தும், மகாத்மா காந்தியை கைதி செய்தும், பல்வேறு கொடிய காரியங்களைச் செய்தும் வந்ததினால் ஜனங்கள் ஆத்திரப்பட்டுக் கலகஞ் செய்தார்கள். அமிர்தசரஸிலும் இன்னுஞ் சில இடங்களிலும் பொதுஜனங்கள் ஐரோப்பியர்களைக் கொன்றதையும், கட்டடங்களைக் கொளுத்தினதையும், தந்திக் கம்பி அறுத்தல் முதலிய செயல்களையும் காங்கிரஸ் கமிட்டியானது கண்டித்திருக்கிறது. மிஸ் ஷெர்உட் விஷயத்தில் ஜனங்கள் நடந்ததையும் கண்டித்திருக்கிறது. இங்ங

னம் காங்கிரஸ் கமிட்டியின் ரிபோர்ட்டும் ஹண்டர் கமிட்டியின் ரிபோர்ட்டும் உலகத்திற்கு முன் தோன்றின. இதனிடையே பஞ்சாபில் ஜனங்களைத் துன்பப்படுத்தின அதிகாரிகளின்மீது பின்னர் ஏதாகிலும் வியாச்சியங்கள் தொடரக்கூடுமென்று முற்கூட்டியே யோசித்து வைஸிராய் சட்ட சபையில் தொடரா தொழிச் சட்டம் என்கிற நஷ்ட ஈடு சட்டமொன்றை ஏற்படுத்தினார்கள். அதிகாரிகளை ஆதரித்து ஜனங்களை நிராகரித்து ஒரு சார்பாகவே இந்திய கவரன்மெண்டார் ஆட்சி புரிந்திருக்கிறார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இங்ஙனம், ஹண்டர் கமிட்டியின் தீர்மானம் ஒரு சார்பாக விருக்கிறதென்பதைத் தேசத் தலைவர்கள் அறிந்து வைஸிராயை யுடனே திருப்பி அழைப்பிக்கவேண்டுமென்றும், ஸர் மைகல் ஒட்வியரையும் ஜனரல் டையர் முதலானவர்களை நன்கு சிட்சிக்க வேண்டுமென்றும் நாடெங்கும் மகாநாடு கூட்டித் தீர்மானஞ் செய்தார்கள். பார்லிமெண்டில் பஞ்சாப் விஷயமாகவும் ஹண்டர் கமிட்டி விஷயமாகவும் வாதங்கள் ஏற்பட்டன. பார்லிமெண்டார் பஞ்சாப் படுவதைக்குக் காரணமா யிருந்தவர்களைத் தண்டனைக்குட்படுத்துவரென்று இந்தியா எதிர் பார்த்திருந்தும், செய்யாமல் டையருக்கு சாதகமாகவும் ஒட்வியருக்குச் சாதகமாகவும் தீர்ப்பு செய்ததுமன்றி, டையர் இந்தியாவை குழப்பத்தினின்றும் காப்பாற்றினாரென்று கூறி அவருக்குப் பணமுடிப்பு ஒரு பக்கமும், வைரக் கற்களிழைத்த பட்டாக்கத்தி பரிசு மற்றொரு பக்கமுமாகக் கொடுத்தார்கள். பஞ

சாப் விஷயத்தில் இந்தியாவுக்கு நியாயங் கிடைக்க வில்லையென்றும், நியாயங் கிடைக்கும் வரையில் ஜாதிய மரியாதையை உல்லங்கனம் செய்த அரசாங்கத்தாருடன் ஒற்றுழைக்க முடியாதென்றும் மகாத்மா காந்தி உதவி மறுத்தல் இயக்கத்தைக் கொண்டு வந்தார். காங்கிரஸ் மகா சபையும் இப்பொழுது தீர்மானஞ் செய்துவிட்டது. நிற்க, ஐரோப்பா யுத்தம் ஒருவாறு முடிவு பெற்றது. நேச தேசக் கட்சியினர் வெற்றி பெற்றனர். சிறிய இராஜ்யங்களுக்கெல்லாம் சுய நிர்ணயங் கொடுக்கப் பெற்றது. இந்தியாவுக்கும் சுய நிர்ணயங் கொடுக்கப்படுமென்பது கானல் நீராயிற்று. சமாதான கான்பரன்ஸ் கூடிற்று. ஒவ்வொரு தேசத்தின் பிரதிநிதியும் வந்தார்கள். இந்தியாவிற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சாதகமாகயிருக்க லார்ட் ஸிம்மாவையும் பிகானிர் மகாராஜாவையும் பிரதிநிதிகளாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தாமேநியமித்தார்கள். தோல்வியடைந்த அரசாங்க விஷயமாகப் பல வாதங்கள் ஏற்பட்டன. ஜெர்மெனி, ஆஸ்திரியா, துருக்கி விஷயங்கள் வந்தன.

சுய நிர்ணய விஷயமாக ஒரு அரசாங்கத்தார் மற்றொரு அரசாங்கத்தாருக்குக் கொடுப்பதென்பது இயற்கைக்கு மாறுபாடாகவே யிருக்கிறது. சுய நிர்ணயமென்பது ஸ்வபாவமாகவே ஒருவனுக்கு யேற்படும் திட்டம். இதில் மற்றவர் எங்ஙனம் பிரவேசிக்கக் கூடும். ஒருவனுக்கு யேற்பட்ட சுய நிர்ணயத்தை மற்றொருவன் நிச்சயிப்பது ஒருவனு

டைய பசிக்கு மற்றொருவன் அன்னம் புசிப்பது போலிருக்கிறது. நிற்க, சமாதான உடன்படிக்கை காண்பரன்ஸில், கெய்ஸரைத் தண்டிக்க வேண்டு மென்று அபிப்பிராயப்பட்டார்கள். ஜர்மெனி நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச் செய்தார்கள். முறையே ஆஸ்திரியாவுக்கும் செய்தார்கள். துருக்கி விஷயமாகச் செய்த ஏற்பாட்டை நாம் கவனித்தல் வேண்டும். ஏனெனில், இந்தியாவிலுள்ள ஏழுகோடி முகம்மதியர்களுடைய விஷயமாக யேற்பட்டதால் இந்துக்களும் மற்ற வர்க்கத்தாரும் அறிய வேண்டியது துண்டு. அதைக் கவனிப்போம்.

VI

கலீபாவும்—கிலாபத்தும்

1914-ம் வருடத்தில் ஐரோப்பா யுத்தம் தொடங்கிற்று. ஜர்மெனி நேச தேசக் கட்சியினர்களுக்கு விரோதமாக சண்டையிட்டது. ஜர்மெனி ஆஸ்திரியாவுக்குச் சகாயமாக, துருக்கியும் நேச தேசக் கட்சியினர்களுடன் சண்டைக்கு முன் வந்தது. ஜர்மெனியுடன் துருக்கி சகாயமாகப் போர் புரிவானேன் என்ற கேள்வி பிறந்தது. ஆனால், சிலர் துருக்கியானது பால்கன் யுத்தத்தில் இறங்கினபொழுது பிரிட்டிஷார் சகாயஞ் செய்யாமல் அலட்சியமா யிருந்துவிட்டதினாலும், அது காலை ஜெர்மெனி துருக்கிக்கு விசேஷ உதவி புரிந்ததாலும், 'காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது' என்றபடி துருக்கியானது ஜர்மெனிக்கு இச்சமயத்தில் கைம்மாறுபுரிய முன் வந்ததென்று கூறுகின்றனர். இது ஒருபுறமிருக்க, இப் பெரு நெருப்பில் அகப்பட்டுக்கொள்ள அஞ்சி, யார் பக்கத்திலும் சேராமல் நெடுநாளாக விலகிநின்ற துருக்கியோ, மெஸபொடோமியா, பாரசீக நாடுகளின் வழியே நேச தேசத் துருப்புகளும் வடக்கி லிருந்து ருஷ்யத் துருப்புகளும் வர ஆயத்தமாயிருப்பதையும், நேச தேசங்களுடன் சேர்ந்த

பெல்ஜியம், ஸெர்வியா, மாண்டிநீக்ரோ, ருமேனியா முதலிய சிறிய நாடுகள் நிர்மூலமாகப் போனதையு முணர்ந்து, இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கும் சமயத்தில் ஜெர்மனி பக்கம்சார நேர்ந்தது. 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' துருக்கி விஷயத்தில் இந்தியாவிலுள்ள முஸ்லீம் தலைவர்களுக்கு அதிகக்கவலையும் சஞ்சலமும் ஏற்பட்டன. டில்லியிலிருந்து டாக்டர் அன்ஸாரியும், மௌலானா முகம்மத்அலியும் சேர்ந்து பிரிட்டிஷ் மந்திரி வழியாக துருக்கிக்குத் தந்தி யடித்து யுத்தத்தில் தலையிட வேண்டாமென்று மன்றாடினார்கள். ஜின்னா, ஹேக், ராஜா மம்மதாபாத் முதலானோரும் தந்தி யடித்தார்கள். என்றாலும், துருக்கி யுத்தத்தில் இறங்கி விட்டது. இந்தியாவில் அப்பொழுது வைஸிராயா யிருந்த லார்ட் ஹார்டின்ஜ் இந்தியாவி லுள்ள ஏழு கோடி முஸல்மான்களின் கவலையை யொழிக்க ஓர் அறிக்கையை வெளியிட்டார். 'துருக்கி அனாவசியமாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் போர்புரிய வந்தாலும், துருக்கி விஷயத்தில் பிரிட்டிஷாருக்கு எள்ளளவும் மனத்தாங்கல் கிடையாது. முஸ்லீம்கள் இதை மதச் சண்டையென்று கொண்டு வீண் சஞ்சலங் கொள்ள வேண்டாம். முஸ்லீம்களைக் காப்பாற்றுவதில் பிரிட்டிஷாருக்குச் சிறந்த பொறுப்பு உண்டு என்று அவ்வறிக்கை கூறியது. துருக்கி சண்டைக்கு வந்தும் இந்திய முஸ்லீம்கள் அதைக் கவனியாமல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குத் துணையாக மன்னர் பெருமா

னுக்கு வெற்றி யுண்டாகும்படி கோடிக் கணக்காக யுத்தநிதிக்குப் பண உதவி புரிந்தனர்; நல்ல தேகக் கட்டு வாய்ந்த மல்லர்கள் போன்றவர்களை ஆள்படைக்கு அனுப்பினர். பிளாண்டர்ஸ், கலிபோலி, மெஸபோடேமியா முதலிய யுத்தரங்கங்களில் துருக்கியருக்கு விரோதமாக நேசக் கட்சியினருக்குதவியாக நின்று உடல் பொருள் ஆவி மூன்றையும் முஸ்லீம்கள் அர்ப்பணஞ் செய்தார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்பத்திற்கு விரோதமாக யுத்தகாலத்தில் எந்த முஸல்மானும் ஒன்றுஞ் செய்யவில்லை. இந்தியாவிலுள்ள அதிகார வர்க்கத்தினர் தங்களுடைய குறுகிய புத்தியினால் ஆலி சகோதரர்களையும், இன்னுஞ் சில முஸ்லீம்களையும் சிறைப் படுத்தினார்களே தவிர, சிறைப்பட்ட இவர்கள் துருக்கிக்குச் சாதகமாக ஒரு காரியத்தையும் செய்யவில்லை.

நிற்க, லார்ட் ஹார்டின்ஜ் இந்தியாவை விட்டுப் புறப்பட்டுப் போனதும் லார்ட் செம்ஸ்போர்ட் வைஸிராய் ஸ்தானத்திலிருந்து முஸ்லீம்களுக்கு மனச் சந்தோஷ முண்டாகும்படி ஓர் அறிக்கையை வெளியிட்டார். பிறகு, 1918-ம் வருடத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ் வெகு சிறப்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டார். துருக்கி விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகக் கவலைப்படுகின்றது. முஸ்லீம்களின் புண்ய ஸ்தலங்களைக் கைப்பற்றவாகிலும், மதக்கோட்பாடுகளுக்கு மாறுபாடாகநடக்கவாகிலும் பிரிட்டிஷ் அரசாங்கம் முன்வராது. துருக்கி

யைத் துண்டு படுத்தாது. நல்ல இனிமையும் வளமையும் பொருந்திய திரேஸ் என்னும் மாகாணத்தை துருக்கியின் ஆதீனத்தினின்றும் அபகரிக்காது. கலீபாவான துருக்கி சுல்தானுடைய பிருதுகளைக் குறைக்கவும் மாற்றவும் செய்யாது என்று முஸ்லீம்களின் மத குருவுக்கு அவ்வறிக்கை கூறிற்று.

இதுபோலவே, அமெரிக்கா தேசாதிபதியான டாக்டர் வில்ஸனும் துருக்கிக்கு சுய நிர்ணயங் கொடுக்கப்படுமென்று கூறியுள்ளார். இப் பெரிய இராஜ்யாதிபதிகள் துருக்கி விஷயமாக வாக்குத் தத்தஞ் செய்ததைக் கொண்டு இந்திய முஸ்லீம்கள் நம்பி பலவிதத்திலும் பிரிட்டிஷாருக் குதவி செய்தார்கள். கடைசியாக ஐரோப்பா யுத்த மும்நின்றது. துருக்கிசமாதானத்துக்குவந்தது. சமா தானமும் ஏற்பட்டது. ஆனால் முஸ்லீம்களுடைய மனதில் சமாதானம் ஏற்படவில்லை. லாயிட் ஜார்ஜ் தாம் கொடுத்த வாக்குறுதியை மீறி முஸ்லீம் களின் மனம் புண் படச் செய்தார். துருக்கி யைத் துண்டு படுத்தினார்கள். துருக்கியிலுள்ள டார்டனல்ஸ் ஜலசந்தி சர்வ தேசங்களுக்கும் பொதுவா யிருக்க வேண்டுமென்று கூறி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தார் அதை ஆதீனப்படுத்தியுள்ளார்கள். டார்டனல்ஸ் ஆசியாக் கண்டத்திற்கும் ஐரோப்பாக் கண்டத்திற்கும் மத்தியிலிருக்கிறது. ஆசியாக் கண்டத்திலுள்ள ஆப்கனிஸ்தானம், கோரஸீகம், துருக்கி ஸ்தானம் முதலிய முஸ்லீம் இராஜ்

யங்களுக்கும் ஐரோப்பாவி லுள்ள துருக்கிக்கும் டார்டனல்ஸ் வழியாக ஒரு சமயம் சம்பந்தம் ஏற்பட்டு அவை ஒரு பெரிய இராச்சியமானல், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின்கீழுள்ள இந்தியாவின்மீதுபடையெடுப்பு நேரலாமென்ற எண்ணத்தைக் கொண்டு பிரிட்டிஷ் இராஜதந்திரியான லாயிட் ஜார்ஜ் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைக் காப்பாற்ற டார்டனல்ஸைக் கைப்பற்றினரென்று சிலர் கூறுகின்றனர். டார்டனல்ஸ் துருக்கி வசம் இருந்ததினல் தான் மூன்று வருடத்தில் முடியக்கூடிய யுத்தம் ஐந்து வருட காலம் நீடித்தது. ஆகவே, இனி ஐரோப்பாவின் சமாதானத்திற்கே டார்டனல்ஸ் பொதுவாக சர்வ தேசங்களுக்கும் பாத்தியப்பட்டதாயிருக்க வேண்டுமென்றும் வேறு சிலர் கூறியுள்ளார்.

எப்படியாயினும் டார்டனல்ஸ் துருக்கி ஆதீனத்திலில்லை. துருக்கி சுல்தான் ஏற்கனவே கொண்டிருந்த கப்பற் படைகளையும் தரைப் படைகளையும் பிரிட்டிஷாரும் நேச தேசக் கட்சியினர்களும் சுவாதீனப்படுத்திக் கொண்டு சுல்தான் அவர்களின் மெய்காப்புக்காக வேண்டி வெகு சிறிய படையையும் ஐந்தாறு கப்பல்களுக்குக் குறைவாகக் கொண்ட கடற்படையையுமே கொடுத்தார்கள். துருக்கி சுல்தான் யதேச்சையாக அரசிறை வழிகளைத் தணிக்கை செய்துவந்ததை பிரிட்டிஷாரின் மேற்பார்வையுடன்இனிச் செய்யவேண்டுமென்றும் உடன்படிக்கை மதச்[illegible]து கூறுகிறது. பொதுவாகக் கூறுமிடத்து துருக்கி [illegible]ல்தான் ஒரு சிறையாளியாகக் காணப்படு

கிறரே யன்றி சுதந்தரங் கொண்ட பெரிய இராஜ்யாதிகாரியாகக் காணப்படவில்லை. ஆனதுபற்றியே துருக்கி சுல்தானுக்குரிய பிருது, கௌரவம், அதிகாரம் இவைகள் குறைவுபட்டால் அது முகம்மதியமதத்திற்கேகுறைவென்பதும் முஸ்லீம்கள் அப்படிக்குறைவான அந்தஸ்துடன் பார்த்தல் கூடாதென்பதும் அவர்களுடைய கடமையென்று புலனுகிறது. உலகத்திலுள்ள எல்லா முஸ்லீம்களுக்கும் (ஒரு சிறிய தொகையாளர் நீங்கலாக) சிறந்த குரு சுல்தானே. அதாவது கலீபா கலீபா என்றல் பிரதிநிதி என்று பொருள். அல்லா குத்தஆலாவுக்குப் பிரதிநிதி. முகம்மத் முஸ்தாபா ஸல்லல்லாஹே ஹைவஸல்லம் அவர்களின் பிரதிநிதி. சுருங்கச் சொல்லின் மகம்மதீய மதமாகிய தீனுக்குப் பிரதிநிதி. துருக்கி சுல்தான் துருக்கிக்கு இராஜ்யாதிகார விஷயத்தில் அதிபதியாக விருப்பதுபோலவே மத விஷயத்தில் உலகத்திலுள்ள முஸ்லீம்களுக்கு அதிபதியாகவே யிருக்கிறர். ஆதலால் இவருக்கு இராஜ்யாதிகாரமும் மத அதிகாரமும் ஒன்றையொன்று பற்றியிருப்பன. இது காலங் கண்ட வழக்கம். இந்த கலீபா அவர்கள் வசித்து வரும் பீடத்திற்குத் தான் கிலாபத் என்று பெயர். கிலாபத் என்பது குருபீடம் அல்லது ஆசார்ய பீடம். பிரதிநிதி ஸ்தானம். முஸ்லீம் உலகத்தில் எந்த இராஜ்யாதிகாரி அதிக செல்வாக்கும் அதிகாரமும் பெற்றிருப்பாரோ அவரே தான் கலீபாவாக ஆகவேண்டுமென்பது முஸ்லீம் கோட்பாடு. அதைப்பற்றியே தான் துருக்கி சுலதான்மார்

கள் சென்ற 400-வருட காலங்களாக கிலாபத் ஸ்தானத்தை வகித்து வருகின்றனர். 15-வது நூற்றாண்டில் சுல்தான் ஸலீம் அவர்கள் காலத்திருந்து பரம்பரையாகவே துருக்கி சுல்தான்மார்கள் கிலாபத் ஸ்தானத்தை வகித்து வருகின்றனர். கிலாபத் ஸ்தானம் முஸ்லீம் சரித்திரப்படி சிலகாலம் மக்காவிலும் மதினமா நகரிலும் வேறு சிலகாலம் பாக்தாதிலும் இருந்தது. தற்பொழுது கிலாபத்ஸ்தானமானது 400-வருட காலமாக கான்ஸ்டாண்டிநோபில் நகரிலேயே யிருந்து வருகிறது. இஸ்லாம் மத முண்டாகி அதைப் பிரசாரஞ் செய்வதற்காகத் தோன்றின தீர்க்க தரிசிகளுள் மகம்மத் நபி சிறந்தவர். இவர் திருமக்காவில் அவதரித்தார். இவர் மதினமா நகரிலும் வேறு பல இடங்களிலும் இஸ்லாம் மத போதனை செய்து வந்தார். அப்படிச் செய்துவரும் நாளில் இவரைச் சில போக்கிரிகள் இவரது சுத்தத் தன்மையை யறியாமல் கற்களாலும் கட்டிகளாலும் அடித்து உபத்திரவப்படுத்தினார்கள். என்றாலும் இவர் முன் வைத்த காலைப் பின் வாங்காமல் ஈமானைக் காப்பாற்ற தீனை ரட்சிக்கப் பாடுபட்டுக் கடைசியாக உலகத்தார் கொண்டாடும்படியாகச் செய்தார்.

இவர் பரகதி யடையுந் தருவாயில் முஸ்லீம்களுக்குக் கூறின கடமை மூன்று:—அவை (1) முஸ்லீம்கள் ஒருவருக் கொருவர் பிரிவினைப் பட்டுச் சண்டையிடாமல் ஒற்றுமையுடன் அணைத்து ஆதரித்துக்கொண்டு இருக்கவேண்டும். (2) இஸ்லாம்

மதத்திற்குப் புண்ணிய ஸ்தலங்களான ஜஸீயரத்-உல்-ஆரப் எல்லைக்குள்ளே நஸாராக்களான கிறிஸ்துவர்களும் வேறு மதத்தினர்களும் காலை வைக்கவோ ஆதீனஞ் செலுத்தவோ உண்மையான எந்த முஸ்லீமும் பார்த்திருக்கக் கூடாது. (3) கலீபாவிற்குக் கீழ்ப்படிந்து அவர் ஆணைவழி நிற்றல், ஆகிய இவைகளேயாம். இந்த ஒவ்வொரு கடமையையும் ஒவ்வொரு உண்மை இஸ்லாமியும் செய்து தீரவேண்டும். முஸ்லீம்களுடைய புண்ய ஸ்தலங்கள் இந்தியாவிற்கு வெளியே யிருக்கின்றன. ஹிந்துக்களுக்கு காசி, இராமேசுவரம் எப்படியோ அப்படியே முஸ்லீம்களுக்கு திருமக்கமா நகரம். ஹிந்துக்களுடைய கோயில்களில் ஸ்வாமி சந்நிதானத்திற்கருகே பிற மதத்தினரும் தாழ்ந்த இந்து வகுப்பினரும் எப்படி வரவிடாமற்படி தடுக்கப் படுகின்றனரோ அம்மாதிரியே இஸ்லாம் மதப் புண்ணிய ஸ்தலங்களில் வேறு மதத்தினர்கள் சென்றால் அது புனிதக் குறைவாகு மென்பது இஸ்லாம் மதத்தின் கோட்பாடு. ஆகவே தான் இஸ்லாம் மதப் புண்ணிய ஸ்தலங்களைக் காப்பாற்றும் விஷயத்தில் முஸ்லீம்கள் மூன்று வித தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்பதும் மகம்மத் நபியின் ஆக்கினை முதலாவது தர்மம். புண்ணிய ஸ்தலங்களை இஸ்லாம் அல்லாத வேறு மதத்தினர் கைப்பற்றிக் கொண்டால், கைப்பற்றின அரசாங்கத்தின் கீழுள்ள இஸ்லாம் குடிகள் அவ்வூரை விட்டுவிட்டு எந்த இஸ்லாம் அரசாட்சியில் துன்பமும் தீங்

கும் இல்லாமல் சமாதானமாக வாழலாமோ அந்த விடத்திற்கு முஸ்லீம்கள் ஹிஜரத் செய்யவேண்டும். அதாவது மகா யாத்திரை செய்யவேண்டும். தற்பொழுது இந்தியாவி லுள்ள எழுகோடி முஸ்லீம்கள் பிரிட்டிஷ் இந்தியாவை விட்டு ஆப்கனி ஸ்தானத்திற்குப் போவதென்றால் அந்த ஸ்தானம் இத்தனை முஸ்லீம்களுக்கும் இடங் கொடுக்காது. வேறு முஸ்லீம் இடங்களுக்குப் போகவுஞ் சாத்திய மில்லை. ஆகவே. இந்தியாவி லுள்ள முஸ்லீம்கள் ஹிஜரத் செய்யாம லிருக்கின்றனர். அப்படியும் சில முஸ்லீம்கள் வட இந்தியாவில் செய்தன ரென்பதை நம் நேயர்கள் ஏற்கனவே பத்திரிகைகளில் படித்திருப்பார்கள். இரண்டாவது தர்மம்—புண்ணிய ஸ்தலங்களைக் காப்பாற்ற ஒவ்வொரு முஸ்லீமும் சத்துருக்களுடன் எதிர்க்கக் கையிலே வாளேந்தி 'ஜீஹாத்' செய்யவேண்டும். 'ஜீஹாத்' என்பது அல்லாகுத்தஆலாவின் கட்டளைப்படி ஈமானைக் காப்பாற்ற தீன் மார்க்கத்திற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்யும் தன்மையான குருபானி. எல்லாவற்றையும் துறந்து அல்லா ஒருவர்தான் இனி நமக்குக் கதி என்று வைராக்கியங் கொண்டு கையில் வாளேந்தி தர்ம யுத்தஞ் செய்தல். இத்தகைய தர்மத்தைத் தற்பொழுது இந்தியாவி லுள்ள முஸ்லீம்கள் செய்தால் இந்துக்களின் குடும்பங்கள், கிறிஸ்துவர்களின் குடும்பங்கள், ஐரோப்பியர்களின் குடும்பங்கள், இவை நிலைகுலையும். நாட்டில் இரத்த வெள்ளம் பெருகும். ஆகவே தான்

இதை யெல்லாம் அனுசரித்து இந்தியாவி லுள்ள ஏழுகோடி முஸ்லீம்கள் தங்களுக்குரிய ஜீஹாத் தர்மத்தைத் தாங்காமல் அமைதியுடனும் தர்மத்துடனும் சத்தியத்துடனும் ஜீவகாருண்யத்துடனும் இன்மொழியுடனுமிருக்கும் 'உதவி மறுத்தல்' என்னும் 'தர்க்கே மவாலாத்' என்கிற ஒத்துழையாமை தர்மத்தைக் கொண்டிருக்கிறார்கள். இது முஸ்லீம்களுடைய சநாதன தர்மம். இதைப் பிரவர்த்திக்கத் தான் கலீப்பாக்கள் ஏற்பட்டார்கள். மகமத் நபி அவர்கள் மண்ணுலகை விட்டு விண்ணுலகேறினதும் அவருடைய பிரதிநிதியாக ஒருவரை நியமிக்க வேண்டுமென்று அவருடைய சீடர்கள் ஆலோசித்து ஹஸ்ரத் அபுபகரை முதலாவது கலீபாவாக நியமித்தார்கள். பிறகு ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் ஊஸ்மான், ஹஸ்ரத் அலி முதலானோர் வெகு சிறப்பாக கிலாபத்ஸ்தானத்தை வகித்து நீதியுடன் பரிபாலித்து வந்தார்கள். மேற்கூறிய பண்டைக் காலத்து கலிபாமார்கள் அனைவரும் இராஜ்யாதிகாரத்தையும் மத அதிகாரத்தையும் ஒருங்கே வகித்து வந்தார்கள். கலீபாமார்களுக்கு ஏதாகிலும் ஒரு குறைவு வந்தால் அக்குறைவு இஸ்லாமியர்களுக்கே யென்பது கோட்பாடாகும். அதுபற்றியே தான் ஐரோப்பா யுத்தத்தில் துருக்கி சுல்தானை கலீபா அபஜய மடைந்தாலும் அவருடைய அந்தஸ்தையும் பிருதையும் குறைத்ததினால்தான் முஸ்லீம்களுக்கு அளவற்ற மனத்துயர மேற்பட்டது. உலகத்திலுள்ள சற்றேறக் குறைய 30-கோடி முஸ்லீம்களுக்கு (சிலர்

நீங்கலாக இது விஷயத்தில் பெருத்த மனக்கிலேசம் ஏற்பட்டிருக்கிறது. எகிப்து, பாரவஸீகம் முதலிய விடங்களி லுள்ள முஸ்லீம்களும் நேச தேசக் கட்சியவர்களின் தீர்ப்பைக் கண்டித்திருக்கிறார்கள். நிற்க, இங்ஙனம் முஸ்லீம்களுக்குச் செய்த துன்பத்தை நீக்க இந்தியாவி லிருந்து கிலாபத் கமிட்டியார் ஒரு தூது அனுப்பினார்கள். அத் தூதுக்கு மௌலானா மகம்மத் ஆலி தலைமை வகித்தார். கிலாபத் தூதர்கள் இங்கிலாந்திற்குச் சென்று பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ், மாண்டேகு, அஸ்குவித், லார்ட் கர்ஸன் முதலானோரைக் கண்டு குறைகளை முறையிட்டனர். அது தவிர, இதாலியா, பிரான்சு தேசங்களுக்குஞ் சென்று அவரவர்களின் அபிப்பிராயங்களையுங் கண்டு கடைசியாக இந்தியாவிற்குத் திரும்பிவந்ததும், கிலாபத் குறைக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தான் காரணமே தவிர வேறு நாட்டார்களில்லையென்று பம்பாயில் மௌலானா முகம்மத் ஆலி கூறியுள்ளார். கிலாபத் விஷயமாகக் கிளர்ச்சி செய்ய இந்தியாவில் எங்கும் கமிட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டது. இந்துக்களும் முகம்மதீயர்களும் அங்கத்தினர்களானார்கள். வர வர இந்துக்களுக்கும் முகம்மதீயர்களுக்கும் உள்ளன்பு ஏற்பட்டு ஒற்றுமை யுணர்ச்சி யேற்பட்டது. காங்கிரஸ் மகா சபை 35-வருட காலமாக ஒற்றுமை யுணர்ச்சிக்குக் கஷ்டப்பட்டும் சரியாகப் பலிதமாக வில்லை. ஆனால் ஒருவருடத்தில் இந்துக்களுக்கும் முகம்மதீயர்களுக்கும் பஞ்சாப் சம்பவத்தினாலும் கிலாபத் விஷயத்தினாலும் பிரிக்க

முடியாத ஒற்றுமை யேற்பட்டு இருவரும் ஒரு தாய்க்கு இரண்டு பிள்ளைகள் போலாயினர். இந்தியாவிலுள்ள பல தலைவர்கள் ஒற்றுமைக்குக் கஷ்டப்பட்டும் சரியாகப்பயன்படாது தற்பொழுது மகாத்மா காந்தியடிகளால் என்றுமழியாத ஒற்றுமை வளரவாரம்பித்தது. இந்துக்களும் மகம்மதியர்களும் தெரிந்தோ தெரியாமலோ, தூண்டப்பட்டோ ஏவப்பட்டோ ஒருவருக்கொருவர் சண்டையிட்டிருந்த காலம் நீங்கி, பாலும் நீரும்போல, பூவும் மணமும்போல எள்ளும் எண்ணெயும்போலாயினர். இந்தியாவில் இனி ஏற்படக்கூடிய ஸ்வராஜ்யத்திற்கு இவ்வொற்றுமை ஒப்பற்ற அருமருந்து. ஹிந்துக்களும் முகம்மதியர்களும் பிரிவினை கொண்டு வாழ்தல் இனி இயலாது. இருவரும் யாதொரு பிரிவினையுமின்றி வாழ எல்லாம் வல்ல கடவுள் அருள்புரிவாராக!

VII

நவசக்தி உதயம்

இங்ஙனம், பஞ்சாப் விஷயத்திலும் கிலாபத் விஷயத்திலும் பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளினால் நியாயங் கிடைக்குமென்று எதிர் பார்த்திருந்தும், கிடைக்காததினால் இனி துரைத்தனத்தாரைக் கேட்பது மரியாதைக் குறைவென்று அறிந்துகொண்டு மகாத்மா காந்தி, மௌலானா ஷவுகத் ஆலி, மகம்மத் ஆலி, அப்துல் பாரி முதலானோர் உதவி மறுத்தல் இயக்கத்தைக் கொண்டு வந்தனர். இவ்வியக்கம் கொண்டுவருமுன் மேற்கூறிய தலைவர்கள் பல நாள் இரவு பகல்களாக விஷயங்களை ஆராய்ச்சி செய்து பஹிரங்கத்திற்குக் கொண்டு வந்தனர். உதவி மறுத்தல் இயக்கத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய்ச்சி செய்தனர். சாதக பாதகங்களையும் ஆராய்ச்சிசெய்து இரண்டு பட்சத்தையும் வாதித்துக் கடைசியில் உதவி மறுத்தல் இயக்கம் ஒப்பற்ற மருந்து எனக் கொண்டனர். சாத்வீக எதிர்ப்பைக் காட்டிலும் இவ்வியக்கம் சாத்வீக முள்ளது. சாத்வீக எதிர்ப்பில் சட்டங்களை மீறி நடக்கலாம். உதவி மறுத்தல் இயக்கத்தில் சட்டங்களை மீறி நடக்காமல் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். உத்தியோகஸ்தர்களின் உத்திரவுகளுக்கு மீறி நடக்கலாகாது. சுருங்கச் சொல்லின் கலகம் விளைவதற்குக் காரணமா யிருக்கும் ஒவ்வொரு காரியத்தையும்

தவிர்க்க வேண்டும். சாத்வீக எதிர்ப்பைக் காட்டி லும் உதவி மறுத்தல் மிக்க கஷ்டமானது. ஆனால் பலமான ஆயுதம். சாந்த குணமும், இன்மொழியும், ஜீவகாருண்யமும், சத்தியமும், தர்மமும், திட மனதுமே உதவி மறுத்தல் இயக்கத்திற்கு அணிகல ன்கள். உதவி மறுத்தல் இயக்கம் இந்நாட்டிற்குப் புதிதல்ல. சநாதன தர்மம் எப்படியோ அப்படியே உதவி மறுத்தல் தர்மமும் புராதனமானது. உலகந் தோன்றிய நாள் முதற்கொண்டே உதவி மறுத்தல் இயக்கம் இயற்கையாகவே உண்டாயிற்று. உதவி அல்லது ஒற்றுமை எப்பொழுது பிறந்ததோ அப் பொழுதே உதவிமறுத்தல் அல்லது ஒத்துழையாமை யும் பிறந்தது. ஒற்றுமையும், உதவியும், அன்பும் ஆதரவுமுள்ள விடத்தில், யோக க்ஷேமங் களை வகிக்கும் பொறுப்புள்ள விடத்தில் தானு கவே யுண்டாகும். ஆனால் அன்பும், ஆதரவும் யோக க்ஷேமங்களின் பொறுப்பும் இல்லாத விடத் தில் ஒற்றுமையும் உதவியும் நீங்கி, ஒன்றுமை என் கிற ஒத்துழையாமை அல்லது உதவி மறுத்தல் உணர்ச்சி தானுகவே யுண்டாகின்றது. சத்யம் தோன்றுங் காலத்தில் அசத்யம் எங்ஙனம் தோன்று கிறதோ, ஞானம் தோன்றுங் காலத்தில் அஞ்ஞானம் எங்ஙனம் தோன்றுகிறதோ, அங்ஙனமே, ஒற்றுமை தோன்றுங் காலத்தில் ஒற்றுமையாமை தோன்றுகி றது. ஆகவே, சமூகங்கள் பலப்படுவதற்கும், சமுதா யங்கள் சீர் திருந்துவதற்கும், நாடு நலமடைவ தற்கும் ஒத்துழையாமை என்கிற உதவி மறுத்தல்

இயக்கம் இன்றி யமையாதது. இந்த இயக்கத்தைத் தனி மனிதனும் கையாளலாம். அல்லது ஒரு நாட்டார் பொதுவாகவும் கையாளலாம். இந்த இயக்கத்தைக் கையாள விருக்கும் மனிதன் ஏழ்மையை நாட வேண்டியதாயிருக்கும். சுவை யடக்கம், பிரம்மசர்யம், வெகுளாமை, இன்மொழி, சத்யம், புறங் கூறாமை, பிறனில்விழையாமை, டாம்பீகமற்றதன்மை இவைகளை யனுஷ்டிக்க வேண்டும். கஷ்டங்கள் வரினும் ..யாத மனத்தினனாய் இருத்தல் வேண்டும். சத்துவ குணத்தையே சதா பற்றி யிருக்க வேண்டும். ஏனெனில், இந்த இயக்கம் சாத்வீக தியாகமாகும். சாத்வீகத் தியாகத்தின் பெருமையைப் பண்டைக் காலத்து, முற்றுந் துறந்த முனிவர்களும், மன்னர்களும், ஸ்திரீகளும், பாலர்களும் கொண்டாடி யிருக்கிறார்கள். இந்நாட்டைப் போலவே மேனாட்டிலும் பல தீர்க்கதரிசிகள், இராஜ தந்திரிகள் முதலானோர், இந்தஇயக்கத்தை யனுஷ்டித்திருக்கிறார்கள். இந்த இயக்கத்தை யனுஷ்டிப்பவர்கள் இதுவரையில் அபஜய மடைந்ததாகச் சரித்திரத்திலாகிலும் புராணங்களிலாகிலும் படித்தது மில்லை, கேட்டது மில்லை. ஆரம்ப காலத்தில் இந்த இயக்கத்தை யனுஷ்டிப்பவர்களுக்குத் துன்பங்கள்வரும். கஷ்டங்கள் நேரிடும். பந்து மித்திரர்கள் சத்துருக்களாவார்கள். வேண்டிய வஸ்துக்கள் யாவும் வேண்டாதவைகளாகும். பிரியமான பண்டங்கள் வெறுப்பாகும். உயர்ந்தன தாழும். தாழ்ந்தன உயரும். ஒன்றின் வழி யொன்று நிற்கா. இந்த

இயக்கம் துராக்கிரகத்தை வெறுக்கும். இந்த இயக்கத்தினு லுண்டாகும் நன்மைகளுக்கு அளவு கிடையாது. இத்தகைய மகிமை பொருந்திய இவ்வியக்கத்தை மகாத்மா காந்தி இந்தியர்கள் அனுஷ்டிக்கும்படி ஆணை செலுத்துகிறார். தற்பொழுதுள்ள அரசாங்க முறை குற்றங்களினுலும் அநியாயங்களினுலும், ஏற்பட்டுவருவதைக் கண்டித்து மாற்றவே தான் மகாத்மா காந்தி இவ்வியக்கத்தைக் கொண்டுவந்தார். அதிகாரிகளிடத்திலாகிலும் ஐரோப்பிய வகுப்பார்களிடத்திலாகிலும் அரசாங்கத்தினர்களின் தயவிற்கு கெஞ்சிநிற்கும் தன்மையைக் கொண்ட கட்சியினர்களிடத்திலாகிலும் இவ்வியக்கத்தைக் கொண்டவர்களுக்கு விரோதமாகிலும் பேதபுத்தியாகிலுங் கிடையாது. இரண்டு மித்திரர்கள் வெகுகாலமாக ஸ்நேகஞ் செய்துவருகையில் ஒருவன் குடிப்பழக்கமும் துர்ச்சகவாசமும், கொடிய செயலுங் கொண்டவனுனுல், மற்றவன், துர்ப்பழக்க முள்ளவன் தன் தீக்குணங்களை மறந்து நற்குணங்க ளடையும்வரை அவனிடம் பழகாமலும், உரையாடாமலும், உதவிபுரியாமலும், உபேட்சையாகவு மிருப்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

இங்ஙனம், சிநேகிதன் உபேட்சையுடன் இருப்பதையும் அவன் மாறியிருப்பதையுங் கவனிக்கும் துர்ப்பழக்கமுள்ளவன் தானுகவே தன் தீப்பழக்கங்களை முற்றுந் துறந்து நல்லவனுகிறான். ஆகவே, உபேட்சைக் குணம் எவ்வளவு நன்மையைச் செய்கின்றது பாருங்கள். அதுபோலவே, இதுகாறும் பிரிட்

டிஷ் அரசாங்கத்துடன் பழகியும் சிநேகித்தும் உதவி செய்துவந்த நாம், இப்பொழுது அவ்வரசாங்கம் நல் வழியில் திரும்புவதற்காக வேண்டி, குடிகளாகிய நாம் அன்புடனும் ஸ்நேகத்துடனும் உதவிமறுத்தல் இயக்கத்தைக் கையாளுகின்றோம். இவ்வியக்கம் குடிகளுக்கும் அரசாங்கத்துக்கும் நன்மை பயக்கும். இவ்வியக்கம் ஆள்பவர்களுக்கும், ஆளப்படுவோர்களுக்கும் அதிக நெருக்கமான ஸ்நேகத்தைக் கொடுத்துப் பலப்படுத்தும். இறுமாப்புடனும், அகங்காரத்துடனுமுள்ள அரசாங்கமாகிலும், சமூகமாகிலும், முதலாளிகளாகிலும், மமதைக்கொண்ட தனிமனிதராகிலும், இவ்வியக்கத்திற்கு முன் நிற்கமுடியாது. ஆதலால், அரசாங்கமும்,முதலாளியும்,அதிகாரப்பதவியிலுள்ளவனும் இவ்வியக்கம் பலப்படாமற்படிக்கு வேண்டிய முஸ்திப்புகளுடன் போராடுகிறார்கள்.அதுகாலை, சத்யத்திற்கும், அசத்தியத்திற்கும், தர்மத்திற்கும் அதர்மத்திற்கும், ஆன்மசக்திக்கும், மிருக சக்திக்கும் போராட்ட முண்டாகின்றது. சத்தியத்தை, அசத்தியம் வெல்லாததுபோலவும், தர்மத்தை,அதர்மம் வெல்லாததுபோலவும், ஆன்மசக்தியை மிருகசக்தி அடக்கியாளாததுபோலவும், உதவிமறுத்தல் இயக்கத்தைத் தன்னரசுகொண்ட இயக்கம் எதுவும் வெல்லாது.

ஆதலாற்றான் இத்தகைய பலமுள்ள ஆயுதத்தைக் காண அரசாங்கம் பயப்படுகிறது. சமூகங்கள் நடுங்குகின்றன. முதலாளிகள் தலைவிரி கோலமாயாடுகின்றனர். அநீதியான சட்டங்களும் அக்கிரமமான உத்திரவுகளும் சிதறுகின்றன. இத்தகைய

வல்லமை பொருந்தியதும், மேன்மையுள்ளதும் பரிசுத்தமானதுமான ஆயுத மொன்றே நிராயுதபாணிகளானஜனங்களுக்கு இன்றியமையாததெனக்கொண்டு மகாத்மா காந்தி இவ்வாயுதத்தைத் தாங்க ஆக்ஞாபிக்கிறார். இவ்வாயுதத்திற்கு ஆயுதச்சட்டம் தடைபடுத்தாது. பொன் முடிதரித்த பூபாலர்களுடைய உத்திரவுகளும் இதைப் பங்கப்படுத்தாது. ஏனெனில், இவ்வாயுதம் சைதன்னியமானது. இச்சைதன்யமான ஆயுதத்தை இதர ஆயுதங்களினால் வெட்ட முடியாது; அக்கினியினால் எரிக்க முடியாது; ஜலத்தினால் நனைக்க முடியாது; காற்றினால் உலர்த்த முடியாது.

ஆகவே, இது அசைக்க முடியாத தன்மையுள்ளது. இதையெல்லாம் யோசித்துத் தான் மகாத்மா காந்தி இவ்வியக்கத்தை நடத்த நாட்டினர்களைக் வேண்டுகிறார். பால இந்தியாவை எதிர்பார்க்கிறார். அறிவுள்ள இந்தியாவை நாடுகிறார். தியாகத்திலும், பரோபகாரத்திலும், ஆன்ம விசாரத்திலும், அத்யாத்ம வித்தையிலும் ஐயந்திரிபறக் கற்று அனுஷ்டானத்தினால் பெருமைபெற்ற இந்தியாவை மகாத்மா காந்தி எதிர்பார்க்கிறார். பண்டைக்காலத்து ரிஷிகளைப் போன்ற மகாத்மா, டாம்பீகமற்ற வாழ்க்கையை அவலம்பிக்கக் கூறுகிறார். குடிசையில் பிறந்தது சுதந்தரம். கட்டையில் பிறந்தது ஞான ஒளி. இவ்விரண்டும் இந்தியாவுக்கு அருந்தனங்கள். இது அழியினும் இத்தனம் அழியாது. திருடர்கள் பறிக்கக்கூடாதது. அரசர்கள்

கொள்ளக்கூடாதது. கொண்டாலும் குறையாதது. இத்தகைய இயக்கத்தின் பலத்தையறிந்தே மகாத்மா காந்தி 1920-ம் வருடம் ஏப்ரல்மாதத்தில் முதல் முதல் கொண்டுவந்தார். அப்பொழுது இவ்வியக்கத்திற்கு நான்கு ஷரத்துக்களையும் திட்டமாகத் தெரியப்படுத்தினர்.

அவை :—

1. அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் பட்டங்கள், கௌரவங்கள், அதிகாரச் சின்னங்கள், பிருதுகள் ஆகிய இவைகளைப் பெறக்கூடாது. பெற்றவைகளை வாப்சு செய்யவேண்டும்.

2. பஞ்சாப் படுவதையைப்பற்றியும் கிலாபத் விஷயத்தைப் பற்றியும் அரசாங்கத்தார் அக்கிரமஞ் செய்திருக்கிறார்களென்று உண்மையாகமனதில் படுமானல் ஜாதீயமரியாதைக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும் போலீஸ் சிப்பந்திகளும் அதிகாரிகளும் உடனே தங்கள் தங்கள் வேலைகளினின்றும் விலகிக்கொள்ளவேண்டும்.

3. இராணுவத்தில் உத்தியோகம்புரியும் சிப்பாய்களும் மற்றுமுள்ள இந்தியப் படைவீரர்களும் இந்தியாவிற்கு ஏற்பட்ட சங்கடத்தை உத்தேசித்து அவர்கள் தாங்களாகவே பதவிகளினின்றும் விலகிக்கொள்ளலாம்.

4. அரசாங்க நிர்வாகத்திற்கு அடிப்படையாயிருக்கும் வரித் திட்டத்தைக் கொடாமற்படி நிறுத்தி விடுதல்.

இம் மேற்கூறிய நான்கு திட்டங்களை மகாத்மா காந்தி முதன்முதல் தன்னால் பிரசுரிக்கப்பட்டுவரும் 'யௌவன இந்தியா' (பாலபாரதம்) என்னும் பத்திரிகையில் எழுதி வெளியிட்டார். உடனே கிலாபத் கமிட்டிகள் அங்கீகரித்தன. தனியாகச் சில காங்கிரஸ் தலைவர்களும் ஒத்துக்கொண்டனர். இப்படியிருக்கையில், சென்னையில் ஒரு பெரிய மாகாண கிலாபத் கான்பரன்ஸ் கூடிற்று. அக்கான்பரன்ஸுக்கு மௌலானா ஷவுகத் ஆலி அக்கிராசனம் வகித்தார். பற்பல விடங்களிலிருந்து கணக்கற்ற முஸ்லீம்கள் வந்தனர். அக்கான்பரன்ஸில் மேற்கூறிய நான்கு ஷரத்துக்களும் தீர்மானமாக எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டன. பின்னர் இத்தீர்மான விஷயமாகப் பலஉபந்யாசங்கள் நடைபெற்றன. ஒத்துழையாமைத் தீர்மானவிஷயமாக நாட்டில் பலவாதங்கள் ஏற்பட்டன. இப்படியிருக்கையில் 1920 ஜுன் மாதத்தில் மகாத்மா காந்தி வடஇந்தியாவில் சில தலைவர்களுடன் கலந்து முதலில் தெரிவித்த 4 ஷரத்துக்களில் முதல் ஷரத்தைமட்டும் எடுத்துக்கொண்டு இதில் ஏழுபடிகளை யமைத்தார். அவையாவன :—

1. பட்டங்கள், சர்க்கார் நியமன அந்தஸ்துக்கள், கௌரவச் சின்னங்கள் இவைகளை விட்டுவிட வேண்டும்.
2. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்யும்விருந்துக் கச்சேரிக்குப் போகக்கூடாது; உத்தியோகஸ்தர்களுக்காக விருந்துக் கச்சேரி நடத்தவுங்கூடாது.

3. சட்டசபைகளுக்கு அபேட்சகர்களாக நிற்கக் கூடாது.
4. வக்கீல்மார்கள் கோர்ட்டுகளினின்றும் விலக வேண்டும்.
5. இஸ்லாமியர்களின் புண்ணியஸ்தலங்களான ஜஸீயருத்—உல்-ஆரப் எல்லைக்குள்ளே யிருக்கும் மெஸபொடேமியாவுக்கு இந்தியாவிலிருந்து வீரர்களோ அல்லது சிப்பந்திகளோ போகக் கூடாது.
6. பள்ளிக்கூடத்தைவிட்டு மாணவர்கள் வெளிவர வேண்டும்.
7. இந்தியாதேசத்தில் உற்பத்தியாகும் சாமான்களைக்கொண்டு செய்யப்பட்டுவரும் சுதேசிய சாமான்களை வாங்கவேண்டும்.

இப்படிகள் அமைக்கப்பட்டவுடனே நாட்டில் தேசியக் கட்சியனருக்குள்ளே அபிப்பிராய பேதங்கள் உண்டாயின. சட்டசபை பஹிஷ்காரத்தைப் காங்கிரஸ் அபிமானிகளில் பலர் ஒத்துக்கொள்ளவில்லை. சிலர், ஒருமனிதன் எவ்வளவுதான் சாமர்த்தியவானுகவும், தியாகியாகவுமிருந்தாலும், அவனுடைய ஆக்ஞைக்குக் கட்டுபட்டுக் கீழ்ப்படிந்து எப்படி நடக்கமுடியும் என்றனர். மற்றுஞ்சிலர், செப்டம்பர் மாதத்தில் கல்கத்தாவில் கூடப்போகும் காங்கிரஸ் மகாசபையில் தீர்மானமானல் அதன்படி நடக்கலாமென்றனர். இப்படி தேசீயக் கட்சியனர்களுக்குள்ளே அபிப்பிராயபேதங்கள் பலப்பட்டன. சட்டசபை பஹிஷ்காரத்தைப் பற்றி

காங்கிரஸ் பிரசாரகர்களிற் பலர் விரோதமாகவே யிருந்தனர். லாலா லஜபதிராய் சட்டசபை பஹிஷ்காரத்தை வெகு திடமாக அங்கீகரித்தார்.

லாலா லஜபதிராய் பஞ்சாப்வாசி. சிறந்த வக்கீல், ஆரியசமாஜக் கொள்கையினர். தீவிர ஞானங் கொண்டவர். பெரிய பரோபகாரி. நல்ல காங்கிரஸ் அபிமானி. இரண்டுதடவை காங்கிரஸ் தூதராக இங்கிலாந்துக்குச் சென்றிருக்கிறார். லாகூரிலுள்ள தயாநந்த வித்யாசாலையை ஸ்தாபனஞ்செய்தவர்களில் இவரும் ஒருவர். 1907-ம் வருடத்தில் 6 மாத காலம் நாடு கடத்தப்பட்டார். ஐரோப்பா யுத்த காலத்தில் அதிகாரிகளின் உபத்திரவத்தினால் இந்நாட்டைவிட்டு அமெரிக்கா சென்று பற்பல விதமாகத் தேசத் தொண்டுசெய்தார். இவர் எழுதிய சில புத்தகங்கள் இந்தியாவிற்கு வராமற்படி தடுக்கப்பட்டன. 1920-ம் வருடத்தில் கல்கத்தாவில் கூடின விசேஷ காங்கிரஸ் மகாசபைக்கு அக்கிராசனம் வகித்தார். கல்வித்துறையில் இவர்போல் பாடுபடுவர்கள் இந்நாட்டில் வெகு குறைவு. ஜாதீயக் கல்விவிஷயத்தில் நல்ல ஞானங் கொண்டவர். காலஞ்சென்ற லோகமான்யரின் பெயரால் லாகூரில், ஓர் இராஜீய பள்ளிக்கூடம் தம் சொந்த செல்வங்கொண்டு ஸ்தாபித்திருக்கிறார்.

இங்ஙனம், நாட்டில் ஒத்துழையாமைத் திட்டவிஷயமாகப் பிரிவினை யுண்டாகிவந்த காலத்தில் லோகமான்ய பால கங்காதர திலகர் பம்பாயில் இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகேறினர். நம் நாடு திருநீங்

கியதுபோலாயிற்று. இந்துக்களும் முகம்மதியர்களும் மனங் கசிந்தனர். சுதந்தரமே யிழந்துவிட்டது போல் நாடு காணப்பட்டது. திலகரின் பிரேத ஊர்வலத்தில் கோடிக்கணக்கான ஜனங்கள் குழுமியிருந்தனர். மகாத்மா காந்தி, ஷவுகத் ஆலி இவர்களும் வந்திருந்தனர். இத்தகைய மகான் நம்மை விட்டு நீங்கினது நம் விதிப்பயனே. மகாத்மாவுக்கு லோகமான்யரும் தற்சமயம் இருந்திருந்தால், ஒன்பதுமாதத்திற்குள் ஸ்வராஜ்யம் பெறுவதும் கடினமாகுமா? நிற்க, ஆகஸ்டு மாதத்தில் மகாத்மா காந்தி சென்னைக்கு விஜயமானார். சென்னை மாகாணத்தின் பற்பல விடங்களுக்குச் சென்று அரிய பெரிய பிரசங்கங்கள் செய்துவந்தார், கடைசியாக, செப்டம்பர் மாதம் 4-ந் தேதி கலகத்தாவில் விசேஷ காங்கிரஸ் கூடிற்று. காங்கிரஸ் மகாசபைக்கு ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் விஜயமா யிருந்தனர். லாலா லஜபதிராய் அக்கிராசனம் வகித்தார். இக் காங்கிரஸ் மகாசபையில் மகாத்மா காந்தியடிகள் ஏற்கனவே கொண்டுவந்த எழுதிட்டங்களுடன் கூடிய உதவிமறுத்தல் தீர்மானம் வெகு சிலர் நீங்கலாக எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. உதவிமறுத்தல் இயக்கம் இமயமலை முதல் குமரி முனைவரையில் ஒரு நவசக்தியை யுண்டாக்கிற்று. இந்நவசக்தியின் உதயம் சுதந்தர உதயம் என்பதற்கு ஐயமே யில்லை. நவசக்தியின் பலமும் வேகமும் ஆழ்ந்து செல்வதற்கு நாமனைவரும் ஒருங்கே உழைப்போமாக!

I

மகாத்மா காந்தியின் உபந்யாசங்கள்

1920-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு மகா நாடு கூடியது. மகாத்மா காந்தி, மௌலானா ஷவுகத் ஆலி இருவரும் உபந்யாசஞ் செய்தனர். அதுகாலை மகாத்மா காந்தி பின் வருமாறு பேசினார்:—

அக்கிராசனாதிபதி யவர்களே! நேயர்களே!! போனவருடம் போலவே இப்பொழுதும் நான் உட்கார்ந்து பேசுவதை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். எனது குரல் முன்னையிலும் பலமாகப் போய்விட்டாலும் இன்னும் தேகம் பலஹீனமாகத் தானிருக்கிறது.

லோக மான்ய திலகர்

நான் இங்கு பேசப்புகு முன்னர் காலஞ்சென்ற நம் மகான் லோகமான்ய திலக மகாராஜருக்கு என் மரியாதையைச் செலுத்த விரும்புகிறேன். சபையோர் சந்தடி யில்லாமல் நான் கூறுவதைக் கேட்க வேண்டுகின்றேன். நான் உங்கள் மனதிற் படும்படியாகவும் நியாயத்திற் கிணங்கவும் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டி வந்திருக்கின்றேன். ஆதலின் நான் என்ன கூறியபோதிலும் நீங்கள் மௌனமாயிருந்து கேட்டா லொழிய நான் பேசுவதிற் பயனில்லை. காலஞ் சென்ற நம் தேசாபிமானியின்

வாழ்க்கையும் மரணமும் நமது நாட்டினர்க்கு ஓர் புதிய சக்தியை எங்கும் உண்டாக்கி யிருப்பதால் அதன் மகிமையை எடுத்துக் கூறுவதல்லாது, அவருக்கு வேறு எத்தகைய மரியாதையை நான் செலுத்த வல்லவனுவேன். நான் நேரில் பார்த்ததுபோல நீங்கள் அவருடைய தகன சம்பவத்தைப் பார்த்திருந்தால் நான் கூறுவதன் உண்மை உங்களுக்கு விளங்கும்.

ஸ்ரீ திலகர் தேசத்திற்கென்றே உயிர் வாழ்ந்து வந்தவர். அவர் வாழ்க்கையினின்றே சுய ராஜ்யம் என்ற தேச சுதந்தர எழுச்சி உண்டாயிற்று. அவர் இறந்தபோதும் அந்தச் சுதந்திர எழுச்சியே பரவிற்று. இத்தேசத்தார் அவரைப் பின்பற்றி வந்ததின் காரணம் இதுவேயாம். அதனுற்றுன் இந்தியாவில் பெரிய அந்தஸ்தி லுள்ளவர்கள் மட்டுமேயன்றிக் கோடிக்கணக்கானசாமானியரும் அவர்பால் மிக்க மரியாதையும், பக்தியும் கொள்ளலாயினர். அவர் வாழ்நாளில் தேசத்திற்காக அரிய தியாகங்கள் செய்திருக்கிறுர். 1879-ம் ஆண்டில் தேசத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்ய முற்பட்டார். அதே தியாக வாழ்க்கையிலேயே தம் வாழ்நாளைக் கடைசி வரையிலும் கழித்தார். அவர் பொதுஜன நன்மதிப்பைப் பெற்றதின் இரகசியமிதுவே. தமது தேசத்திற்குவேண்டியதென்னவென்பதும், தேசத்திற்காக எவ்விதம் உயிரை விடுவதென்பதும், அவருக்கு நன்ருய்த் தெரியும். நான் இது விஷயத்தில் எவ்வளவு கூறினும் போதாது. ஆயி

னும் எதற்காக லோகமான்யதிலகர் இந்நாட்டில் உடலைத் தாங்கி வாழ்ந்து அரிய தியாகங்கள் செய்தாரோ அதன் நோக்கம் அவர் உழைப்பின் பயனால் இனிச் சித்திபெறும் என்று நம்புகிறேன்.

அவருடைய வாழ்க்கைச்சரிதம் நமதுநாட்டிற்கு எத்தகையகற்பனைபோதிக்கிறது? நாம்நமதுநாட்டின் நலத்திற்காகஏதேனுமோர் காரியஞ்செய்யத்தொடங்குவோமாயின் தியாகஞ்செய்தாலன்றி, எவ்வளவுஅழகாகப் பேசினும் வீண் பேச்சினால் ஒரு காரியமும் நடக்கவே நடக்காது. பேசுவதாயின் பேச்சோடு தியாகமும் இருக்க வேண்டும். ஆதலின் உங்கள் தேச நலத்திற்காகவும் தேசத்தின் கௌரவம், மதம் இவைகளைக் காப்பாற்றுவதற்காகவும், தியாகம்செய்ய நீங்கள் தயாரா யிருக்கின்றீர்களா? உங்களை இங்ஙனம் கேட்பதற்சாகவே நான் இங்கு வந்திருக்கின்றேன்.

சென்னை வாசிக ளிடத்தும் இம்மாகாண வாசிகளிடத்தும் எனக்கு மிக்க நம்பிக்கையுண்டு. இந்த நம்பிக்கை 1893-ம்ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் தமிழ் தொழிலாளர்களுடன் நான் பழகியதி னின்றும் ஏற்பட்டது. இந்த நெருக்கடியான சம்பவத்தில் இம்மாகாணம் ஏனைய மாகாணங்களைக் காட்டிலும் தியாகத்தில் தலை சிறந்து விளங்குமென்று நம்புகிறேன். சுய நலத்தை அறவே ஒழித்து தியாகம் செய்வதில் இம்மாகாணம் பிற மாகாணங்களுக்கு வழி காட்டியாயிருத்தல் வேண்டும். இம் மாகாணத்தினர் தாம்

பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

"உதவி மறுத்தல்" இயக்கம்

"உதவி மறுத்தல்" என்பது என்ன? இதைப் பற்றி நீங்கள் பல விஷயங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நாம் எந்த "உதவி மறுத்த" லைக் கைக்கொள்ள வேண்டும். ஏன் இப்போது இதைக் கைக்கொள்ள வேண்டும். நமது தேசத்தில் இதுகாலை கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயங்கள் இரண்டு. அதிலும், முக்கியமானது கிலாபத்விஷயம். இது விஷயத்தில் இந்தியாவி லுள்ள முஸல்மான்களின் உள்ளம் அனலி லிட்ட மெழுகுபோல் உருகுகின்றது. தீர்க்காலோசனையின்மேல் இங்கிலீஷ் ஜாதியின் பெயரை முன்னிட்டுப் பிரதம மந்திரியால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளின்படி காரியம் நடக்கவில்லை. அவ் வாக்குப்படி பிரிட்டிஷ் ஜாதியரிடம் நல்ல நீதி கிடைக்குமென்று முஸல்மான்கள் எதிர்பார்த்துக்கொண்டேயிருக்க, திடீரென அந்தவாக்குத்தத்தத்தை முறித்து, இஸ்லாம் மதத்திற்குப் பெரிய ஆபத்தை விளைவிக்கக் கூடிய கொடிய வழியில் பிரிட்டிஷார் இறங்கி விட்டார்கள்.

பிரிட்டிஷ்காரர்களின் பிரமாணம் சரியாகக் காப்பாற்றப்படாத வரையில் இந்தியாவி லுள்ள முஸல்மான்கள் பிரிட்டிஷ் சம்பந்தத்தில் விசுவாஸமாயும் மன மொப்பியும், நம்பிக்கை வைக்க முடியாது. அவர்கள் கருதுவது சரியென்றே நானும் நினைக்கிறேன். தெய்வ பக்தியுள்ள முஸல்மான்கள்

தங்கள் மத குருவின் ஆணையை மதிப்பதா அல்லது பிரிட்டிஷாரின் சம்பந்தத்தை மதிப்பதா? பிரிட்டிஷ் சம்பந்தத்தில் அதிக மதிப்பு வைக்க மாட்டார்கள். முஸல்மான்கள், வெளிப்படையாகவும் கபடமின்றியும், கௌரவமாகவும் கூறுவ தென்னவென்றால், பிரிட்டிஷ் ஜாதியார், இஸ்லாம் மதத்தில் பற்றுகொண்டு, இந்தியாவில் வாழ்ந்து வரும் 7-கோடி ஜனங்களின் மனோ நிலையை கௌரவித்து, அதற்குத் தக்கபடி நடவாவிட்டால் அவர்கள் இஸ்லாம் மதத்தின்பால் விசுவாஸமுள்ளவர்களாகக் கருதப்பட மாட்டார்களென்பதேயாம். ஆதலின், இச் சமயத்தில் நமது முஸல்மான் சகோதரர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை எப்படிச்செய்வதென்று கவனிக்க வேண்டியது இந்திய சகோதரர்களின் கடமை. இச் சமயத்தைக் கை நழுவ விட்டால், இந்தியர் இன்னும் நூறு வருஷத்திற்குத் தம் முஸ்லிம் சகோதரர்களிடம் கொண்டுள்ள நல்ல எண்ணம், நேச பாவம் இவைகளைக் காரியத்தில் காட்ட முடியாது. இதுகாறும் முஸ்லிம்கள் இந்துக்களின் சகோதரர்கள் என்று கூறி வந்ததை இதுசமயம் விட்டுவிட்டால் பின்னர் அநுஷ்டானத்தில் நம்மால் காட்டஇயலாது. பிரிட்டிஷாரின் கூட்டுறவை நாம் பெறுவதன் முன்னர், முஸ்லீம்களின் கூட்டுறவைப் பெற்றோமென்பதை இந்துக்கள் உணர்வார்களாயின், உடனே முஸ்லீம்களின் கோரிக்கை நியாயமானதென்று தோன்றினால், அவர்கள் கோரிக்கை மத சம்பந்தமான திக்கத்தைப் பெரிதும் கொண்டதென்று கரு

தினுல், முஸல்மான்களுக்கு எல்லா விஷயத்திலும் உதவி செய்ய வேண்டுவதைத் தவிர, வேறு வழி கிடையாது. அவர்களுடைய கோரிக்கை நியாய மானதா யிருப்பதன்றி, இந்தியாவுக்குக் கௌரவத் தைக் கொடுத்து எவ்வித ஆபத்தும் நேரிடாமல் காக் கக் கூடியதாயு மிருக்கின்றது. இது முஸல்மான்கள் ஒப்புக் கொண்ட வெளிப்படையான விஷயமாகும். ஆதலின் இந்துக்களும் மஹம்மதியரும் ஒற்றுமை யாய் இருந்து, ஐரோப்பாவி லுள்ள கிறிஸ்தவர்களைப் பார்த்து, நாங்கள் மிக்க ஈன ஸ்திதியி லிருந்த போதி லும் எங்கள் சுய மதிப்பைக் காத்துக்கொள்ள எங்க ளுக்குத் திறமை யுண்டென்றும், எங்கள் சுய மதிப் பையும் மத கௌரவத்தையும், உயிரைக் கொடுத்துக் காப்போமென்றும் நன்றாக இடித்துக் கூறவேண்டும். இதுதான் கிலாபத் விஷயம்.

பஞ்சாப் விஷயம்

சென்ற நூறு வருஷங்களில் நடந்த சம்பவங்கள் பலவற்றுள் பஞ்சாபில் நடந்த சம்பவமே ஜனங்கள் மனத்தை மிக்க அதிகமாகப் புண்படுத்தி விட்டது. 1857-ம் வருஷத்தில் நடந்த சிப்பாய்க் கலகத்தையும் நாம் மறக்கவில்லை. அந்தக் காலத்தில் இந்தியா எத்த கைய துன்பத்திற் குட்பட்டு வருந்தியதாயினும், இப் படி ரௌலட் சட்டத்தை யுண்டுபண்ணி இந்தியாவை அவமானப்படுத்த வில்லை. ஆதலின் இச்சம்பவம் இந்தியாவின் சரித்திரத்தில் இதுவரையில் நடந்திராத கொடுமை யென்றே சொல்லவேண்டும். பஞ்சாபில் நடந்த படுகொலை விஷயத்தில், நீங்கள் பிரிட்டிஷ்ஜாதி

யாரிடத்தி லிருந்து நீதி கிடைக்கு மென்று எதிர்ப் பார்த்தீர்கள். நீதி கிடைப்பதற்குரிய மார்க்கங்களை யும் செவ்வனே எடுத்து அறிவித்தீர்கள். காமன்ஸ் சபையினர், பிரபுக்கள் சபையினர், ஸ்ரீமான் மாண் டேகு, இராஜப் பிரதிநிதி இவர்கள் ஒவ்வொருவருக் கும் இந்தியர்களின் உள்ளம் எத்தகைய நிலைமையி லிருக்கிறதென்று நன்றாய்த் தெரியும். பார்லிமெண் டின் இரு சபைகளும், இந்தியா மந்திரியும், இராஜப் பிரதிநிதியும், நீதி யளிக்க விருப்பமில்லை என்று காட்டிவிட்டார்கள். இக் கஷ்டத்தை நிவர்த்தி செய்து கொள்ள நமது தலைவர்கள் ஒருவித ஏற் பாடு செய்ய வேண்டியது இன்றி யமையாததாகும். நாமே முன்னின்று நமது செய்கையின் மூல மாக, நம்மையாளும் பிரிட்டிஷ் ஜாதியா ருக்கு, நாம் மனிதர்களே என்று நன்றாய் விளக்காமற் போவோமாகில், அவர்களுக்கும் நமக்கும் இனி எத் தகைய நேச பாவமும், சம்பந்தமும் இருக்க முடி யாது. ஆதலின், மிக்க அருமையானதும், எதிர்க்க முடியாததுமான "உதவி மறுத்தல்" என்ற கொள் கையை மேற்கொள்ளுமாறு உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன்.

சட்டத் தவறான முறையோ?

"உதவி மறுத்தல்" என்பது சட்டத்திற் கிணங் காத முறை என்று எனக்குச் சிலர் சொல்லுகிறார் கள். அதை நான் துணிவுடன் மறுக்கின்றேன். "உதவி மறுத்தல்" என்பது மிக்க நீதியான தர்மம். அது ஒவ்வொருவருக்கும் உடன் பிறந்த உரிமை.

ஆதலின், அது சட்ட நெறிக் கிணங்கியதென்றே நன்ருய்க் கூறுகிறேன். ஒரு பிரிட்டிஷ் இராஜ்யாபிமானி, பிரிட்டிஷ் சட்ட அமைப்பைக் கொண்டு, கொடிய கலகத்தையும், சட்டத்திற்கு இணங்கியதென்று நிரூபித்து விடலாமெனத் தக்க ஆதாரங்களைச் சரித்திரங்களி னின்றும் எடுத்துக் காட்டியே கூறி யிருக்கிருர். பலாத்காரமான வழியில் எவ்வித கலகம் நிகழ்ந்தாலும் அதைச் சட்டத்திற் கிணங்கிய முறை என்று நான் சொல்லவே மாட்டேன். பலாத்காரமான, முறை பயன்படக்கூடிய முறையாயிருப்பினும் அது இந்தியாவுக்கு ஏற்றதன்று.

எனது சகோதரரும் நண்பருமான ஜனுப் ஷௌகத் ஆலிக்குப் பலாத்காரமுறையில் நம்பிக்கைஉண்டு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாகஆயுதம் தாங்கிநிற்க முடியுமாளுல், அவர்பயப்படாமல் ஆயுதமேந்தி நிற்பார். சண்டை செய்வதாளுல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு தான் யுத்தம் செய்ய வேண்டுமென்று அவர் உணர்கிருர். ஆளுல், அவர் உண்மையான போர்வீரராய் இருந்து, இந்தியாவிற்கு பலாத்கார முறை இணக்கமுள்ள தல்ல வென்பதை யுணர்ந்து, என்னுடன் கலந்து, எனக்கு எல்லாவித உதவியும் புரிவதாக வாக்குத் தத்தம் செய்து கொடுத்திருக்கிருர். அவர் எவ்வளவு காலம் என்னுடன் கலந்திருக்கிருரோ, அவர் எவ்வளவு காலம் எனது கொள்கையில் பற்றுதல் கொண்டிருக்கிருரோ, அவ்வளவு காலம் அவர் ஓர் இங்கிலீஷ்காரனுக்காவது, உலகிலுள்ள எந்த மனிதனுக்காவது, பலாத்காரமான

தீங்கு இழைக்க மாட்டார். இதுகாறும் அவர் தமது வார்த்தையைப் பக்தியுடன் காப்பாற்றி வந்திருக்கிறார். நான் சொல்லுகிறபடி அவர் பலாத்காரமற்ற, ஒத்துழையாமையைக் கொண்டு உதவி மறுத்து வருவார் என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகின்றேன். ஜனுப் ஷௌகத் ஆலியைப்போலச் சிறந்த போர் வீரர் பிரிட்டிஷ் ராஜ்யத்திற்குள் கிடையாதென்று நான் கூறுவேன்.

ஆயுதந் தாங்கி யுத்தஞ் செய்யும் சமயம் எப்போதேனும் நேர்ந்து விடுமேயாயின், நான் அப்போது ஹிந்துஸ்தானத்திலுள்ள காடுகளுக்குட் சென்று விட வேண்டியதுதான். எப்பொழுது இந்தியா கத்திஎடுத்து, யுத்தம்செய்யத் துவக்குகிறதோ அப்பொழுதே, இந்தியன் என்ற கௌரவம் கொண்ட என் வாழ்க்கை முடிவெய்தி விடும். ஏனெனில் இந்தியா பெற்றுள்ள உத்தமமான தருமமும், நமது முன்னோர் பல்லாண்டுகளாக அனுஷ்டித்து வந்த தருமமுமான கொள்கை எதுவோ, அதை நான் கொண்டுள்ளேன். நீதி என்பது இந்நெடிய உலகில் பலாத்காரத்தினு லல்லாமல் சுயநலத் தியாகம் ஒன்றினுலேயே கிடைக்கக் கூடியது.

இதையே நம் பெரியோர் யக்ஞம் என்றும், குர்பானி என்றும் கூறி யிருக்கிறார்கள். நான் அந்தக் கொள்கையை, எப்பொழுதும் பற்றியே இருப்பேன். பலாத்காரமே சிறந்த முறையெனப் போற்றும், என் நண்பர் பலாத்காரம் செய்யாத உதவி மறுத்தலை, வீரமற்றவர்களின் கொள்கை எனக் கருது

கின்றார். ஆனால், நான் இந்த உதவி மறுத்தலே பலாத்காரத்தை விட, மிக்க பலமான முறையென்று கூறுகின்றேன். சத்துருக்களின் முன்னிலையில் ஆயுதமின்றி, மார்பில் குண்டைத் தாங்கி இறப்பதே சுத்த வீரரின் இலட்சியம்.

ஆதலின், கற்றோர் நிறைந்த இம்மாகாண வாசிகளுக்கு உதவி மறுத்தல் என்பது பலாத்காரமான முறையாயிராத வரையில் அது சட்ட விரோதமானதல்லவென்று அறிவித்துக் கொள்ளுகிறேன்.

ஒத்துழையாமை விதிகள்

"நான் உங்களிடம் ஊழியம் செய்யமாட்டேன்" என்று ஒருவன் பிரிட்டிஷ் இராஜாங்கத்தாருக்கு அறிவிப்பதென்றால் அது சட்ட விரோத மாகுமா? நமது அக்கிராசனர் தாம் கொண்டுள்ள பட்டங்களை அரசாங்கத்தாருக்குத் திருப்பி அனுப்பி விடுவாராயின் அதுகூட சட்ட விரோத மாகுமா? அரசாங்கத்தாரின் பள்ளிக்கூடம் அல்லது அரசாங்க ஆதரவு பெற்ற பள்ளிக்கூடம் இவைகளிலிருந்து பெற்றோர் தங்களது பிள்ளைகளை விலக்கிக் கொள்ளுவது சட்ட விரோதமான காரிய மாகுமா? எப்போது, எது வரையில், இந்நாட்டில், சட்டங்கள் நம்மை முன்னேற்றம்செய்யாது, பின்னையே தள்ளிக்கொண்டு போகின்றனவோ அதுவரை, நான் அச் சட்டங்களை ஏற்று வாதிக்க மாட்டேன் என்று வக்கீல்கள் கூறி விடுதல் சட்ட விரோத மாகுமா? எங்கள் தேசத்தினரின் விருப்பத்தைக் கவனித்து அதற்கு வேண்டியன செய்யாத ஒரு அரசாங்கத்தில் "நாங்கள் வேலை

செய்ய மாட்டோ" மென்று ஸிவில் உத்தியோகஸ்தர்களும் ஜட்ஜிகளும் சொல்லி வேலையை விடுவதென்ருல அது சட்ட விரோத மாகுமா? ஒரு போலீஸ்காரன், அல்லது போர்வீரன் தனது தேசத்தின் ஜனங்களை அவமதிப்பாகக் காட்டும்படியான தன் வேலை வேண்டியதில்லை என்று இராஜிநாமா செய்து விட்டால் அது சட்ட விரோதமான செயலா? பயிரிடுவோர், விவசாயிகள் இவர்களிடம் நான் சென்று, உங்கள் முன்னேற்றத்திற்குரிய காரியத்தைச்செய்யாமல் உங்களுக்குப் பல கஷ்டமுண்டாகத் தக்க காரியங்களை அரசாங்கத்தார் செய்யும்போது வரி கொடுக்க மாட்டேன் என்று சொல்லுங்களென்று கூறினேனுல் அது சட்ட விரோதமான காரிய மாகுமா?

இவைகளில் எவ்வித சட்டவிரோதமான காரியமுமில்லை என்று நான் துணிவுடன் கூறுவேன். இவைகளில் கூறியன வெல்லா வற்றையும் நான் அனுபவத்தில் செய்திருக்கிறேன். அவை சட்ட விரோதமானவை யென்று எனக்கு ஒருவரும் சொல்லவில்லை. 7-லட்சம் பயிரிடுவோர்க் கிடையில் கெய்ராவில் நான் குடிகளை, அரசாங்க வரி கட்டாமலும், விவசாயம் செய்யாமலும், இருக்கும்படி கேட்டுக் கொள்ளும் போது, நடந்த காரியங்களை, இந்தியா முழுவதும் ஆமோதித்தது. அது சட்ட விரோதமென்று ஒருவரும் கருதவில்லை. ஆனல் இந்திய ஜனங்கள் வயிற்ருல் ஊர்ந்து செல்வதும், தவழ்ந்து நகர்ந்து செல்வதும், தர்ம விரோதமாகவே காணப்படும்! தங்களுக்கு இழைக்கப்படும் அவமானங்களை எல்லாம்

இந்திய ஜனங்கள் பொறுத்துக் கொண்டிருப்பதும், தங்கள் மார்க்கத்திற்குக் கேடு நேரும்போது 7-கோடி முஸ்லிம் ஜனங்கள் சகித்துக்கொண்டு சும்மா விருப்பதும், சட்ட விரோதமே!

பஞ்சாபின் கௌரவத்தைத் தன் காலின் கீழ் போட்டு நசுக்கிய, அநீதியாகிய அரசாங்கத்துடனிருந்து ஒத்துழைப்பதே சட்ட விரோதம். உங்களுக்குக்கௌரவம்என்பது இருந்தால்,நாம்மேன்மையான பெரியோர்கள் உதித்த சந்ததியில் பிறந்தோம் என்ற மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றிருந்தால், நமது அரசாங்கத்தைப்போன்ற அநீதியான அரசாங்கத்துடன் கூட இருந்து உழைப்பது சட்ட விரோதமானதென்பதை அறிந்து கொள்வீர்களாக. நான் இங்கிலீஷ்காரருக்குச் சத்துரு வல்லன். நமது அரசாங்கத்தின் சத்துரு வல்லன். நான் ஒரு அரசாங்கத்திற்கும் சத்துரு வல்லன். ஆனால், நான் அசத்தியத்திற்கு விரோதி. மோசச் செயலுக்கு வைரி. அநீதிக்கு விரோதி. இந்த அரசாங்கம் அநீதியைப் பேசும் வரையில் என்னைக் கொடிய சத்துருவாகப் பாவித்திருக்கும். அமிர்தசரஸ் காங்கிரஸில் நான் வணக்கத்துடன், நமஸ்கரித்து அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்படி, உங்களைக் கேட்டுக் கொண்டேன்.

நான் சத்தியமாகக் கூறுகிறேன். பிரிட்டிஷ் மந்திரிகள் நல்ல ஞானமுள்ளவர்களாய், முஸ்லீம்களின் கோரிக்கைக்கு இணங்கி, நீதிசெய்வரென்றும் பஞ்சாப் விஷயத்தில் நீதிகிடைக்குமென்றும், நினைத்

றேன். ஆதலின், நாம் அவர்களுடன் நன்னம்பிக்கை கொண்டு, இராஜ மகா சாஸனத்தில் சகல துன்பங்களும் நீங்கி விடுமென்று நினைத்து, உங்களை அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்படி வேண்டினேன். இன்று அந்த நம்பிக்கையை நான் இழந்துவிட்டேன். ஆதலின் சட்ட சபைக்குப் பிரதி நிதிகளை அனுப்பி அங்கே அவர்களின் நடவடிக்கைகள் நடவாமல், தடுத்து வரவேண்டும் என்பது என் கக்ஷி யன்று. ஆனால் எத்தகைய வல்லமை பொருந்திய அரசாங்கமானலுஞ் சரி, அதை அசைய முடியாமற் செய்யத் தக்க இந்த உதவி மறுத்தலை ஆரம்பித்திருக்கிறேன். இதுதான் இப்பொழுதைய நிலைமை. நமக்கு நீதியும், மரியாதையும், கிடைக்கும் வரை அரசாங்கத்துடன் ஒத்துழைக்கப் போவது கிடையாது. நமது இந்திய மதா சாரியர்களும், நமது சாஸ்திரங்களும், நீதிக்கும் அநீதிக்கும் ஒற்றுமை ஏற்படாதென்று கூறியிருக்கின்றார்கள். அரசாங்கத்தார் நம்மைச் சாந்து வரும் வரையில், நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியமே. எப்பொழுது உங்கள் கௌரவம் கொள்ளையிடப்படுகிறதோ, அப்பொழுது அந்த அரசாங்கத்துடன், ஒத்துழையாமையே கௌரவமான காரியமாகும். இதுவே ஒத்துழையாமையின் தருமம்.

விசேஷ காங்கிரஸும், உதவி மறுத்தலும்

தேசத்தின் பிரதிநிதி சபையாகிய இந்தியன் நாஷனல் காங்கிரஸின் தீர்மானத்தை, உதவி மறுத்தல் விஷயத்தில் நாம் எதிர் பார்த்திருக்க வேண்டு

மென்று கூறப்படுகின்றது. என்னைப் பிரத்தியேக மாய்க் காத்திருக்கச் சொன்னால் நான் காத்துக் கொண்டிருப்பேன். ஆனால் முஸல்மான்களின் காரியத்தை நான் மேற்கொண்டிருப்பதால், அவர்கள் தம் மனச் சாட்சியைத் தவிர வேறெதற்கும் காத்திருக்கும்படி நான் கூறவே மாட்டேன். முஸல்மான்கள் தாம் செய்துகொண்ட சங்கற்பத்தை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். காங்கிரஸ் முஸல்மான்களுக்கு விரோதமாகத் தீர்மானம் செய்து விட்டாலும் (அங்ஙனம் நடைபெறாம லிருக்க ஈச னருள் புரிக) முஸல்மான்களைத் தனியே நின்று ஒத்துழையாமல் தமது மத கௌரவத்தை நிலைநாட்டிக்கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்வேன். ஆதலின், முஸல்மான்கள் காங்கிரஸுக்குச் சென்று எல்லாரையும் அடிபணிந்து, உதவி மறுத்தல் தீர்மானத்தைச் செய்து முடிக்குமாறு வேண்டிக்கொள்ள வேண்டும். ஆனால் காங்கிரஸ் கூடும் வரையில் அவர்கள் காத்திருத்தல் முடியாது. அவர்கள் ஆயுத மெடுப்பதா? அல்லது சமாதானமாக, உதவி மறுத்தலைக் கைக்கொள்வதா? என்று யோசித்துப் பார்த்துக் கடைசியாய் உதவி மறுத்தலைக் கைக்கொண்டு விட்டார்கள். காங்கிரஸ் என்பது பொது ஜனங்களிற் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்தை அறிவிக்கும் ஓர் கூட்டமாகும். ஆதலின் உதவி மறுத்தலில் அபிப்பிராய பேதமின்றி, அனைவரும் ஒருப்பட்டு காங்கிரஸிற்குச் செல்லவேண்டும். வேண்டியவர்கள் காங்கிரஸ் தீர்மானத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம். காங்

கிரஸ் தேச ஜனங்களின் மனோநிலையை அறிவிக்கும் இயக்கமாதலின், உங்கள் மனோ நிலையைக் காங்கிரஸ் அறிந்துகொள்ளுமாறு வேலையைத் துவக்கவேண்டும்.

சட்ட சபை விலக்கம்

உதவி மறுத்தல் இயக்கத்தில் சட்ட சபைக்கு அங்கம் பெறாது, விலகி யிருத்தல் முதற்படி என்று சொல்லி யிருக்கிறேன்.

"பஹிஷ்காரம்" என்ற பதத்தை நான் உபயோகித்தது தவறெனச் சிலர் கூறுகின்றனர். நான் பிரிட்டிஷ் சாமான்களை விலக்கல் தவறெனக் கூறி யிருத்தல் உண்மையே. அங்கு இதற்கு வேறு அருத்தமும், இங்கு வேறு அருத்தமுமுண்டு. சட்ட சபையை விட்டு விலகுவதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஏன் அப்படிச் செய்ய வேண்டுமெனில், சாமான்ய ஜனங்களுக்குத் தலைவர்களாகிற, நாம் ஒரு நிச்சயமான வழி காட்டவேண்டும். அவர்கள் மனதில் குழப்பத்தை உண்டாக்கக் கூடாது. சட்ட சபைக்குச் சென்று, இராஜ விசுவாசப் பிரமாணம் செய்து கொள்வதில்லை என்று கூறுவதில் எனக்கு நம்பிக்கை யில்லை. கண்ணியமுள்ளவர்கள் இவ்வலையில் சிக்கிக் கொள்ள மாட்டார்கள். திட்டமான ஒழுங்கு முறையை நாம் ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டியவர்களாகிறோம். எந்த பிரிட்டிஷ் மந்திரி, நம்மிடம் அநீதியாக நடந்து கொண்டாரோ, அவருடைய வலையில் நாம் இனிச் சிக்கிக் கொள்ளக் கூடாது.

இந்த அரசாங்கத்தினிடமிருந்து எவ்வளவு நன்மை கிடைத்த போதிலும், அந்த நன்மைகளுடன் அநியாயமும், தீமைகளும் வந்துகொண்டிருக்கும் வரை, அவைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. நாம் ஏதேனும் அந்த அரசாங்கத்தினிடமிருந்து, நன்மை பெற விரும்பினால், அவ்வரசாங்கம் செய்த குற்றங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். "கிரேக்கர்களிடத்து ஜாக்கிரதையாய் இருங்கள்! ஆனால் அவர்கள் ஏதேனும் சன்மானங்கள் கொண்டுவரும் சமயத்தில் இன்னும் அதிக ஜாக்கிரதையுடனிருங்கள்" என்பதாக கிரேக்க பாஷையில் ஒரு பழமொழியுண்டு. இஸ்லாம் மத விஷயத்திலும், பஞ்சாப் விஷயத்திலும், தவறிழைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயுள்ள, பிரிட்டிஷ் மந்திரிமார்களிடத்தில் எவ்வித நன்மையையும் நாம் பெறக்கூடாதென்று கூறுகிறேன். இச் சமயத்தில் நாம் அதிக ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும். இனிமேல் அவர்களுடைய வலையில் நாம் சிக்கிக் கொள்வோம். ஆகையினாலேயே சட்ட சபையில் எவ்விதமான அபேட்சையும் கொள்ளக்கூடாதென்று கூறுகிறேன். தேச ஜனங்களின் பிரதிநிதிகளாகிய நாம் சட்ட சபைக்குள் புகாவிட்டால், ஜனப்பிரதிநிதிகளல்லாத மிதவாதிகள், சட்ட சபைக்குட் புகுந்து விடுவார்கள் என்று சிலர் கூறுகின்றனர். இதை நான் அங்கீகரிக்க முடியாது. மிதவாதிகள் யாருடைய பிரதிநிதிகளாய் இருக்கிறார்கள் என்பதும் எனக்கு நன்கு விளங்கவில்லை. மிதவாதிகளுக்குள்ளும் கெட்டவர்களும் நல்லவர்களும் இருக்

கிறார்கள். தேசீய வாதிகளுள்ளும் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கிறார்கள். உதவி மறுத்தல் என்னும் இயக்கத்தை ஆரம்பிப்பது பெரும்பாவமென்று சில மிதவாதிகள் உண்மையில் நினைக்கிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தினின்றும் நான் மாறுபடுகிறேன். அவர்கள் எலெக்ஷனுக்கு நிற்பார்களானால், தாங்களே ஒரு வலை ஏற்படுத்தி அதற்குள்ளே சிக்கிக் கொள்வார்கள் என்று நான் கூறுகிறேன். அவர்கள் சட்ட சபைக்கு நிற்பதினால் என்னுடைய நிலைமை ஒருபோதும் மாறவில்லை. சட்ட சபைக்குள் புகக்கூடாதென்று என் மனச்சாட்சி கூறினால் நான் அதன்படியே நடக்கவேண்டும். 99-பேர் சட்ட சபையில் அங்கம்பெற விரும்பினால், அதைப் பொருட்படுத்த வேண்டிய அவசியம் எனக்கில்லை. இந்த ஒருவழியிலேயே தான் பொது ஜன ஊழியம் செய்யக்கூடும். இந்த ஒரு வழியிலேயே தான் நாம் சீர்திருத்தங்களைப் பெறலாம். இந்த விஷயம் மத சம்பந்தமான ஒரு விஷயமாயிருந்தால் அந்த கொள்கைப்படி நான் நடந்தே தீரவேண்டும். இது சம்பந்தமாக நான் இறந்து போனால் அங்ஙனம் இறந்து போவது உத்தமமே யாகும். நான் உயிருடனிருந்து கொண்டு என்மதத்திற்கு விரோதமாயிருக்கலாமா? ஆகையினால் சட்ட சபைக்குள் சென்று அங்கம்பெற முயல்வது பெருந்தவறு என்று நினைக்கிறேன். இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடாதென்று நாம் உணர்ந்து விட்டால் தலையிலிருந்தே நாம் உதவி மறுத்தலைத் துவக்கவேண்டும்

ஜனங்களின் உண்மையான பிரதிநிதிகள் நாமே. ஆகையால் இந்த உதவி மறுத்தல் என்னும் இயக்கத்தைப் பற்றிப் பேச நமக்கே உரிமையுண்டு. ஆகையால் உதவி மறுத்தல் இயக்கத்தைக் கைக்கொண்டு சட்டசபையில் அங்கம்பெற முயல்வது முற்றிலும் விரோதமானது.

உதவி மறுத்தலும் வக்கீல்களும்

நான் மற்றொரு கஷ்டமான விஷயத்தைப் பற்றிக் கூறியிருக்கிறேன். அதாவது வக்கீல்கள் தங்கள் தொழிலை விட்டுவிட வேண்டுமென்பதே யாகும். வக்கீல்கள் மூலமாகவே அரசாங்கத்தார் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள், என்பதை நான் நன்கு அறிகையில் இதைத் தவிர வேறு எந்தமுறையை அனுஷ்டிக்கச் சொல்வேன் ? நமக்குத் தலைவரா யிருப்போர் வக்கீல்களே என்பதையும், நாட்டின் முன்னேற்றத்திற்காகச் செய்யும் கிளர்ச்சிகளில் அவர்களே தலையிடுகிறார்கள் என்பதையும், நான் நன்கு அறிவேன். ஆனால் அரசாங்கத்தாருக்கு விரோதமாக ஓர் இயக்கம் ஏற்பட்டு விட்டால், அப்பொழுது அரசாங்கத்தார் வக்கீல்கள் மூலமாகவே தங்கள் கௌரவத்தையும் செல்வாக்கையும் காப்பாற்றிக்கொள்ள முயல்கிறார்கள். ஆகையால், தங்களுடைய தொழிலை நிறுத்தி வைக்க வேண்டுமென்று என் வக்கீல் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தங்களுடைய கௌரவ உத்தியோகங்களை இனி ஒரு நிமிஷமும் வகித்திருக்க முடியாதென்று அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து விடவேண்டுமென வக்கீல்

களைக் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்திற்கு உதவி செய்ய, மறுத்துவிட வேண்டுமென்று அவர்கள் விரும்பினால், அவர்கள் தங்கள் தொழிலினின்றும் உடனே நீங்கவேண்டும். ஆனால் அப்பொழுது சட்டமும் ஒழுங்கும் எந்த நிலையில் நிற்கும் என்ற கேள்வி உடனே பிறக்கும். நாம் சட்டத்தையும் ஒழுங்கையும் இந்த வக்கீல்கள் மூலமாகவே பெறுவோம். நமக்குள்ளே பஞ்சாயத்துக்களை ஏற்படுத்திக்கொண்டு, நியாயத்தையும் ஒழுங்கையும் சரிவர நடத்துவோம்.

பெற்றோரும் உதவி மறுத்தல் இயக்கமும்

அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் நம் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமல் நிறுத்திவிட வேண்டுமென்று நான் ஒரு யோசனை கூறி யிருக்கிறேன். கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்களைக் காலியாக்கி விட வேண்டுமென்பது தான் என் யோசனை. இதைத் தவிர வேறென்ன நான் செய்ய முடியும்? தேசிய உணர்ச்சி எவ்வளவு தூரம் பரவியிருக்கிறதென்று நான் எப்படிக் கண்டுகொள்ளக் கூடும்? மகம்மதியர்கள் உண்மையில் கிலாபத் விஷயத்தை உணர்கிறார்களா என்பதைக் கண்டுகொள்ள வேண்டும். மகம்மதியர்கள் உண்மையில் உணர்வார்களாகில் தங்களுடைய அவநம்பிக்கைக்குப் பாத்திரமாயுள்ள ஓர் அரசாங்கத்தாரால் நிர்வகிக்கப்படும் பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்ப மாட்டார்கள். இந்த அரசாங்கத்துக்கு எவ்வித உதவியும் செய்ய எனக்கு இஷ்டமில்லையானால், அதனிட

மிருந்து நான் உதவியை எதிர் பார்க்கலாமா? கவர்ன் மெண்டின்கீழ் வேலை செய்வதற்குக் குமாஸ்தாக்களை உண்டுபண்ணும் தொழிற்சாலைகளாக நான் தற்காலத்துப்பள்ளிக்கூடங்களைக் கருதுகிறேன். ஆகையால், அரசாங்கத்திற்கு உதவி செய்தலை மறுக்க வேண்டுமென்பது என் விருப்பம் எனவே, குமாஸ்தாக்களை உண்டாக்கும் இந்தச் சாலையின் வேலையை நிறுத்த வேண்டிய தவசியமல்லவா? இந்த விஷயத்தை எந்தவழியாக வேண்டுமானாலும் யோசித்துப் பாருங்கள். உதவி மறுத்தல் இயக்கத்தில் அதிக நம்பிக்கைக் கொண்டு, உங்கள் பிள்ளைகளைக் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவது முடியாத காரியமேயாகும்.

பட்டதாரிகளின் கடமை

பட்டதாரிகள் தங்கள் பட்டங்களை விடவேண்டுமென்று நான் யோசனை சொல்லி யிருக்கிறேன். இந்த அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட கௌரவங்களையும், பட்டங்களையும், நாம் எங்ஙனம் வைத்துக்கொண்டிருக்கலாம்? நம் நாட்டுக் கௌரவம் அரசாங்கத்தாரிடத்துப் பத்திரமா யிருக்கிறதென்று நம்பி யிருந்தபோது, அந்த பட்டங்களுக்குரிய சின்னங்கள் கௌரவமாகக் கருதப்பட்டன. ஆனால் அச் சின்னங்கள் இப்பொழுது கௌரவச் சின்னங்களல்ல, அகௌரவச் சின்னங்களே. இந்த அரசாங்கத்திடமிருந்து நாம் நியாயத்தைப் பெற முடியாதபோது இந்தச் சின்னங்கள் நமக்கு அவமானம் தரத்தக்கவையாகும். சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற முறையிலேயே பட்டதாரிகள் தங்கள் பட்டத்தை வைத்துக்

கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஒரு நிமிஷங் கூட யோசனை செய்யாமல் பட்டதாரிகள் தங்கள் பட்டத்தை விட்டுவிட வேண்டும். என் மகம்மதிய சகோதரர்கள் இந்த முதற் கடமையில் தவறி விட்டார்களானால் அவர்கள் இந்த உதவி மறுத்தல் இயக்கத்தில் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள். தலைவர்களை நீக்கிவிட்டு, பிரெஞ்சுக் கிளர்ச்சிக்காரர்கள் வெற்றி பெற்றதைப்போல் நமது ஜனங்களும், தலைவர்களின் உதவியின்றி, இந்த உதவி மறுத்தல் இயக்கத்தை கைக்கொண்டாலன்றி, இந்த இயக்கம் வேறு விதத்தில் வெற்றிபெற முடியாது. கலகம் வேண்டுமென்று நான் கூறவில்லை. அமைதியுள்ள முன்னேற்றத்தையே நான் விரும்புகின்றேன்; குழப்பத்தை நான் விரும்பவில்லை. இந்தக் குழப்பத்தினின்றும் நான் உண்மையான அமைதியுள்ள முன்னேற்றமே வேண்டுமென்று விரும்புகின்றேன். ஜனங்களுடைய சுதந்திரத்துக்கு விரோதமாய் இராஜ்ஜியாதிகாரம் செலுத்தி வந்த, ஒரு ஜன விரோதியான அதிகாரி நாட்டில் கலகமில்லாமல் செய்தால் அதை நான் அமைதி என்று சொல்ல முடியாது. இந்த அநியாயத்தினின்றும் நியாயம் பிறக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆகையாலேயே இந்த உதவிமறுத்தல் இயக்கத்தைப் போதிக்கிறேன். இந்த இயக்கத்தின் உண்மைகளை நீங்கள் அறிந்து கொண்டீர்களானால், நமக்கு விரோதமாய் நிற்பவர்கள் நம்மீது கத்தியை வீசினாலும் ஒரு கோபமான வார்த்தையைச் சொல்ல நீங்கள் துணியமாட்டீர்கள்.

உதவி மறுத்தல்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு ஒரு நன்மை

இந்த அரசாங்கத்தின் முறைகள் ஒழுக்க மற்றவை என்றும், அநியாயமானவை என்றும், அசத்தியமானவை என்றும், இழிவான தன்மை என்றும் நான் எண்ணுவதால் இந்த வார்த்தைகளை மிக்க கோபத்துடன் கூறியதாக நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம்.

மேற்கூறிய அடை மொழிகளை நான் மிக்க யோசனையுடனேயே உபயோகிக்கின்றேன். இந்த அடைமொழிகளை என் சொந்தச் சகோதரனிடத்தே உபயோகித்திருக்கிறேன். என்னுடைய சகோதரன் இப்பொழுது இறந்து போய்விட்டான். அவனுடைய காரியங்கள் யாவும் அநியாயமானவை என்றும், ஒழுக்கமற்ற அஸ்திவாரத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன வென்றும் நான் அவனிடம் அடிக்கடி கூறுவேன். அவன் அசத்தியவான் என்று உரைப்பது உண்டு. இப்படி நான் கூறிவந்ததால் அவனிடத்தில் எனக்குக் கோபம் இல்லை. அவனை நான் நேசித்தமையால் நான் இவ்வார்த்தைகளைக் கூறினேன். அதே மாதிரி பிரிட்டிஷாரை நான் நேசிக்கிறேன். அவர்களுடைய கூட்டுறவை நான் விரும்புகின்றேன். ஆனால் தக்க நிபந்தனைகளுடனேயே அவர்களுடைய கூட்டுறவை நான் விரும்புகின்றேன். அவர்களுடன் சமமான அந்தஸ்தைப் பெற நான் விரும்புகின்றேன். அந்த சம அந்தஸ்தை நான் பெறுவிட்டால் அவர்களுடைய கூட்டுறவு

எனக்கு வேண்டாம். இந்த உதவி மறுத்தல் இயக்கம் ஒருவாறு முடிவுபெற்ற பிறகு, ஸ்ரீ மாண்டேகுவுக்குப் பின் வருகின்றவர்கள் நான் இந்த உதவி மறுத்தல் இயக்கத்தை ஆரம்பித்ததினால் ஏகாதிபத்யத்திற்குப் பெரிய நன்மை செய்ததாக எனக்குக் கௌரவம் அளிப்பார்கள் என்பது நிச்சயம். இளவரசரை நான் பஹிஷ்காரம் செய்யவில்லை. ஆனால் இந்த அரசாங்கத்தாரின் தூண்டுதலின்மேல் ஏற்பட்ட அவர் தம் வரவைத்தான் நான் பஹிஷ்காரம் செய்கிறேன். இஃதொன்றினாலேயும் ஏகாதிபத்யத்திற்கு நான் நன்மை செய்தவனாகக் கருதப்படுவேன். இவ்விஷயத்தில் நான் தனிமையாக நின்றபோதிலும், இளவரசரை வரவேற்கக் கூடாதென்று நான் இந்திய சமூகத்தை தூண்டுதல் செய்ய முடியாவிட்டாலும் நான் இளவரசரின் வரவைப் பஹிஷ்காரம் செய்வேன். ஆகையால் அதர்மம் எள்ளளவும் சம்பந்தப்படாத இந்தத் தர்ம எதிர்ப்பைக் கைக்கொள்ளும்படி உங்களுக்குக் கூறுகிறேன். கனவு காண்போன் கூறும் யோசனை யன்று இது. ரிஷி கூறும் யோசனையு மன்று. நான் கனவு காண்கிறவனல்லன்; ஒரு ரிஷியு மல்லன். உங்களைப்போன்ற சாதாரணமான ஒரு மனிதனே நான். உங்களுக்குள்ள குற்றங் குறைகள் யாவும் என்னிடத்தில் உள. ஆனால் நான் உலகத்தை நன்கு உணர்ந்திருக்கிறேன். என் கண்களைத் திறந்த வண்ணம் நான் இந்த உலகத்தில் வசித்து வருகிறேன். மனிதனுக்கு ஏற்படும் பல கஷ்டங்களை நான் அநுபவித்திருக்கிறேன். என்னுடைய

இந்து மதக் கொள்கைகளின் இரகசியங்களை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். உதவிமறுத்தலானது ஒரு ரிஷியின் செயல்மாத்திரமல்ல. சாதாரண குடும்ப காரியங்களைச் செய்யக் கடமைப்பட்டுள்ள ஒவ்வொருவனுடைய வேலையுமாகும். ஐரோப்பியர் தங்களுடைய ஜனங்களுக்கு வாள்வலிமையைப் பற்றியே போதித்து வந்திருக்கின்றனர். ஆனால் இந்தியாவின் கௌரவத்தை இதுகாறும் காபாற்றிவந்த ரிஷிகள், தியாகத்தையே நமக்குப் போதித்திருக்கிறார்கள். இந்த முதல்பாடத்தை நாம் கற்றுக்கொள்ளாவிட்டால் நாம் நம் வாள்வலிமையையும் காட்டத் திறமையற்றவர்க ளாகிவிடுவோம். இந்தப் பாடத்தையே என் சகோதரர் ஷவுகத் ஆலி இப்பொழுது கற்றுக்கொண்டார். இதனாலேயே அவர் உதவிமறுத்தல் இயக்கம் நீடூழி வாழ்க என்று கூறுகிறார். இந்த மகா யுத்தத்தின்போது இங்கிலாந்தில் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் பிள்ளைகள் நிறுத்தப்பட்டார்களென்பதையும்,கேம்பிரிட்ஜிலும், ஆக்ஸ்போர்டிலும் உள்ள கலாசாலைகள் மூடப்பட்டுபோய்விட்டன என்பதையும் உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். வக்கீல்கள் தங்கள் உத்தியோகத்தைவிட்டு அரண்களில் நின்று சண்டை போட்டார்கள். நீங்கள் அரண்களுக்குப் போகவேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால் இங்கிலாந்திலுள்ள வாலிபர்கள் செய்த தியாகத்தையே நீங்கள் செய்யவேண்டுமென்று நான் கூறுகிறேன். சிறியசமூகத்தார்களாகிய போயர்கள்பெரிய ஓர் இனத்துடன் சண்டைப் போட்டார்கள். அவர்களுடைய

வக்கீல்கள் தங்கள் வேலையினின்றும் அக்காலம் நீங்கினார்கள். அங்குள்ள தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளை பிரிட்டிஷாருடைய பள்ளிக்கூடங்களுக்குச் செல்லவேண்டாமென்று கூறினார்கள். எனவே இந்த வாலிபர்கள் தேசத்தின் பொருட்டு யுத்தம் புரியும் சுயேச்சா புருஷர்களாகச் சேர்ந்து கொண்டார்கள். இவைகளை யெல்லாம் நான் என் கண்களால் பார்த்திருக்கிறேன். இந்தியாவிலுள்ள என் சகோதரர்களை நான் வேறொன்றும் கேட்டுக்கொள்ளவில்லை. தியாகம் செய்யவேண்டுமென்றே கேட்கிறேன். நீங்கள் கொடுமைச் செயல்களை அனுஷ்டிக்கவேண்டுமென்ற கட்சியில் சேர்ந்திருந்தாலும் சரி! அநுஷ்டிக்ககூடாதென்ற கட்சியில் சேர்ந்திருந்தாலும் சரி! முதலில் நீங்கள் தியாகம் செய்தே தீரவேண்டும்.

இந்திய சமூகமானது தான் அடையவேண்டும் என்று சங்கற்பித்துக்கொண்டிருக்கிற ஸ்தானத்தை அடைய என்னென்ன வழிகள் உண்டோ அவைகளின்படி ஜனங்களை நடத்திக்கொண்டு செல்ல என் தலைவர்களுக்கு அறிவையும் ஆற்றலையும் ஈசன் அருள்வாராக!

இந்திய ஜனங்களுக்கும் கடவுள் நல்லவழி இஃது என்று காட்டி அந்தக் கடினமான, மார்க்கத்தில் நடக்கப் போதிய அறிவும் ஆற்றலும் தந்தருள்வாராக!

கல்கத்தா காங்கிரஸில் பேசியது

1920-ம் வருடம் செப்டம்பர் மாதம் கல்கத்தா நகரில் கூடின விசேஷ காங்கிரஸ் மகாசபையில் ஒத்

துழையாமைத் தீர்மானத்தை மகாத்மா காந்தி பிரே ரேபித்துப் பேசியது பின்வருமாறு :—

இம் மகாசபை முன் இத் தீர்மானத்தைக் கொண்டுவருவதனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பை நான் உணர்வேன். நன்றாகவும் உணர்வேன். இத் தீர்மானத்தை நீங்கள் அங்கீகரிப்பதினால் உங்களுடைய கஷ்டமும் எனது கஷ்டமும் அதிகரிக்கும் என்பதை நான் நன்கு உணர்வேன். சுய உரிமைகளையும் தன் மதிப்பையுங் காபாற்றிக்கொள்ள இந்தியா இதுகாறும் என்ன முறைகளை அனுசரித்ததோ அம் முறைகளை மாற்றுவதாக இத் தீர்மானம் இருக்கிறது என்பதையும் நன்கு அறிவேன். நம் தேசத்திற்காக அரும் பாடுபட்டு நம்முடைய மரியாதைக்குரிய தலைவர்களிற் பலர் இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக இருக்கிறார்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன். இத் தீர்மானம் நிறைவேற்றப் படுமானால் அதிக தீமை வரும் என்று எண்ணி இதனைத் தங்களாலானவரை எதிர்த்து நிற்பது தம் பெருங் கடமையென அத் தலைவர்கள் நினைத்திருக்கிறார்கள். இத்தகைய கஷ்டங்களை நான் நன்கறிந்தும், என் பொறுப்புகளை நன்குணர்ந்தும், நாட்டின் தலைவர்களுக்கு என்னால் செய்யக் கூடிய மரியாதையைச் செய்தும்,கடவுளின் ஆணைக்கு அஞ்சி, என் தாய் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளுள் ஒன்றெனக் கருதி இத் தீர்மானத்தை அங்கீகரிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ள இங்கே முன்னிற்கிறேன். ஆனால் நான் காந்தி என்பதுபற்றி என் வார்த்தைகளுக்குத் தனியாக மதிப்பை வைக்க

வேண்டாம். வார்த்தைகளின் உண்மைக் கேற்ற மதிப்பையே வைக்கும்படி உங்களை வேண்டுகிறேன். என்னை ஒரு யோகி என்று சிலர் அழைக்கின்றனர். பிறரை அதிகாரஞ் செய்ய விரும்புகின்றேன் என்று என்னைச் சிலர் குறை கூறுகின்றனர். இந்த இரண்டு குணங்களும் என்னிடத்தில் இல்லை. இவ் விரண்டையும் தவிர்த்த ஒரு தனிமனிதனாகவே உங்கள் முன்னிலையில் நான் நிற்கிறேன். இத் தீர்மானத்திலுள்ள நியாயத்தை எடுத்துக் காட்டவும், இத் தீர்மானத்தின் மீது உங்கள் மனத்தைத் திருப்பவுமே நான் உங்கள் முன்னர் நிற்கிறேன். உதவிமறுக்கும் விஷயத்தில் எனக்குள்ள அனுபவத்தை எடுத்துச் சொல்லவே நான் இங்கு வந்து நிற்கிறேன். உதவி மறுத்தல் தர்மம். இந் நாட்டிற்குப் புதியதென்று இதற்குமுன் இரண்டு உபந்நியாசகர்கள் கூறினார்கள். ஆனால் அதை நான் மிக்க வணக்கத்துடன் மறுக்கிறேன். இந்த வுதவி மறுத்தல்முறை நெடுநாட்களுக்குப் பிறகு இப்பொழுது புதிதாக அனுஷ்டிக்கப்படுகிறதென்பதை நான் அங்கீகரிப்பேன். இந்த உதவிமறுத்தல் இயக்கத்தைப்பற்றிப் பலர் பேசியிருக்கின்றனர்; பலர் எழுதியிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் சேர்ந்த பல பொதுக்கூட்டங்களில் இந்த வுதவிமறுத்தல் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. நமது முஸல்மான் ஸகோதரர்கள் ஆகஸ்டு மாதம் முதல்தேதி முதல் இந்த வுதவிமறுத்தல் இயக்கத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து விட்டார்கள். இத் தீர்மானத்தில் காணப்படும் அமிசங்களிற் பல இப்பொ

மூது ஒருவாறாக அநுஷ்டிக்கப்படுகின்றன. ஆகையால் இத் தீர்மானத்தை அகாலத்தில் உங்கள் முன்னர் கொண்டுவரவில்லை. ஆனால் இத் தீர்மானத்தைப் பற்றி யோசிக்கும்போது உங்கள் உள்ளத்தில் மனிதர்களைப்பற்றிய எண்ணம் ஒன்றுமே உண்டாக வேண்டாம். இத் தீர்மானத்தைப்பற்றி பக்ஷபாதமின்றி மிக்கப் பொறுமையுடன் ஆலோசிக்கவேண்டுமென்று உங்களைக்கேட்டுக்கொள்கிறேன். இத் தீர்மானத்தை அங்கீகரிப்பதாலாவது எதிர்ப்பதாலாவது உதவி மறுத்தல் இயக்கம் நின்றுவிடுவதாக நினைக்க வேண்டாம். இத் தீர்மானத்தை அங்கீகரிப்பதினால், இதன் அமிசங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டியது உங்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆகையால் நீங்கள் பொறுமையுடன் என் உபந்நியாசத்தைக் கேட்பீர்களாக. உபந்நியாச நடுவில் கைதட்டவும் வேண்டாம் இடையூறு செய்து பேசவொட்டாதவாறும் செய்யவேண்டாம். நீங்கள் உதவிமறுக்கும் இயக்கத்தை அங்கீகரிப்பீர்களேயானால் எந்தஉபந்நியாசகரையும் பேசவொட்டாதவாறு செய்யக்கூடாது.

கோபிகள், உதவிமறுத்தல் முறைகளைக் சரியாக அநுஷ்டிக்க முடியாது. இந் நாட்டிற்குச் செய்யப்பட்டிருக்கும் தவறுகளை என் நாட்டவர் உணர்வதைவிட நான் அதிகமாக உணர்கிறேன். எல்லாரையும்விட அதிகமான கோபத்தை நான் கொண்டிருக்கிறேன். ஆனால் முப்பது வருஷகாலமாக எனக்குள்ள அநுபவத்தினால் நான் ஒரு பெரிய பாடங் கற்றுக்

கொண்டிருக்கிறேன். அதாவது கோபத்தை யெல்லாம் சேர்த்து அடக்கிவைப்பதேயாகும். உஷ்ணம் ஓரிடத்தில் கட்டுப்பட்டால் அது பிறகு ஒரு பெரிய சக்தியாக மாறுவதைப்போல் நாமும் நம் கோபத்தை அடக்குவோமானல் உலகத்திலே ஒருவரும் எதிர்க்க முடியாத ஒருசக்தி நமக்கு உண்டாகிவிடும். இந் நெருக்கடியான நிலைமையில் என் தாய் நாட்டார் தங்கள் கோபத்தை அடக்கிக்கொண் டிருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வருஷந்தோறும் இத்தகைய மகாநாடுகளில்கூடும் நாம், நமக்குள்ள பொறுமையைக் காட்டிக்கொள்ள இதைவிட வேறு எச்சமயம் வாய்க்கப்போகிறது.

நாம் அபிப்பிராயங்களில் வேறுபட்டாலும் நம் சிநேகபாவத்தில் வேற்றுமைப்பட்டிருக்கமாட்டோம் என்று நான் நினைக்கிறேன். என்னுடைய தீர்மானம் பைத்யக்காரத்தனமுள்ள தீர்மானம் என்று சொல்லப்படுகிறது. இத் தீர்மானத்தைக் கொண்டு வந்து மகாநாட்டைப் பிளவுபடுத்தி வருவதாகவும், அதனல் நாட்டின் அரசியல் உணர்ச்சியையே அழித்து விடப் பார்ப்பதாகவும், சிலர் கூறுகின்றனர். (இல்லை என்ற சப்தம்) மகாநாடென்பது (காங்கிரஸ் என்பது) ஒரு கட்சியைச் சேர்ந்த தல்லாதது. இந்த மகாநாட்டில் எல்லாக்கட்சிக்காரருக்கும் எல்லாவித அபிப்பிராயக் காரர்களுக்கும் எல்லாக் கூட்டத்தவர்க்கும் இடங் கொடுக்கவேண்டும். இன்று சிறு தொகையினராக விருப்போர் இந்த அரசாங்கத்தையாவது இந்த மகாநாட்டையாவது விட்டுவிட்டுச் செல்லவேண்டாம்.

இன்று சிறு தொகையினராக விருப்போர் தங்கள் அபிப்பிராயத்தின் வலுவால் நாளை பெரும்பான்மை யோராகப் பார்க்கவேண்டும். ஆகையால் ஒருவிஷயம் மகாநாட்டில் ஆதரிக்கப்பட்டாலும் அல்லது மறுக்கப்பட்டாலும் அதனை மகாநாட்டுடன் சம்பந்தப்படுத்தக்கூடாது. மகாநாட்டில் என் கட்சியர் குறைந்திருந்தால் நான் இதனைவிட்டு ஓடிப்போக மாட்டேன். என் கட்சியை வலுக்கும்படி செய்வேனே யன்றி மகாநாட்டைவிட்டு அடியோடு ஓடிப்போய் விடமாட்டேன்.

உதவி மறுத்தல் இயக்கத்தின் அம்சங்களைப் பற்றி நான் அதிகம் கூறப்போவதில்லை. அவைகள் தீர்மானத்திலேயே அடங்கியிருக்கின்றன. கிலாபத் சம்பந்தமாகச் செய்யப்பட்ட தவறுகளைப் பற்றி இரண்டுவிதமான அபிப்பிராயங்கள் இல்லை. முஸல்மான்கள் கிலாபத் சம்பந்தமாகத் தங்களுக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தை வைத்துக்கொண்டு மகம்மது நபியைப் பின்பற்றுபவர்களாக வாழ்ந்திருத்தல் முடியாது. பஞ்சாப் மாகாணம் அவமானத்துடன் நடத்தப்பட்டது. ஒரு பஞ்சாபி வயிற்றால் ஊர்ந்து சென்றதால் இந்தியா முழுவதும் ஊர்ந்து சென்றதுபோலாகும். இந்த அவமானத்தையே பாரதபுத்திரர்களாகிய நீங்களும் நானும் பாரத புத்திரிகளும் நீக்க முயற்சி செய்தல் வேண்டும். கிலாபத் சம்பந்தமாகவும் பஞ்சாப் சம்பந்தமாகவும் இழைக்கப்பட்ட தவறுகளைத் திருத்தவே இந்தியாவில் பலமாதங்களாகக் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இத்தகைய அவமானங்களை

வைத்துக்கொண்டு நாம் நம் கோபத்தை மாத்திரம் காட்டிவிட்டு போசாம லிருப்பதா? பஞ்சாப் சம்பவத்தைப்பற்றி அக்கிராசனாதிபதி அதிக விவரமாகக் கூறியுள்ளார். ஆதலின் இச் சம்பவங்களுக்காக நியாயம் பெறவேண்டியது மகாநாட்டின் கடமையல்லவா? நமக்கு அநீதி செய்தவர்களை மன மிரங்கும்படி செய்ய வேண்டாமா? அதனாலேயே இந்த உதவி மறுத்தல் இயக்கத்தை நான் ஆரம்பித்தேன். இந்த உதவி மறுத்தல் அமிசங்களைத் தவிர வேறு அமிசங்களை நீங்கள் வெறுக்கவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அமிசங்கள் என்னால் ஆரம்பிக்கப்பட்டன என்ற காரணத்தினால் நான் இங்ஙனம் கூறவில்லை. ஆனால் என்னால் பிரேரேபிக்கப்பட்ட உதவி மறுத்தல் அமிசங்களைவிட வேறு அமிசங்கள் சிரேஷ்டமாயிருக்கின்றன என்ற முடிவுக்குவந்தாலன்றி நீங்கள் என்முறையை நிராகரிக்கக்கூடாது. என்னுடைய உதவி மறுத்தல் அமிசங்களை இந் நாட்டவர் அனுஷ்டிப்பாரானால் இன்னும் ஒருவருஷத்திற்குள் இந்தியாவுக்கு சுயராஜ்யம் வந்துவிடுமென்பது திண்ணம். சுய ஆட்சி எப்படிவரும்? இத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்றிப் போய்விடுவதனாலல்ல. இன்றுமுதல் இத் தீர்மானத்தின் அமிசங்களை இந்தக் கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் அனுஷ்டித்து வந்தால் நான் சொன்னபடியே சுய ஆட்சி வந்துவிடும்.

இந்த உதவி மறுத்தல் இயக்கத்தைத் தவிர்த்து வேறொரு வழியுண்டு. அவ்வழி வாளேந்திப் போருக்கு நிற்பதேயாகும். ஆனால் இந்தியா வாள்வலிமை

பெற்றிருக்கவில்லை. இந்தியாவுக்கு வாள்வலிமை இருந்திருக்குமாயின் அஃது இந்த உதவி மறுத்தல் முறையைப்பற்றி கவனித்தே யிராது. நியாயத்தைக் கொடுக்க விருப்பமில்லாதவரிட மிருந்து நீங்கள் நியாயத்தைப் பெற கொடுஞ் செயல்களை அநுஷ்டிக்க வேண்டுமென்றாலும்கூட இரண்டு அமிசங்கள் முக்கியமாகவேண்டும். ஒழுங்காக இருக்க முற்படவேண்டும் தியாகம் செய்யச் சித்தமா யிருக்கவேண்டும். கலகக்காரர்களால் எந்த யுத்தமும் வெற்றி பெற்றதாகச் சரித்திரம் கூறவில்லை. தங்களுடைய ஸ்தானத்திலேயே எந்த அபாயம் வந்தாலும் பின்வாங்காமல் நின்று மரிக்கவும் சித்தமா யிருப்போரைக்கொண்ட சேனையே எப்பொழுதும் வெற்றி பெற்றிருக்கிறது. ப்ரிட்டிஷ் அரசாங்கத்துடன் நாம் போர் புரியவேண்டுமானால், ஐரோப்பிய சமூகங்களையே நாம் எதிர்த்து நிற்க வேண்டுமானால், இங்கிலீஷ் ஜாதியுடன் நாம் சண்டைபோடவேண்டுமானால் நம்மை நாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். இந்த நிலைக்கு நாம் நாட்டைக் கொண்டுவரவேண்டு மென்பதே என் விருப்பம். நமக்கு அறிவு அதிகம். ஆனால் தேசியக் காரியங்களில் நம்மிடத்தில் ஒழுங்கும் தியாககுணமும் சிறிது குறைவு. வீட்டு விஷயங்களில் இக் குணங்கள் நம்மிடத்தில் நிரம்பியுள. இந்த அருங் குணங்களை தேசீய காரியங்களிலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளவே நான் இங்கு வந்திருக்கிறேன். இந்தக் குணங்களை தேசீயக் காரியங்களில் உபயோகிக்க இந்தியர் சித்தமா யிருக்கின்றனரா என்

பதைப் பரிசோதிக்கவே நான் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தேன். பாரத தேசமானது தன் செல்வத்தையும், மக்களையும் அதற்குரிய எல்லாவற்றையும் தியாகம் செய்யச் சித்தமா யிருக்குமானால் ஒரு நிமிஷத்தில் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வந்துவிடும் என்று நான் உறுதி கூறுவேன். இத் தியாகஞ் செய்ய இந்தியா இஷ்டப்படுகிறதா? இஷ்டப்படாமல் சித்தமா யிருக்கிறதா? பட்டதாரிகள் தங்கள் பட்டங்களை விடச் சித்தமா யிருக்கிறார்களா? கௌரவ உத்தியோகஸ்தர்கள் கௌரவ உத்தியோகங்களை ராஜிநாமா செய்யச் சித்தமா யிருக்கிறார்களா? அரசாங்க ஊழியர்களாகப் பழக்குவதற்கே தற்போதுள்ள பள்ளிக்கூடங்கள் உபயோகமாகின்றன என்று பெற்றோர் நம்பும்போது அவர்கள் தங்கள் பிள்ளைகளை அவர்கள் அரசாங்கப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாது நிறுத்திவைக்கத் தயாரா யிருக்கிறார்களா? ஓர் இனத்தின் வசப்பட்டிருக்கும் மற்றோர் இனம் அதனிட மிருந்து சன்மானத்தைப் பெற்றுக்கொண்டு, பிறகு ஜெயித்த இனத்தால் ஏவபட்டிருக்கும் பொறுப்புக்களை மறுத்துவிட முடியாது. ஜயித்த இனத்திடமிருந்துவரும் எந்தச் சன்மானமும் அதன் நன்மைக்காக அன்று. இந்த அம்சங்களை நாம் முதலில் நன்குணர்ந்து கொள்ளவேண்டும். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமை பெற்றிருக்கவேண்டு மென்பது என் விருப்பம். இந்த ஒற்றுமையையே நான் பெரிதாகப் பாராட்டுகிறேன். பிரிட்டிஷாருடைய சம்பத்தை விரும்புகிறாயா அல்லது ஹிந்து முஸ்லீம்

ஒற்றுமையை விரும்புகிறாயா என்று யாரேனும் என்னைக் கேட்டால் நான் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையையே விரும்புவதாக விளம்புவேன். பஞ்சாபின் மானம் காப்பாற்றப்படவேண்டு மென்று விரும்புகின்றீரா? அப்படி விரும்பினால் நாட்டில் குழப்பமும் கலகமும் உண்டாகி, நம் பிள்ளைகள் கல்வியின்றி நியாயஸ்தலங்கள் மூடப்பட்டு, சட்டசபை அலுவல்கள் இல்லாமலுமிருக்க உமக்கு இஷ்டமா என்று என்னைக்கேட்டால் பஞ்சாபின் மானமே காப்பாற்றப்படவேண்டுமென்று நான் தைரியமாகக் கூறுவேன். இஸ்லாம் மதத்தின் பொருட்டு உங்களுக்கு இத்தகைய உணர்ச்சி யிருந்தால் பஞ்சாபின் மானம் காப்பாற்றப்படவேண்டு மென்ற பேரெண்ணம் உங்களுக்கு இருந்தால், உடனே என் தீர்மானத்தை யாதொரு நிபந்தனையுமின்றி அங்கீகரித்துக்கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

வோட்டுக்கொடுப்போரும் ஜனப்பிரதிநிதிகளாக நிற்க விரும்புவோரும் சட்டசபைகளை அடியோடு பஹிஷ்காரம் செய்யவேண்டு மென்று கூறுகின்றேன். இதைப்பற்றி அபிப்பிராயபேதம் அதிகமா யிருக்கிறதென்பதை நான் நன்கறிவேன். இந்த விஷயத்தைப் பற்றி இந்த மகாநாடு பிரியுமானால் ஒரே ஒரு விஷயத்திற்காகப் பிளவுபட்டதாகவே நான் கருதுவேன். சட்டசபைகள் மூலமாக உங்களுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமா? அல்லது சட்டசபைக ளில்லாமல் உங்களுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமா? என்பதே இப்பொழுதுகேள்வி. சட்டசபைகள் மூலமாக ஸ்வராஜ்யம்

பெறலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பிரிட்டிஷ் அரசாங்கத்திடத்தில் நீங்கள் அவநம்பிக்கைக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுதுள்ள உத்தியோகஸ்தர்களிடம் உங்களுக்கு நம்பிக்கை யில்லை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தாங்கள் செய்த திக்காரியத்திற்கு இரங்காதவர்களா யிருக்கிறார்கள். இப்படியெல்லா மிருக்க இச் சீர்திருத்தங்கள்மூலம் ஸ்வராஜ்யம் பெற்றுவிடலாம் என்று நீங்கள் எப்படி நம்பக் கூடும்?

பரதேச சாமான்களை பஹிஷ்காரம் செய்வதைப்பற்றிக் கவனிப்போம். பரதேச சாமான்களை பகிஷ்காரம் செய்யவேண்டுமென்ற யோசனையும் தீர்மானத்தில் காணப்படுகிறது. இதற்கு நான் ஜவாப்தாரி யல்லன். ஏனெனில், மற்றொருவருடைய திருத்தப்பிரேரணையாகிய இந்த அம்சமும் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எப்பொழுதும் எக்காலத்தும் அன்னியதேச சாமான்களை பஹிஷ்காரம் செய்துவிடவேண்டுமென்பதே சுதேசியத்தின் மேற்கோளாயபொழுது, அன்னியதேச சாமான்களை பஹிஷ்காரம் செய்யவேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. எல்லா அன்னியதேச சாமான்களையும் பஹிஷ்காரம் செய்துவிடவேண்டுமென்று நான் விரும்புவேன். இன்று நாம் அவ்விதம் செய்யமுடியுமோ? முடியாது. நமக்கு ஊசியும் ருண்டுசியும் வேண்டி யிருக்கையில், பரதேச சாமான்களை பஹிஷ்காரம் செய்யமுடியாது. ஆனால் தேச மகாஜனங்கள் தங்களாலான வரையிலும் அன்

னியநாட்டுச் சரக்குகளை பஹிஷ்காரம் செய்வார்களா ளுல் முழுமுரப்பொழுதில நாம் இழந்த அதிகாரங்களைப் பெற்றுவிடுவோம் என்பது நிச்சயம். இந்தவிஷயங்களையெல்லாம் நீங்கள் தீர ஆலோசிக்கவேண்டும். எனக்காக நீங்கள் இத் தீர்மானத்தை ஆதரிக்கவேண்டாம். என் பழைய ஊழியங்களை யெல்லாம் மறந்துவிடுங்கள். என்னுடைய உதவி மறுத்தல் முறைகள் மிக்க ஆலோசனையுடன் நிர்ணயிக்கப்பட்டன. இவைகளை அநுபவத்திற்குக் கொண்டுவரவேண்டு மென்ற நிச்சயமும் உண்டு. இத் தீர்மானத்தின் சாரத்தைப் பலர் அறிந்திருக்கின்றனர். ஆதலின் இத் தீர்மானத்தை அங்கீகரிக்கவேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முடிவுரை

விசேஷ காங்கிரஸ் மகா சபையில் ஒத்துழையாமைத் தீர்மானத்தை ஆதரித்துச் சிலர் பேசியும், எதிர்த்துச் சிலர் பேசியும் ஆன பிற்பாடு மகாத்மா காந்தி முடிவுரையாகப் பேசியது பின் வருமாறு:

பிரேரணைக்கு விரோதமாகக் கொண்டு வந்திருக்கிற ஆக்ஷேபங்களுக்கு நான் சமாதானம் சொல்லவேண்டும். ஒருவருடைய பேச்சைத் தவிர மற்றெல்லோருடைய பேச்சுக்களையும் நீங்கள் மரியாதையோடும் கவனத்தோடும் கேட்டீர்கள். ஜம்னாதாஸ் துவாரகதாஸ் பேசுவதற்கு நீங்கள் இடங்கொடாததைப் பற்றி நான் மிகவும் வருந்துகின்றேன். பண்டித மாளவியா, ஜின்னா முதலியவர்கள் பேசியதை நீங்கள் கேட்டீர்கள். இவர்களை மாத்திரம் ஒரு மகா சைனியம் என்று சொல்லி விடலாம். அவர்கள் அத்துணை தீரர்கள். அன்னிபெஸண்ட் அம்மையும் வேறு பலரும் சொல்லிய வாதத்தையும் நீங்கள் கேட்டீர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் முன்னாட்களில் நாட்டிற்குச் சிறந்த சேவை செய்திருக்கிறார்கள். அநேக ஆண்டுகளாக அவர்கள் நாட்டிற்குத் தலைவர்களா யிருந்திருக்கிறார்கள். தாங்கள் செய்யக்கூடிய தொண்டனைத்தும் செய்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் வாதங்களை நீங்கள் ஏனோ தானோ என்று விட்டுவிடாமல், சிரத்தையோடு கவனித்துப் பார்ப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் என் அபிப்பிராயம் தவறா யிருந்தால் தவறு என்று ஏற்

றுக்கொள்ள நான் மிக்கத்தயாராகஇருந்தும் அவர்களுடைய வாதம் என் வாதத்தை தவறு என்று நிரூபிப்பதாக எனக்குத் தோற்றவே யில்லை. என்னுடைய வழி சாத்தியமானதன்று என்று ஸ்ரீ ஜின்னவும் ஸ்ரீ தாஸும் சொன்னார்கள். ஆனால் அவ்வழியின் ஒவ்வொரு அமிசத்தையும் அவரவர்களுக்குப் பொருந்தியுள்ள வரையில் ஒவ்வொருவரும் இன்று தேதியில் அனுஷ்டிக்கலாகும் என்று நான் சொல்லுவேன். "கொஞ்சம் கொஞ்சமாய்" என்ற வார்த்தையைத் தீர்மானத்தினுள் சேர்த்துள்ளோம். அவ்விதம் சேர்த்ததி லிருந்து பள்ளிக்கூடங்கள் நியாயஸ்தலங்களாகிற இவ்விரண்டு விஷயங்களிலேனும் நம் தீர்மானத்தை அனுஷ்டித்தல் முடியாத காரியம் என்று நாமே ஒப்புக்கொண்டதாக ஏற்படுகிறது என்று அவர் சொல்லுகிறார்.

ஆனால் அவர் சொல்லுவதை நான் மரியாதைக் குறைவின்றி மறுக்கிறேன். நாம் பலவீனரா யிருக்கிறோம் என்றும், தயாராக இல்லை என்றும் தான் அவ் அடைமொழி காட்டுகிறது. இந்த அடைமொழியைச் சேர்த்ததினால் இவ்விரண்டு அமிசங்களையும் முற்றிலுமே சூனியமாக்கி விடலாம் என்று நான் ஒப்புகிறேன். ஆனால் இதெல்லாம் நம் ஜாதி தான் பட்ட அவமானத்தையும் வாதையையும் கண்டு கொதித்துக் கொண்டிருக்கிறதா என்பதையும், உண்மையாக வேலை செய்ய உத்தேசிக்கிறவர்கள் எவ்வளவுக்கு உழைக்கப் போகிறார்கள் என்பதையும், பொறுத்திருக்கிறது.

ஆனால் ஒன்று மாத்திரம் நீங்கள் உறுதியாக நம்பி யிருக்கலாம். மத்திய கிலாபத்துச் சபை ஏற்படுத்தியுள்ள உதவி மறுத்தற் சங்கம் நிலைத்திருக்கிறவரையில், அது இந்த அம்சங்களையும் இவைபோன்ற இன்னும் அநேக விஷயங்களையும் உங்களுக்கு இடைவிடாது உபதேசித்துக் கொண்டிருக்கும்; இவைகளை ஆதரிக்கக் கூடிய ஒவ்வொரு காரணத்தையும் உங்களுக்கு எடுத்துக் காட்டும்: நம் ஜாதிக்கு இவ் வழி இவ்விதமான அனுகூலத்தைத் தரும் என்று காட்டிக் காட்டி உங்கள் மனதைத் திருப்ப முயலும்; உங்கள் தேச பக்தியைக் கிளப்பி உங்கள் தேசத்துக்கு நன்மை தரும் செயல்களனைத்தும் செய்யும்படி தூண்டும், என்று இந்த ஒன்றரை மாத அனுபவத்தைக் கொண்டு கூடச் சொல்லிவிடுவேன். நமது தேசத்து ஜனங்களில் மதிக்கத் தகுந்த தொகையினர் இதற்குஇணங்கிவருவார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சமுசய மில்லை. இந்த வழி முடியாத வழி யல்லவென்று நான் வற்புறுத்திச் சொல்லுவேன். அதாவது இதன் அம்சங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர ஒருவன் தீர்மானித்துக் கொண்டால் இன்றைக்கு அவன் கொண்டு வந்து விடலாம். அது அன்னியச் சரக்குகளை முற்றிலும் விலக்கி விடுவதுபோலப் பிரகிருதத்திலேயே அசாத்யமானதொன்றன்று. அன்னிய சரக்குகளை முற்றிலும் விலக்கி விடுவோம் எனல், அனுபவத்தில் அசாத்யமான காரியமாகும். மற்ற அம்சங்களைப் பற்றி அவ்வாறு ஒருநாளும் சொல்லமுடியாது. என்

நடை முறையில் இவ்வமிசத்தை என் ஏற்றுக்கொண்டேன் என்று உங்களுக்கு ஏற்கெனவே (முதல் உரையில்) சொல்லியிருக்கிறேன். வாதம் செய்து பார்த்தால் இவ் அமிசத்தில் தவருக ஒன்றுமில்லையாகிலும், ஜாதிக்கு இஷ்டமும் இருந்து செய்யவும் அது ஆயத்தமாக இருந்தால் இன்றைக்கு வேண்டுமானுலும் அது அனுஷ்டிக்கக் கூடிய விஷயங்களை மாத்திரம் தான் அதன் முன்னே அங்கிகாரத்துக்கு வைக்க வேண்டும் என்பது என் பேராவல். ஒரு முக்கியமான விஷயத்தை மாத்திரம் உங்களிடம் திறந்து சொல்லவேண்டியது அவசியம். நான் குறிப்பிட்டுள்ள உதவி மறுத்தல் சம்பிரதாயத்தை நீங்கள் அனுஷ்டிக்க விரும்பினுல், அது முற்றிலும் அசாத்தியமா யிருந்தா லொழிய, நீங்கள் உங்கள் குழந்தைகளை அரசாங்க சம்பந்தமுள்ள பள்ளிக்கூடங்களினின்று நாளைக்கே அழைத்துக்கொண்டு விடவேண்டுமென்றும், உங்களுள் வக்கீல்கள் நாளைக்கே தங்கள் தொழிலை நிறுத்தி விடவேண்டும் என்றும் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறேன். எங்களுடைய சஞ்சாரங்களி லெல்லாம் இதை உங்கள் காதுகொப்பளிக்க கொப்பளிக்கச் சொல்லிக் கொண்டே வருவோம். ஆனுல் நான் ஏற்கனவே சொல்லி யிருக்கிறதுபோல், உங்களுக்குச் சக்தி யில்லையானுல், இப்பொழுது நீங்கள் ஆயத்தமாக இல்லையானுல் "கொஞ்சம் கொஞ்சமாய்" என்று போட்டிருக்கும் அடைமொழியானது உங்களுக்கு யோசிப்பதற்குக் கொஞ்சம் சாவகாசம் கொடுக்கிறது. ஜாதீயப் பள்ளிக்கூடங்

கள் ஏற்படுத்திய பிறகு தான் பிள்ளைகளை அரசாங்க சம்பந்தமுள்ள பள்ளிக்கூடங்களி னின்று அழைத்துக் கொள்ள வேண்டும் என்றும், பஞ்சாயத்து நீதி ஸ்தலங்கள் ஏற்பட்ட பிறகு தான் வக்கீல்கள் தங்கள் தொழிலை நிறுத்தவேண்டு மென்றும், சிலர் ஒரு வியாக்கியானம் செய்தார்கள். அதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அது அஸ்திவாரம் போடு முன் கட்டடத்தைத் துவக்குவதாகும். கல்வி கற்கப் பிள்ளைகள் வருகிற வரையில் ஒரு அரண்மனை போன்ற கட்டடம் கட்ட முடியுமா? ஒரு கூரைக் குடிசை தான் போடலாமா? ஒரு ஜாதி போர் செய்யும்போது அப்போர் பலாத்காரமின்றி நடப்பதாயிருந்தாலும் சரி, பலாத்காரத்தோடு நடப்பதாயிருந்தாலும் சரி, பள்ளிக்கூடங்களையும் நீதி ஸ்தலங்களையும் காலி செய்து விடவேண்டியது இன்றியமையாததொன்று. நானே இரண்டு போர்கள் பார்த்திருக்கிறேன். அக்காலங்களில் பள்ளிக்கூடங்களும் நீதி மன்றங்களும் மூடப்பட்டுப் போயின. ஏன்? தங்கள் வாதிப் பிரதிவாதிகளுக்கு நேரமில்லை. தேசத்திற்கு ஒரு பெரிய மகத்தான கண்டம் வந்திருக்கையில், தேசமே தீமையிலே அழுந்திப்போவதை விடக் கொஞ்சநாட்களுக்குத் தங்களுடைய படிப்பு நிறுத்தி வைக்கப்படுவதே நலம் என்று பிள்ளைகள் உணர்ந்து கொள்ளுவதே சிறந்த கல்வியாகும்.

நாம் உண்மையாக நம்முடைய அடிமைத் தனத்தை உணருகிறோமா என்று பார்ப்பதற்கு இவ் விரண்டு அமிசங்களே உறைகல்லாகும். நம்முடைய

ஜாதி வாஸ்தவமாக உணர்ச்சி யுடையதா யிருந்தால் இவ்விரண்டு அமிசங்களையும் நடத்தியே காட்டும். அரசாங்கத்துக்கு நாம் முன்னறிக்கையாக ஒன்றும் சொல்லாதிருப்பது தவறு என்று ஒரு பெரிய வாதம் செய்யப்பட்டது. ஆனால் சுயராஜ்ஜியும் வேண்டும் என்ற புதிய சங்கதியைத் தீர்மானத்தில் சேர்த்ததினால் மட்டுமே முன்னறிக்கை செய்து கொள்ளும் விஷயம் இப்போது ஸ்ரீபாலர், ஜின்னா இவர்கள் பிரரேபணையில் கொண்டு வரவேண்டியதாயிற்றென்பதை மறக்கக் கூடாது. நாம் ஸ்வராஜ்ஜியத்தைப் பற்றி இப்பொழுது புதிதாக அறிக்கை செய்துகொள்வதாயின் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு நமது திட்டமான கோரிக்கையை கௌரவமாய் எடுத்து அறிவிக்க வேண்டியது அவசியந் தான். ஆனால் என்னுடைய பிரேரேபணை அந்த முறையில் குறிக்கப்படவில்லை. ஸ்வராஜ்யமின்றி முன்னர் பஞ்சாபில் நடந்ததைப் போன்ற தீய காரியங்கள் இனி நடவாது தடுக்க முடியாது. அத்தகைய தீங்குகள் திரும்பவும் நடக்க இடங்கொடாதவாறு அதை பிரத்யேக தீர்மானமாக வில்லாமல் இப்பிரேரணையிலேயே சேர்த்துவிட வேண்டியது அவசியமென்று இத் தேசீய மகா நாடு கருதுகின்றது. இப் பிரேரணையினால் நாம் சிறிது முன்னேறிக்கொண்டே போகின்றோமே யொழிய வேறெந்த விதத்திலும் கெடுதி யற்றதென்றே நான் கருதுகின்றேன். ஸ்ரீஜின்னாவும் ஸ்ரீ மாளவியாவும் ஸ்ரீபாலரின் பிரேரணையை அங்கீகரித்திருக்கின்றார்கள். ஸ்ரீ பாலரின் திருத்தத்தின்படியே எனது பிரே

ரணையிற் சில அமிசங்கள் நாளைக்கே அனுஷ்டிக்கக் கைக்கொள்ள வேண்டியவைகளா யிருக்கின்றன. சிலவற்றைச் சிலகாலம் ஒத்தி வைக்கும்படி செய்யப் பட்டிருக்கிறது. ஒத்துழையாமை இயக்கத்தின் அம்சங்கள் சில நாளைக்கே இந்திய மக்களால் கைக்கொள்ளப்பட வேண்டியதா யிருக்கின்றன. ஆதலால் இம் மகா நாடானது இத்தீர்மானத்திற்குப் போதுமான காலம் கொடுக்கப்பட்டுள்ள தெனவே கருதி ஒரு பெரிய தேசத்தின் கௌரவத்தைச் சிறிதளவும் கெடுக்காமல் தீர்மானிக்க வேண்டுகிறேன்.

முக்கிய விஷயமாகிய சட்ட சபைக்கு நாடாதொழியும் விஷயத்தை இனி எடுத்துக் கொள்ளுகிறேன். நான் சட்ட சபைக்குச் செல்லவேண்டிய அவசியத்தைப் பற்றிக் கூறும் கட்சியினரின் வாதத்தை இன்னும் கேட்கவில்லை. சென்ற 30-ஆண்டுகளாகச் சட்ட சபையிலிருந்து கிளர்ச்சிசெய்த தன் பயனாகவும், உண்மைபாகவே அத்தகைய கிளர்ச்சியின் பயனாகப் புதிய சீர்திருத்தம் இதுகாலே கிடைத்துள்ளமையாலும் என் அபிப்பிராயப்படியே சீட்டுக்காரர்களின் செல்வாக்கைக் கொண்டு சட்ட சபையில் பெரும்பான்மையான ஸ்தானங்களை நாம் பெற்று அரசாங்கத்தையோ அல்லது அதன் நிருவாகத்தையோ அசைய முடியாதபடி செய்து விடலாமென்ற நம்பிக்கையினாலும், சட்ட சபைக்கு நம்மவர் செல்லவேண்டும் என்ற வாதமே இதுகாறும் செய்யப்பட்டுள்ளது. நான் இங்கிலீஷ் தேச சரித்திரத்தில் பயின்றும், இங்கிலீஷ்காரர்கள் வாழ்க்கையின்

பழக்கங்களையும் நன்கு அறிந்துகொண்டதனின்றும், தடைசெய்து நிற்பதனால் பல இயக்கங்கள் முன்னேற்றம் பெற்றிருக்கின்றனவென்பதை நன்றாய் அறிந்திருக்கின்றேன். தேசீயக் கட்சியார் சட்ட சபைகளுக்கு வெளியில் நிற்பது அரசாங்கத்தாருக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லையென்று நான் உறுதியாய்க் கூறுவேன். அவர்கள் சட்ட சபைகளுக்குள் வரவேண்டுமென்றே கவர்ன்மென்ட் ஆவல் படுகிறது. சட்ட சபையிலிருந்து செய்யக்கூடிய தேச ஊழியத்தை சபைக்கு வெளியிலிருந்து செய்யக்கூடும் என்பது எனது அபிப்பிராயம். சட்டசபைக்கு வெளியே நின்று, சட்ட சபையிலிருந்துகொண்டே செய்யக் கூடிய காரியத்தை விடப் பன்மடங்கு அதிகமாகச் செய்யலாம். ஸ்ரீ லோகமான்ய திலகர் அபார சக்தி பெற்றிருந்ததன் இரகசிய மென்னவென்றறிந்தீர்களா? அவர் இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான ஜனங்களின் செல்வாக்கைப் பெற்றிருந்தது போன்ற செல்வாக்கை நீங்கள் சட்டசபை ஊழியத்தினின்றும் பெற முடியுமென்று நினைக்கின்றீர்களா? இது விஷயத்தில் அவருடைய அபிப்பிராயத்தைப் பற்றிய சாட்சியங்கள் சில இங்கு கூறப்பட்டன. இந்த உதவி மறுத்தல் இயக்கத்தை அவர் எங்ஙனம் கருதினார் என்பதை ருசுப்பிக்கத் தக்க சாக்ஷியங்கள் எடுத்துக் காட்டப்படவில்லை. இதைப்பற்றிய பிரஸ்தாபம் நேரிட்டபடியால் இது விஷயத்தில் எனக்குத் தெரிந்தது சொல்லவேண்டியிருக்கிறது. அவர் இறந்து போவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்

நான் ஷௌகத் ஆலியுடன் அவரைப் போய்ப் பார்க்கும்படி நேரிட்டது. அவர் நம்மவர் சட்ட சபைக்குச் சென்று கூடுமானவரை எதை எப்படி எதிர்க்க முடியுமோ அப்படி எதிர்த்துப் போராடி எந்த விஷயத்தில் கூட்டுறவு கொள்ளலாமோ அவ்விஷயத்தில் அரசாங்கத்துடன் கலந்து வேலை செய்யலாமென்பது தமது சொந்த அபிப்பிராயம் என்று கூறினர். "நீங்கள் டெல்லியில் முஸல்மான்களுக்குச் செய்த பிரதிக்கினை என்ன? நானும் அங்கே கூடத்தானே இருந்தேன். அது விஷயத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்." என்று ஷௌகத் ஆலி கேட்டார். அவர் மிக்க அந்தரங்கமான தொனியுடன், முஸல்மான்கள் சட்ட சபையை விலக்குவதில் வாயால் மட்டும்பேசாமல் அனுஷ்டானத்தில் காட்டுவார்களானல் என்னுடைய கட்சிக்காரர்கள் அவர்கள் பக்கத்தில் நின்று அவர்களுக்குத் துணை புரிவதில் ஆட்சேபணையில்லை என்று கூறினர். அவர் ஸ்வராஜ்ய சித்தியைப் பெறும் விஷயத்தில் பட்டிருக்கும் அரும் பெரும் பாடுகளைக் கருதி அவருடைய அபிப்பிராயத்திற்குத் தக்க கௌரவம் வைக்கவேண்டியது நமது முக்கிய கடமையாகும். இவ்விஷயத்தில் அவர் எவ்வித அபிப்பிராயம் கூறினும் அது மதிக்கத்தக்கதேயாகும்.

சட்ட சபைகள் என்றல் என்னவென்று கருதுகிறீர்கள்? ஒரு சிறு திருஷ்டாந்தம் கூறுகிறேன். கிலாபத் பஞ்சாப் இவ்விரு விஷயங்களிலும் பெருத்த தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நீங்கள் சட்ட

சபைக்குச் சென்று வாதங்கள் செய்வீர்களானால் அதனின்றும் பிரிட்டிஷ் மந்திரியார்களின் மனதில் அத்தீங்குகள் நன்றாகப் படும்படி செய்து, சமாதான உடன்படிக்கையை ரத்து செய்து, பஞ்சாப் பெருவதைக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி செய்ய வியலுமா? நமது தலைவரும் சகோதரருமான பண்டித மாளவியா அவர்கள் பல உத்தியோகஸ்தர்கள் வேலையி லின்று நீங்கிவிட்டார்க ளென்றும், மிஞ்சிய உத்யோகஸ்தர்களும் இராஜப் பிரதிநிதியும் வருகிற ஏப்ரலுக்குள் நீங்கி விடுவார்க ளென்றும் அதனால் தேசீய மகா நாட்டுப் பஞ்சாயத்தார் (காங்கிரஸ் சப் கமிட்டியார்) கோரிக்கை யாவும் நிறைவேறலாம் என்றும் கூறினார். இது விஷயத்தைப்பற்றி நான் அறிவித்த அறிக்கையில் என்னுடைய நோக்கம் அது இல்லை. (பஞ்சாப் வதைக்குக் காரணமான) உத்தியோகஸ்தர்கள் கொடியவர்கள் என்றும், வேலை பார்க்கத் திறமை யற்றவர்க ளென்றும் குற்றஞ் சாட்டி விலக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் இராஜப் பிரதிநிதி தன் வேலையை இராஜிநாமா கொடுக்காத வரையில் அவரை நிர்ப்பந்தமாக விலகும்படி செய்ய வேண்டுமென்றும் நான் குறிப்பிட்டதுமன்றி எங்களிருவருக்கும் நடந்த வாதத்திலும் கூறினேன். வைசிராயாவது, சில உத்யோகஸ்தர்களாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை விட்டுப் போய்விட வேண்டுமென்பது மட்டும் எனது நோக்க மன்று. அவர்கள் வேறெந்தக் காரணமேனுங் கூறி வேலையினின்று நீங்

காமல் தாங்கள் செய்த அக்ரமத்தை உணர்ந்து வருந்தும் குறியாக அவர்கள் வேலையி னின்று நீங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட வேண்டுமென்பதே எனது நோக்கம். அமிருத சரஸில் கூடிய தேச மகா நாடு சமயத்தில் அவர்கள் தமது தப்பிதத்தை உணர்ந்து வருந்தி சித்த சுத்தியுடன் நேச பாவத்தைக் காட்டுவார்கள் என்று எண்ணினேன். ஆதலாற்றான் நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று அம் மகா நாட்டில் போராடினேன். பஞ்சாப் அநீதி, கிலாபத் அநீதி இவைகளுக்குத் தக்க பரிகாரம் தேடப்படவில்லை என்று நன்கு உணர்ந்த பின்னரே பிரிட்டிஷ் பிரதம மந்திரியார், இந்திய அரசாங்கத்தார் இவர்களிடம் ஜனங்களுக்கு நல்லெண்ணமுண்டாக வில்லை என்று நான் கூறவேண்டியதாயிற்று. தான் செய்த குற்றங்களுக்கு வருந்தவேண்டி இருக்க, அதை விடுத்து பிரிட்டிஷாரால் இந்தியா ஆளப்பட வேண்டியதாயின், பயங்கரமான செயல்களாலேயே ஆளப்பட வேண்டுமென்ற எண்ணம் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆதலினால் நீதிஸ்தலம், பள்ளிக்கூடங்கள் இவைகள் இந்தப் பயமுறுத்தும் அதிகாரிகளிடமே இருக்கட்டும், நமக்கு வேண்டியதில்லை யென்று கூற முன் வந்தேன். புதிய தேசிய பள்ளிக்கூடங்கள் இனி மாணவர்க்கென ஸ்தாபிக்கப்படாவிட்டாலும் சரி, அவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு நமது பிள்ளைகள் செல்லக்கூடாது என்று வற்புறுத்துகின்றேன். தேவை யுண்டாகும் போது தான் வேண்டியவற்றை நாமே செய்து

கொள்ள அக்கரை பிறக்கும், பிள்ளைகளை இல்லாமல் பள்ளிக்கூடத்தைக் காலி செய்து விட்டோமானல் நமது பண்டித மாளவியா உடனே வீடு வீடாகச் சென்று பொருள் சேகரித்துப் புதிய தேசியப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க முன் வருவார். இந்தியரைப் படிப்பில்லாமல் செய்துவிட வேண்டுமென்பது என் நோக்கமன்று. ஒவ்வொரு இந்தியனும் சரியான முறையில் கல்வி கற்கப்படல் வேண்டும். படித்தோரை அடிமைகளாக்காமல் அவர்கள் தங்கள் தேச கௌரவத்தை அறிந்து நடக்கத்தக்க வழியில் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும். நாம் இனிக் கைக்கொள்ள வேண்டிய காரியங்கள் பல இருப்பினும் இரண்டு விஷயங்களைப் பற்றி இங்கு தெளிவாக கூறுகின்றேன். உதவி மறுத்தல் என்பது தலைமையான காரியத்தினின்றே ஆரம்பிக்க வேண்டிய அவசியமாகும். பிரதிநிதி சபை என்று தவறுதலாகக் கூறப்பட்டு வரும் புதிய சட்ட சபையிலிருந்து அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதில்லை என்ற கொள்கையை ஆரம்பித்தோமாயின் அரசாங்கத்தார் சிறிது கண்ணைத் திறந்து பார்ப்பார்கள். சட்ட சபைக்குப் போகாமல் விலகியிருப்போர் சும்மாவிருக்க மாட்டார்கள். அவர்கள் இத்தேசத்தின் நாலு பாகங்களுக்கும் சென்று அரசாங்கத்தாரின் தீங்கை எடுத்து ஆங்காங்கு அறிவித்துக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இத்தீர்மானத்தை இம் மகா நாடு தீர்மானம் செய்து விடுமாயின், ஜனங்கள் மேன்மேலும் அரசாங்கத்தின் தீய காரியங்களை யுணர்ந்து ஆத்திரங்

கொண்டு பொங்கிய ஆக்கிரோஷத்துடன் செயலில் நாம் கைக்கொண்டுள்ள காரியத்தை மேற்கொண்டு தீவிரமாகச் செய்து முடிக்கும் ஆற்றலை விருத்தி செய்யும். முஸ்லிம் சங்கத்தார் சட்ட சபையை பகிஷ்காரம் செய்வதாகத் தீர்மானம் செய்து விட்டார்கள். நம்மில் நான்கில் ஒரு பங்கினர் ஒரு வழி செல்ல, மற்ற மூன்று பங்கினர் வேறு வழி செல்லலாமா வென்பதைக் கவனியுங்கள். இச்சமயம் சட்ட சபை சென்று பிரமாணம் செய்து கொள்வது மத விரோதமான காரியமென்று இஸ்லாமியர் சொல்லுகிறார்கள். இந்துக்கள் ஒத்தாசை செய்தாலும் சரி, செய்யாவிடினும் சரி, மகமதியர்கள் இத்தீர்மானத்தைக் கைக்கொண்டு நிச்சயமாய் முன்னே போகப் போகிறார்கள். இந்துக்கள் மகம்மதியர்களுடன் கலந்துழைக்க அவசியம், தேசத்தின் ஊக்கங்கொண்டு எழவேண்டியது. இவைகள் எல்லாவற்றையும் தீர யோசனை செய்தேன். நான் விளையாட்டாக இத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. ஒருவனுக்குப் படும் யோசனை தவறா யிருக்கலாம். இதர தலைவர்கள் அபிப்பிராயத்திற் கிணங்காம லிருக்கலாம். ஆதலின் நாம் விஷயத்தை மட்டும் கவனிக்க வேண்டும். இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நேர்மையான சம்பந்தம் வேண்டியது அவசியம். அஃதில்லாமல் நாம் எந்த வழியிலும் செல்ல முடியாது. பலாத்காரமின்றி அவர்கள் கஷ்டத்தை அனுபவிக்கச் சித்தமாயிருக்கையில் நீங்களும் சேரவேண்டியது அவசியமே, உங்களை அனாவசியமாக நீண்ட நேரம் பொறுமை

யாய் நான் கூறுவதைக் கேட்கும்படி செய்துவிட்டேன். நான் கூடிய வரையில் பட்சபாதமில்லாமல் கூறி யிருக்கிறேன். நான் மாளவியாவிற்கு மிக்க நன்றி காட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். தேச சேவையில் அவசியமானபோது அவருடன் சேர்ந்து அவர் தலைமையின்கீழ் எதையும் மேற்கொள்ளச் சித்தமா யிருக்கிறேன். பிறர் செல்வாக்கைப் பற்றி எக்காரியத்தையும் நீங்கள் ஒரு சார்பாகச் செய்யாமல் தீர யோசித்து முடிவு செய்ய வேண்டுகிறேன். இந்த தேசத்தின் கௌரவத்தைக் காக்க வெண்ணித் தம்முடைய சிறு சௌகரியங்களைத் தியாகம் செய்யலாமென்று தோன்றினால், முஸல்மான்களுடன் ஒத்துழைக்க விரும்பினால், இத்தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் இல்லாவிடில் இதை நீங்கள் தள்ளி விடலாம்.

IV

மாணவர் கடமை

1921-ம் வருடம் ஜனவரிமாதம் 21-ந் தேதி கல்கத்தாவிலுள்ள மிர்ஜாபூர் சதுக்கத்தில் மகாத்மா காந்தி, மாணவர்களுக்குப் பின்வருமாறு கூறினர்:—

அக்கிராசனரே! நண்பர்களே!! நாம் இப்பொழுது புதிய பிறப்பில், இருக்கிறோம். புதிய பிறப்புக் குண்டாகும் கஷ்டங்கள், இடுக்கண்கள், துன்பங்கள், இம்சைகள் ஆகியவைகளை நாம் அனுபவித்து வருகின்றோம். தேச சேவைக்கென்று கங்கணங் கட்டிக்கொண்டு தயாராக முன்னணியில் வந்து நின்ற வங்காள மாணவர்களை நான் மிகவும் கொண்டாடுகிறேன். என்னுடைய நண்பரான சித்தரஞ்சன தாஸரின் தலைமையை கல்கத்தா மாணவர் எதிர்ப்பார்த்த வண்ணம் இருந்ததாக நான் அறிகிறேன். உங்களுக்காகத் தலைமை வகித்த எனது நண்பர் தாஸருக்கும், அவரது தலைமையின் கீழ் திருப்தியாக நடந்து கொண்ட உங்களுக்கும், என் அன்பைச் செலுத்துகிறேன். ஆனல் அவருக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட வேலை இப்பொழுதுதான் ஆரம்பித்ததென்பதை நீங்கள் அறிவீர்கள். பள்ளிக்கூடத்தைப் பஹிஷ்காரஞ் செய்த கல்லூரிமாணவர் மீண்டும் கல்விச் சாலைக்குப் போவதை யொழிக்கவேண்டும்; ஆனல் நீங்கள் செய்யக்கூடிய வேலையைக் குறித்துத் திடப்படுத்த அவருக்கு ஒரு பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. ஆகவே, உங்களுக்கும் எனது நண்பர் தாஸருக்கும் தக்க

பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. நீங்கள் இருதிறத்தாரும் ஒன்றுகலந்து இனிச் செய்யவேண்டிய வேலையை ஆரம்பித்துவிட்டபடியால், ஒழுங்காக முற்றுபெறும் என்பதற்கு ஐயமில்லை. கவரன்மெண்டு கலாசாலைகளிலிருந்தும், கவரன்மெண்டாரால் உதவிபெற்றுவரும் கலாசாலைகளிலிருந்தும் வெளிவந்த நீங்கள் உங்கள் கடமையைத் திருப்தியாகவே செய்தீர்கள். நாட்டின் ஸ்வராஜ்யத்திற்காக கச்சைகட்டி முன் வந்துவிட்டீர்கள். ஆனால் கல்விச்சாலைகளின் நிர்வாகிகளும் நீங்கள் செய்த தியாகத்தைப்போல் செய்யாமல் இன்னமும் பின்னடைந்திருப்பது சாலவும் விசனிக்கத்தக்கது. ஆனால் அவர்களைப்பற்றி இழிவாகவோ அல்லது குறைவாகவோ கூற நான் இச்சிக்கவில்லை. என்றாலும் பிள்ளைகள் மார்க்கந் தவறிப்போகிறார்களென்று அவர்கள் குறை கூறுகிறார்கள். மனச் சாட்சிக்குப் பயந்து பின்னடைந்து பதுக்கங்கொள்ளாமல் தாராளமாகத் தீரர்கள்போல பள்ளிக்கூடங்களைவிட்டு தேசச் சேவைக்கு வாருங்கள் என்று எனது நண்பர் தாஸர் கூறுவதையும், அவர்கள் குறை கூறுகின்றனரென்பதையும், யான் அறிவேன். நான் ஒற்றுமையாமை இயக்கத்தை நாட்டின் முன் கொண்டுவந்தது தவறென்றும், அதிலும் மாணவர்களைப் பள்ளி பஹிஷ்காரஞ் செய்யச் சொல்வது முற்றிலும் தவறு என்றும், அவர்கள் நம்புகின்றனர். நாளுக்கு நாள் நாட்டிலுண்டாகும் சிக்கலான நிலைமையிலும், ஜனங்கள் பலவிதமாகக் கூறுவதைப் படித்தும் கேட்டும் வருவதிலும், எனக்கு வரவர இந்த இயக்கத்தில் அதிக

மான பற்றும் நம்பிக்கையும் உண்டாகி இவ்வழியே, எல்லாவழியிலும் மேலான வழியென்று புலப்படுகின்றது. இஸ்லாம் மதத்தின் கௌரவத்தை சத்தியமாகக் காப்பாற்றவேண்டுமானால், இந்தியா இழந்த ஜாதிய மரியாதையை மீண்டும் காப்பாற்றவேண்டுமானால், தைரியமாக இந்த அரசாங்கம் இனி நம்மிடமிருந்து ஒரு சிறிய உதவியும் பெற முடியாதென்றும், ஜனங்களின் நம்பிக்கையை யிழந்த அரசாங்கத்தினின்றும் நாம் இனி ஒருவித உதவியையும் பெற்றுக் கொள்ள முடியாதென்றும், கூறி, நாம் ஸ்வராஜ்யம் பெற முயலவேண்டும். ஆனால் இதுபோல எண்ணிறந்தவர்கள் மேடைகளில் இதுவரை எவ்வளவோ பேசியிருக்கிறார்களென்று நீங்கள் கூறலாம். சத்தியம் திரும்பத் திரும்பக் கூறப்பட்டே வரும் என்ற ஒரு சமஸ்கிருத பழமொழியை மாக்ஸ் முல்லர் தர்ஜுமா செய்திருக்கிறார். ஆகவே அதுபோல எனது நாட்டினர்களின் காதுகளில் கேட்கும்படி அடிக்கடி இச் சத்தியத்தை நான் கூறி வருவேன். ஒத்துழையாமை இயக்கத்திற்கு இந்தியா சரியாக உடன்பட்டாலன்றி இந்தியா தானிழந்த கௌரவத்தை எவ்வாற்றாலும் அடைய முடியாதென்று பல மேடைகளில் நான் சொல்லிவந்தது போலவே இங்கும் மீண்டும் கூறவந்தேன். இந்தியாவிற்கு இந்த அரசாங்கத்துடன் போர் தொடுக்க இவ்வழி தவிர வேறு வழி கிடையாது. ஒத்துழையாமை தர்மம் ஒவ்வொரு இந்தியன் மனத்திலும் ஏற்கனவே இயற்கையாகவே உதித்துள்ளது. ஆதலாற்றான் ஜனங்கள்

கோடிக்கணக்காக இந் நாட்டில் இந்த இயக்கத்தை அங்கீகரிக்கின்றனர். கேவலம் எனது வார்த்தைக் காகக் கட்டுபட்டன்று. ஏனெனில், இது நம் உடன் பிறந்தது. நம்முடன் வளர்ந்தது. மத சம்பந்தங் கொண்டது. இந்து மதத்திற்கும் இஸ்லாம் மதத்திற் கும் தர்மவழியானது. நாம் நமது நிலைமையில்தாழ்ந் து விட்டாலும், நாதனற்றவர்க ளென்று எண்ணிக் கொணடாலும் இந்த இயக்கம் நமக்குத் தைரியத் தைக்கொடுத்துத் தூக்கத்தினின்றும்எழுப்பிவிட்டது. ஒற்றுமையாமை நமக்கு நம்பிக்கையை யளித்தது. தைரியத்தைக் கொடுத்தது. நிச்சய புத்தியைத் தந் தது. பலத்தைக் கொடுத்தது. நமது நாட்டிலுள்ள படித்தவர்க ளெல்லோரும் இவ் வொத்துழையாமை இயக்கத்தில் இன்றும் இறங்காமல் இருப்பதால், அவர்களுக்கு நிச்சயமாக மதத்தினிடத்தும் தன் னிடத்தும் நம்பிக்கை யில்லாதவர்க ளென்று நான் கூறுவேன். சாமானிய ஜனங்களிடத்திலுள்ள பக்தி யும் உணர்ச்சியுங் கூட சிலர்களுக் கில்லை. படித்தவர்க ளெல்லாரும் தற்கால நாகரிகமென்னும் மேனாட்டு நாகரிக அவாந்தரத்தில் மூழ்கி யிருக்கின்றனர். தற் கால நாகரிகத்தை மேனாட்டு நாகரிகமென்று அர்த் தங் கொள்ளலாம். மேனாட்டு நாகரிகத்திற்கும் தற் கால நாகரிகத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் அறியவேண்டும். நான், மேனாட்டைத் தூஷிப்பவ னல்லன். மேனாட்டுக் கல்வியினால் அநேக விஷயங் களை நான் அறிந்ததினால் அதற்கு நான் வந்தனஞ் செலுத்துகிறேன். ஆனால். இந்தியாவைத் தற்கால

நிலைமையி னின்றும் உயர்த்தவேண்டுமானல், பல வருடமாக எனக்குத் தற்கால நாகரிகத்தினல் ஏற்பட்ட அனுபவத்தினல், அதை எவ்விதத்திலும் நினைக்காமல் துச்சமென்று தூரத் தள்ளவேண்டும். இச் சிறந்த பாடம் நான் கற்றது. இதை உங்களுக்குத் தைரியமாகக் கூறவந்தேன். தற்கால நாகரிகமென்பதென்ன? அது, நமக்குள்ளே யிருக்கும் மிருக சக்தியைத் தொழச் செய்வது—மாயா பிரபஞ்சத்திலுள்ள ஸ்தூல வஸ்துவைத் தொழச் செய்வது—அது தெய்வமில்லை யென்ற நாஸ்திகத் தன்மையை வடிவமாகக் கொண்டது. ஆகவே, ஸ்தூல வஸ்துக்களின் ஜெயத்தைக் கண்டு ஆநந்தங் கொள்வதே தற்கால நாகரிகத்தின் பான்மை யாகும். என் நாட்டை நான் சரியாக அறியாம லிருந்திருந்தால், நாட்டின் சாமானிய ஜனங்களின் மனதை அறியாம லிருந்திருந்தால், படித்த இந்தியர்கள் மார்க்கந் தவறிச் சென்றது போலவே நானும் வழிதப்பிப் போயிருப்பேன். தற்கால நாகரிக நடமாட்டங்களில் 20 வருடகாலம் நான் ஊடாடி அதன் மத்தியில் வசித்து வந்ததை நீங்கள் அறிவீர்கள். தற்கால சம்பிரதாயத்தை அப்படியே அவலம்பிக்கின்ற ஒரு நாட்டில் நான் வசித்தேன். அந் நாட்டில் தற்கால நாகரிகம் தலைமாடு கால்மாடாய் ஒவ்வொன்றும் நடந்துகொண் டிருக்கிறது. அந் நாட்டில் தீரர்கள் பலர் உளர். தற்கால நாகரிகத்தினல் அவர்கள் மேன்மை யடைந்ததையும் நான் கண்டேன். ஆனல் தற்கால நாகரிகத்தினல் எனது அநுபவம் வேறுவித மாயிற்று. தற்கால நாகரிக மென்

னும் சாபத்திற்கு இந்தியா ஆளாகாமல் எல்லாம் வல்ல கடவுள் இந்தியாவை இரட்சிப்பாராக! என்ற தீர்மானத்தை நான் முதல் முதல் 1908-ம் வருடத்திலேயே யுணர்ந்தேன். இப் பாட மொன்றையே நான் என்னுடைய தட்சிண ஆப்பிரிக்கா வாசத்தில் கற்றுகொண்டேன். கற்ற நாள்முதல் இன்றுவரை அதையே பற்றிவருகிறேன். சென்ற 5 வருட காலமாக நான் இந்தியாவில் வசிப்பதிலிருந்து நாட்டில் பல பாகங்களிலுஞ் சென்று அல்லும் பகலும், நமது பூர்வ நாகரிகப் பான்மையில் எனக்கு உண்டா யிருக்கும் நம்பிக்கையையும், டாம்பீகமற்ற சாமானிய வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட நம்பிக்கையையும், ஒவ்வொரு இந்தியனும், ஹிந்துவானாலும், முகம்மதியனானாலும், கிறிஸ்தவனானாலும், பார்ஸியானாலும், யூதனானாலுஞ் சரியே, அவனவனுக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள மதஉணர்ச்சியில், எனக்கு உண்டாயிருக்கும் நம்பிக்கையையுமே அறிவுகுன்றி, அந்தகாரத்தில் மூழ்கியிருந்த என் வாழ்நாட்களில் எனக்குண்டாகிய ஸ்தூல வஸ்துக்களின்மீது பிரமை, நாஸ்திகபுத்தி, எதிர்வாதம் முதலியவைகளினின்றும் காப்பாற்றி ரட்சித்தது என்று பிரசங்கமேடைகள் தோறும் கூவிக் கூவிக் கூறிவருகிறேன். நம்மைப் பலர் நிந்திக்கக்கூடும். நம் மனம் தடுமாறக்கூடும். கல்கத்தா வாசிகள் சென்ற செப்டம்பர் மாதத்தில் ஒத்துழையாமைப் போரை யாரம்பித்து விட்டார்கள். இது ஜெயம்பெறவேண்டுமானால், எப்படி ஆரம்பத்தில் வெகு உறுதியுடன் உழைத்தீர்களோ அதுபோலவே

நிரந்தரமாக உழைத்து வரவேண்டும். இது சரித்திர சம்பந்தமானது. தற்கால சரித்திரக்காரர்களால் போற்றக்கூடியது. இது மதப்போர் என்று கூற நான் அவமானப்படவில்லை. இராஜீயத் தோற்றத்தைக் கலக்குவதற்காக ஏற்பட்ட ஒரு இயக்கம் என்று கூறவும் நான் அவமானப்படவில்லை. ஆனால் நம்முடைய இராஜீய வாழ்க்கையை மத உணர்ச்சியினால் ஆஸ்திகத் தன்மையாக யுண்டாக்குவதே இந்த ஒத்துழையாமையின் நோக்கமாகும். நமக்கு எத்தனைக்கெத்தனை மதஉணர்ச்சி உண்டாகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நம்முடைய இயக்கம்பலப்பட்டு விருத்தியாகும். இந்தியாவிலுள்ள சாமானிய ஜனங்களின் மனம் ஒத்துழையாமை விஷயத்தில் அதிக பக்தியும் சிரத்தையும் கொண்டு பக்குவப்பட்டிருப்பதினாலும், தற்கால ஆங்கில அரசாட்சியில் சாமானிய ஜனங்களுக்குப் பற்றில்லாமல் அறுவருப்பும் நிராசையும் உண்டாயிருப்பதினாலும், இந்தியா ஒரு வருடகாலத்திற்குள்ளாக ஸ்வராஜ்யம் பெறலாமென்று வெகு தைரியமாக நான் கூறினேன். நான்கு மாதங்கள் ஏற்கனவே கழிந்தன. என்றாலும் முன்னிலும் அதிமாக என் நம்பிக்கை வங்காளச் சிறுவர்கள் முன்னிலையில் கொழுந்துவிட்டு எரிவதுபோல என்றும் பிரகாசித்ததில்லை. நீங்கள் எனக்கு அதிக நம்பிக்கையை யூட்டுகிறீர்கள். அதிக தைரியத்தைக் கொடுக்கிறீர்கள். அதிக பலத்தையும் அளிக்கிறீர்கள். ஆனால், இவ்வருடத்திற்குள்ளாக ஸ்வராஜயக்கொடி நாட்ட ஷவுகத் ஆலிக்கும் மகம்மத்

ஆலிக்கும் எனக்கும் தீர்காயுளைக் கடவுள் தந்தருள் வாராக ! இலதேல், இவ் வருடத்திற்குள்ளாகவே என்னுடைய ஹஸ்தி கங்காநதியில் கறைக்கப்படுவது கடவுளின் திருவருளானல், நான் இவ் வருடத்திற்குள் உங்களாலேயே ஸ்வராஜ்யம் கொண்டுவரப்படும் என்கிற நிச்சய புத்தியைக் கொண்டு பரலோகமடைவேன். நிற்க, ஒத்துழையாமை இயக்கம் நீங்கள் கருதுவதுபோல அவ்வளவு கஷ்டமானதன்று. அதின் கஷ்டம் நம்முடைய மனே பக்குவத்தைக் கொண் டிருக்கிறது. ஸ்வராஜ்ய விஷயமாக சட்டசபைகளால் உபதேசங்களைப் பெறவேண்டு மென்கிற நம்பிக்கையினல் இயக்கமானது உங்களுக்குக் கஷ்டமாகப் புலப்படுகிறது. பதினறு வருடம் கல்விச் சாலைகளில் கல்விபயின்று பரீட்சைகளில் தேறினலன்றி ஸ்வராஜ்யம் வராதென்கிற நம்பிக்கையைக் கொண்டிருப்பதினலேயே உங்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. இப்படி நீங்கள் நம்புவீர்களல் நமது நாட்டிற்கு இன்னும் ஒரு நூற்றண்டுக்கு ஸ்வராஜ்யமென்பது கிடைக்கமாட்டாது. ஸ்வராஜ்யம் பெறுவதற்குத் தைரியம் வேண்டும், நம்பிக்கை வேண்டும், வலிமை வேண்டும். இம்மூன்று முறைகளும் நமது நாட்டில் சாமானிய ஜனங்களிடம் இருப்பதால்தான், ஒரு வருடத்திற்குள் ஸ்வராஜ்யம் பெறலாம் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. காங்கிரஸ் மகாசபையின் பிரார்த்தனைதான் என்ன ? அகண்ட சமுத்திரம் போன்ற விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் முன்னர், படித்த இந்தியர்கள் (நீங்களும் நானும்

உள்பட)நம்முடைய கடமையை செலுத்தும் சோதனை என்பதே காங்கிரஸ் சபையின் பிரார்த்தனை யாகும். உங்களுடைய உதவியைக்கொண்டு அல்லது உங்களுடைய உதவி சிறிதேனு மில்லாமல் காங்கிரஸ் மகா சபை இந்தியாவைக்கூட ஒதுக்கி, துன்மார்க்கர் வசமுள்ள ஸ்வராஜ்யத்தைப் பறித்து, சுதந்தரக் கொடியை நாட்டும் என்பதை மட்டும் நம்புங்கள். இந்தியா தேசம், படித்த இந்தியர்களையே இன்று நம்பியிருக்கவில்லை. படித்த இந்தியர் வீரமின்றி, பலமின்றி, நம்பிக்கையின்றி,தாமசகுணத்துடன் சும்மாவிருந்தபோதிலுங்கூட இந்தியா ஸ்வராஜ்யம் பெறுமென்பதற்கு ஐயமில்லை. இத்தகைய திடமான நம்பிக்கையொன்று தான் என்னைக் காப்பாற்றுகிறது. பொதுவாக மாணவர்கள், அதிலும் சிறப்பாக வங்காளமாணவர்கள் தங்கள் மனச்சாட்சியை மதித்து நடப்பார்களே யானால், எடுத்த விரதத்தை உண்மையாகக் காப்பாற்றுவார்களேயானால், உபாத்தியாயர்களும், போதகாசிரியர்களும், கலாசாலை நிர்வாகிகளும் உங்களைத் தஞ்சமாகக் கொண்டு உங்கள் பக்கலில் வந்து சேருவார்களென்பதற்குத் தடையில்லை. என்ன வந்தபோதிலும் சரியே, நீங்கள் தீர்மானங் கொண்டதைமட்டும் உறுதியாய்க் கடைப்பிடியுங்கள். என்னுடைய மித்திரர் ஸ்ரீமான் தாஸர் தம் வாக்குதத்தத்தை நிறைவேற்றுவார். அவர் இப்போதே பதினாயிரம் ரூபாயும் பின்னர் பிரதிவருடம் பதினாயிரம் ரூபாயும் ஒருவங்காள கனவானிடம் பெறுவார், கல்கத்தாவிலுள்ள மார்வாரி வர்த்தகர்களிட மிருந்தும் திரவியம் பெறுவார். திரவியத்

தைப் பொறுத்தமட்டில் அதற்கு அவ்வளவு கஷ்டமில்லை. கலாசாலை யிருக்க ஒரு விடுதி ஏற்படுத்த வேண்டும். நல்ல போதகாசிரியர்களை அமர்த்த வேண்டும். தற்காலம் அமையும் திட்டமே நம்முடைய ஸ்வராஜ்ய வழிக்குச் சாதனம் என்று கொள்ளாம லிருக்கும்படி பள்ளி பஹிஷ்காரஞ்செய்த மாணவர்களை நான் வேண்டுகிறேன். நீங்கள் பெரிய கட்டடங்களை எதிர்ப்பார்ப்பீர்களென்று நாம் நம்பவில்லை. பெஞ்சுகளையும் நாற்காலிகளையும் எதிர்பார்க்கமாட்டீர்களென்று நம்புகிறேன். இவைகளினின்றும் நமக்கு அறிவுண்டாகாது. நமது திருந்திய குணங்களினால் அறிவுண்டாகும். போதகாசிரியர்களின் சிறந்த குணங்களினின்றும் அறிவு உண்டாகும் என்பதை எதிர்பார்க்கவேண்டும். உங்களுக்கு அறிவு முதிரவேண்டுமானால், உங்களுடைய சித்தவிருத்தியைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். திடமான வைராக்கியம் வேண்டும். ஸ்ரீமான் தாஸர் உங்களுக்குப் பெரிய கட்டடங்களை யமைக்கப்போகிறார் என்றும், சுகத்தையும் இன்பத்தையுமே அவர் உங்களுக்கு அளித்து வாழ்க்கையைச் சுலபப்படுத்துவாரென்றும், நீங்கள் கருதுவீர்களேயானால் அவசியம் நீங்கள் கஷ்டப்படுவீர்கள். இன்று மாலை உங்களுக்குப் புதிய தத்துவத்தை உபதேசிக்க வந்தேன். இந்தத் தத்துவமொன்றே ஸ்வராஜ்யத்திற்கு அஸ்திவாரம். இதனாலேயே நாட்டின் நன்மை வளரும். எந்த நாடும் கஷ்டப்படாமல், வருந்தாமல், தியாகஞ் செய்யாமல், சுதந்தரங் கொள்ளவில்லை. தியாகமென்பதென்ன? தியாக

மென்பது வாழ்க்கையைப் புனிதப்படுத்துவது. சுத்தியாயிருப்பது என்றே நான் என் சிறுபிராயத்தில் கற்றது. ஒத்துழையாமை இயக்கம் என்றால் நம்மை நாம் சுத்திசெய்துகொள்ளல். நமது கல்வி இரண்டு வழிகளிலும் குறைவாகவுளது. நம்முடையகல்வித்திட்டத்தை ஏற்படுத்தினவர்கள் தேகத்தையும், ஆத்மாவையும், அறியும் வழியை நிராகரித்து விட்டார்கள். ஆகவே, ஆத்மஞானம் உண்டாவதற்குத்தான் ஆன்மசக்தியை ஆதாரமாகப் பற்றியுள்ள, ஒத்துழையாமையைப் பாடமாக வைத்து இதுகாறும் துன்ப வழியிலேயே திட்டத்தை அமைத்த அரசாங்கத்தினின்றும் விலகி, குற்றங்களைந்து, குணநாடி, இன்புறுகின்றோம். தீயவழி விலகி, நல்வழி செல்வதென்பது கடவுளைக் காணும்வழி யென்பதாம். இதுவே ஆத்மவித்தை எனப்படும். இந்தியா பண்டைக்காலத்திய நூல் நூற்கும் இராட்டினத்தைக் கை நழுவவிட்டது. பிடிசோற்றுக்காக அடிமைத் தொழில் புரிகிறது. இதனை யொழிக்க, சரீரவித்தையும் கற்பிக்கப்படும். சரீரவித்தைக்கு நூல் நூற்பதே இன்றியமையாதது. நூல் நூற்பதைத் தற்காலம் வைத்துக்கொண்டு இதிலேயே கைதேறிப் பழகிவந்தால், ஸ்வராஜ்யம் வந்த பிறகு ஏற்கனவே பள்ளிக்கூடங்களில் படித்ததைவிடப் பன்மடங் கதிகமாகச் சிறந்த படிப்பு அப்பால் படிக்கலாம். வங்காளத்திலுள்ள ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் மகா புனிதத் தொழிலாகிய இந்த நூல் நூற்பதைக் கொண்டு காலங் கழிக்க வேண்டுகிறேன். இங்கிலாந்தில் யுத்தகாலத்தில் ஒவ்வொரு

சிறுவனும் சிறுமியும் நித்யமாகப் படித்துவந்த கல்வியை விட்டுவிட்டு, பள்ளி பஹிஷ்காரஞ்செய்து யுத்தத்திற் காகவேண்டிய உதவியை தேசத்திற்காகச் செய்துவந்தன ரென்பதை நீங்கள் உணரவேண்டும். சாதாரணத் தையல் வேலையைச் செய்வதும், அடையாளப்பூக்கள் செய்வதுமாகவே அவர்கள் இருந்தனர். தகப்பன்மார்களும், தாய்மார்களும் விரோதமாயிருந்தும் யுத்தகாலத்தில் அவர்களுடைய பிள்ளைகளும் பெண்களும் யான் சொன்னபடி கெய்ரா ஜில்லாவில் செய்ததை வெகு சந்தோஷத்துடன் அரசாங்கமும் அங்கீரித்தது. ஆனால், இப்பொழுது காலம் மாறிவிட்டது. தற்பொழுது சிறுவர்களையும் சிறுமிகளையும் தங்கள் தாய் நாட்டிற்காக மனச்சாட்சிக் கிணங்கி தாய் தகப்பன்மார்களுடைய வார்த்தைகளையும் தட்டி நடக்கவேண்டுமென்று கூறுபவனு யிருக்கிறேன். ஸ்வராஜ்யம் பெறவேண்டு மென்கிற அவாவுள்ள ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் அன்னியவஸ்து பஹிஷ்காரத்தைப் பரிபூர்ணமாக நிறைவேற்ற வேண்டுமானல்நூல் நூற்க ஒவ்வொரு புருஷனும் ஸ்திரீயும் குழந்தையும் தயாரா யிருக்கவேண்டும். காங்கிரஸ் மேடையிலிருந்து கடந்த 35 வருடகாலமாக நாம் எவ்வளவோ நூல் (வாயால் பிரசங்க வழியாக) நூற்ருேம். அத்தகைய நூல் போதும். இனி இந்தியாவிற்கு உண்மையாக வேண்டிய நூல்களை நாம நூற்போம். பசியுள்ளார்க்கும், நிர்வாணிகளுக்கும் அன்னமும், ஆடையும், அளிக்கவேண்டுமாஞல் நூல் நூற்பதைத் தவிர வேறு வழி கிடையாது. இப்படிச்

செய்தால் அன்னியநாட்டுத் துணிகளை நாம் விலக்கஞ் செய்கிறோம். அன்னியநாட்டுத் துணிகளை நாம் பூர்ணமாக விலக்கினால் லங்காஷயர் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக பார்லிமெண்ட் சபையில் இருக்கும் ஐம்பத்தைந்து அங்கத்தினர்களையும், இந்தியாவின்மீது சதா கண்ணோட்டஞ் செலுத்துகின்ற ஜப்பான் தொழிலாளர்களையும் தனப்பெருக்குக் கொள்ளாமற்படி அவர்கள் பலத்தை நசுக்கலாம். உண்பன, உடுப்பனவைகளில், இந்தியா (பிறநாடுகளின் தயவைப்பார்க்காமல்) தன்னைநம்பித் திருப்திகொண்டிருந்தால், காங்கிரஸ் மகாசபை தெரிவிப்பதுபோல இந்தியாவிற்கு வியாபாரத் துறையிலும் செல்வத்திலும் சுதந்தர முண்டாகும். ஆடம்பர வஸ்துக்களின்றி நாம் வாழலாம். ஆனால், உணவும் ஆடையுமின்றி வாழ்த்தல் முடியாது. 1900 மைல் நீளமும் 1500 மைல் அகலமுங் கொண்ட இப்பூமிப் பரப்பில் பண்டைக்காலத்திய நூல்நூற்கும் சம்பிரதாயத்தைப் போன்றவைகளினா லன்றி வேறுவழிகளினால் இந்தியர் திருப்தியடைய முடியாது. இந்தியாவின் பொருளாதார நிலைமையைக் கவனிக்கக் கவனிக்க, இந்தியாவிலுள்ள இயந்திரத் தொழிற்சாலை முதலாளிகளுடைய வார்த்தைகளைக் கேட்கக் கேட்க, நூல் நூற்கும் விஷயத்தில் எனக்கு வரவர அதிகமான நம்பிக்கையும் திடமான வைராக்கியமும் உண்டாகின்றன. இயந்திரத் தொழில்களினால் இந்தியா ஸ்வராஜ்யம் பெறுமென்பது முடியாததாக எனக்குப் புலப்படுகிறது. இயந்திரத் தொழிற்சாலை முதலாளிகளைக்

கேட்டால், இந்தியா தன்னைத் தான் நம்பியிருக்க இன்னும் ஐம்பது வருடங்களுக்கு மேல் ஆகும் எனக் கூறுவார்கள். இப்பொழுதுள்ள இயந்திரத் தொழிற் சாலைகள் இந்தியாவிலுள்ளவர்களுக் கெல்லாம் ஆடை யளிக்க வழியில்லாமல் இருப்பதினாலேயே, ஆயிரக் கணக்கான நெசவுக்காரர்கள் நூல் நூற்றும், துணி நெய்தும் வருகிறார்கள். ஆகவே, பள்ளி பஹிஷ்கா ரஞ்செய்த வங்காளச் சிறுவர்கள், ஸ்வராஜ்யம் அடை யும் வரை வேறுவழிகளில் புத்தியைப் பாயவிடாமல் வெகுகாலமாக நழுவவிட்ட இந்த நூற்கும் தொழிலை மேற்கொண்டு தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் மேனோக்கிச் செல்வாராக!

நான் மற்றொன்றும் கூற யிருக்கிறேன். நம் ஜாதீய கல்விச்சாலைக ளிருந்திருந்தால் ஆங்கு படிக் கும் முக்கியமான ஒன்றை நாமிருவரும் நழுவவிட் டோம். வங்காளச் சிறுவர்கள், குஜராஷ்டரச் சிறு வர்கள், தட்சணச் சிறுவர்கள் ஹிந்துஸ்தானி யொன் றையே பேசும் மத்தியமாகாணம், ஐக்கியமாகாணம், பஞ்சாப் மாகாணங்களுக்குப் போகவேண்டுமானால் என்ன செய்ய முடியுமென்பதைத் தெரிந்தே நான் பிள்ளைகளை ஒழிந்த நேரத்தில் ஹிந்திபாஷையைக் கற்கவேண்டு மென்கிறேன். நூல் நூற்பதும் ஹிந்தி பாஷை கற்பதும் இரண்டு மாதகால அளவேதான். பிறகு சென்னை நீங்கலாக இதர எல்லா மாகாணங்க ளுக்கும் வங்காளப் பிள்ளைகள் தாராளமாகச் செல்ல லாம். இங்கிலீஷ் பாஷயை இந்தியாவிற்குப் பொது பாஷையாக ஏற்படுத்த முடியாது. ஏனெனில் 22

கோடி இந்தியர்களுக்கு இந்துஸ்தானி தெரியும். இந்த 22 கோடி ஜனங்களும் மன முருகும்படி நாம் ஏதாகிலும் சொல்லவேண்டுமானால், அவசியம் இந்துஸ்தானியில்தான் சொல்லவேண்டும். இதுவரையிலும் உங்களுக்கு இல்லாத புதிய சக்தியும், பலமும் இவ்விரண்டினாலும் ஏற்படும் என்பதை நம்புங்கள். கவர்ன்மெண்ட் உத்தியோகம் இவை இரண்டினாலும் கிடைக்க முடியாதென்று கூறுகையில் பலபிள்ளைகளுக்கு முகம் சுணங்கிப்போகின்றது. அரசாங்கத்தை மாற்றி, நல்லரசாங்க முறை ஸ்தாபிக்க வேண்டுமானால் எப்படி கவரன்மெண்டு உத்தியோகங்களுக்கு நாம் போகலாம்? நாம் கவரன்மெண்டுக்கு உதவி புரியாமலும் அக்கவரன்மெண்டை அடுக்காமலுமிருந்தால் ஆங்கில பாஷை அப்பொழுது என்ன விலைமதிப்பு பெறும்? இந்த ஒன்பது அல்லது பன்னிரண்டு மாதம்வரை ஆங்கிலபாஷா அபிவிர்த்திக்குரிய பாடங்களை விட்டுவிட்டு, நாற்பதையும், ஹிந்திகற்பதையுமே கொண்டு தேசசேவை செய்யும் வழியைப்பற்றி ஒழுகவேண்டுமென்று குஜராஷ்டர மாணவர்களுக்கு நான் கூறியிருக்கிறேன். இந்தியாவிலுள்ள $7\frac{1}{2}$ லட்சம் கிராமங்களிலும் காங்கிரஸ் சபை ஸ்தாபிக்கப்படவேண்டுமானால், காங்கிரஸ் தெரிவித்தபடி ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேண்டுமல்லவா? ஆகவே அதைப் பொறுப்பது உங்கள் பாரம். பாரத மாதாவின் கட்டளை வாலிபர்களுக்குப் பிறந்து விட்டது. இத்தகைய சிரேஷ்டமான கட்டளையை வகிக்க ஒவ்

வொருவரும் முன் வருவீர்களென்று நான் நம்புகி றேன். இப்படிச் செய்வீர்களேயானால் இந்தியாவின் சிறப்பையும், இஸ்லாம் மதத்தின் கௌரவத்தையும், பாரதர்களின் தன் மதிப்பையுங் காப்பாற்றி ஸ்வராஜ் யத்தை ஸ்தாபித்தவர்களாவீர்கள். ஆகவே, தியாக மென்கிற யக்ஞ விரதமும், சுத்தி யென்கிற பிரபத்தி ஞானமும், உண்டாகும்வழியில் கடவுள் வங்காளத்தி லுள்ள சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் அதற்கு வேண்டிய நம்பிக்கையையும், தைரியத்தையும், பக்தி யையும் கொடுப்பாராக. கடவுள் உங்களுக்கு உதவி புரிவாராக! நான் உங்களுக்கு ஒன்று கூற மறந்து விட்டேன். என் மனதில் இருந்தது—ஆனால் நூற் கும் விஷயமாகவும் ஹிந்துஸ்தானி விஷயமாகவும் அதிக காலம் பேசினமையால், வைத்தியக்கலாசாலை யை விட்டு வந்த மாணவர்களுக்கு ஒன்றுஞ் சொல் லாமலிருந்து விட்டேன். இதர மாணவர்களுக்கு எப்படி இதுகாறும் நான் கூறிவந்தேனோ அம்மா திரியே இவர்களுக்கும் கூறுவேன். இதரப் பிள்ளைக ளைக் காட்டிலும் இவர்கள் மேலான வேலையைச் செய் யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவின் இரத் தம் வடியும் புண்ணை யாற்ற வேண்டும். இந்தியா கஷ்டப்படுகின்ற நோயை சொஸ்தப்படுத்த வேண் டும். பஞ்சாபுக்கு விளைத்த புண்ணைக் காட்டிலும் பெரிதான புண் வேறுண்டென யான் அறியவில்லை. உதவியற்றும், அடிமைப்பட்டும், ஈனசேவகப்பட்டும் தியா முழுமையும் வருந்துகின்ற இந்தக் கொடிய நோயைக் காட்டிலும் உலகில் பெரிய நோயொன்று

உண்டென்பதை யான் அறியவில்லை. ஆகவே, வைத்தியப்பிள்ளைகள் உண்மையாயிருப்பார்களானால் தாயின் திருத் தொண்டுக்கு ஈடு பட வேண்டியதைத் தவிர, வேறு ஒன்றுங் கிடையாது இந்திய னொருவன், எவ்வளவு பணக்காரனு யிருந்தாலும், படித்தவனு யிருந்தாலும், மேலானவனு யிருந்தாலும், பலமுள்ளவனு யிருந்தாலும், இந்தியா பல வருட காலமாகக் கஷ்ட நோயில் அடிபட்டு வருந்துவதை நீக்கி, ஸ்வராஜ்ய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதே அவனுக்கு உரிய கடமையாகும். பன்னிப் பன்னிச் சொன்னதையே திரும்ப திரும்பச் சொல்கிறீரே என்று என் மீது குற்றங் கண்டு பிடிக்கலாம். ஆனல் நான் மட்டும் தனியா யிருந்தால், நால் நாற்பதிலும் ஹிந்துஸ்தானி பாஷா அபிவிர்த்தியிலுமே காலங் கழிப்பேன். ஆகவே, என் பால சிநேகிதர்களே! உங்களுடைய மனதில் ஊடாடி வரும் ஐயன்களைக் களைந்து விடுங்கள். பயத்தையும் விதண்டா வாதத்தையும், நம்பிக்கையற்ற சஞ்சல மனத்தையும், வங்காளக் குடாக் கடலில் எறிந்து, புதிய உணர்ச்சியுடன் எழுந்திருங்கள். உங்களுக்குக் கிடைக்காதது ஒன்றுமே கிடையாது. எல்லாம் சித்திக்கும்.

V

வியாபாரிகளின் கடமை

1921-ம் வருடம் ஜனவரி மாதம் 30-ந் தேதி கல்கத்தாவி லுள்ள பாரா பஜார் வியாபாரிகளுக்குத் தற்கால நிலைமையில் ஏற்பட்ட இயக்கத்தில் அவர்களுடைய கடமையைப் பற்றி மகாத்மா காந்தி பின் வருமாறு பேசினர்.

சகோதரர்களே! நான் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பேசுவது எனக்கே அவமானமாகயிருக்கிறது. நான் நாற்காலியில் உட்காராமலேயேயிருக்கலாம். ஆனால் நான் சக்தியற்றவனா யிருக்கிறேன். நான் ஒன்பது மாதத்திற்குள்ளாக ஸ்வராஜ்யம் வேண்டுபவனா யிருக்கையில் இதெல்லாம் எனக்கு வேண்டுவதில்லை. நான் வருகையில், என் சகோதரர்கள் எனக்கு அதிக துன்பத்தை வீதியில் கொடுத்தார்கள். அவர்கள் என்னை, அதிகமாக நேசிக்கிறார்கள். ஆனால் நான் எப்படியாகிலும் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு போக முயலுகின்றேன். இந்த மண்டபத்திற்கு வெளியே ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருப்பதினால், வெளியே ஒரு வேலையும் ஆகவில்லை. அதினால் எனக்கு ஒரு மணி வீணாயிற்று. இதற்குக் காரணம் இவ்விடத்தில் ஏற்பாடு சரியாக வில்லாமையே. விசேஷ கூட்டம் வரும் என்று, எதிர்ப்பார்க்கப் படுகையில் கூட்டத்திற்குத் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கவேண்டும்.

வேலைகளுக்குக் குந்தகம் இல்லாமற்படிக்கும் வழித் தடங்கல் இல்லாமற்படிக்கும், மின்சார வண்டிகள் நிறுத்தப்படாமற்படிக்கும் இருக்க வேண்டும். ஜனங் களுடைய ஏராளமான காலம் வீணாக்கப்பட்டது. என்னுடைய பாதகங்களைத் தொட்டு நமஸ்கரிப்பது பாபமென்று ஹிந்திப்பத்திரிகைகளும் உருதுப்பத்தி ரிகைகளும் இது விஷயமாகப் பிரசுரஞ் செய்யவேண் டும். ஜனங்களின் சப்தம் எனக்கு சகிக்க முடிய வில்லை. எனக்கு உடம்பு அசௌக்கியமா யிருப்ப தால் சப்தத்தின் அதிர்ச்சி தாங்க முடியவில்லை. “வந்தே மாதரம்” மகாத்மா காந்தி-கி-ஜேய்! என் னும் சப்தம் உண்மையா யிருந்தா லன்றி வெறும் பேய் முழக்கத்தில் காரிய மில்லை. மனிதர்கள் சொல்வதுபோலக் காரியத்தில் செய்வதில்லை. நான் கூட என்னுடைய பனியா குல தர்மத்தை விட்டு விட்டு, க்ஷத்திரிய தர்மத்தில் இரங்கி, க்ஷத்திரியனா னேன். க்ஷத்திரிய தர்மத்தைக் கைக்கொள்ளாமலி ருந்திருந்தால் என்னுடைய துக்கத்தை அழுகையில் காண்பித்திருப்பேன். இங்ஙனம் பாதங்களைத் தொடுவதும்,கூக்குரலிடுவதுமாகக்காலங்கழிக்காமல், தன் மானத்தைக் காப்பாற்றி, நாம் ஒருவருக்கொரு வர் ஒற்றுமையாக விருந்து வந்தால் ஸ்வராஜ்யம் ஒன்பது மாதத்திற்குள்ளே வரும். நான் எதைச் செய்யவேண்டுமென்று நினைக்கிறேனோ அதைக் கட் டாயம் செய்தே முடிப்பேன். முப்பதுகோடி ஜனங் களும் என்னுடன் வராமற் போனபோதிலும் அப் பொழுதும் நான் தனியாக நின்று ஸ்வராஜ்யம் வரும்

வரையில் கஷ்டப்படுவேன். ஆனால் சபதஞ் செய்ய மாட்டேன். கலியுகத்தில் ஒருவர் பாதத்தை மற்றொருவர் பூசிப்பது தகுதி யன்று. முப்பதுகோடி ஜனங்களின் காரியங்களை நீங்களே செய்து முடிக்க வேண்டுமென்றால், பணத்துடன் வெளி வாருங்கள். பணத்தைக் கொடுத்து என்னைக் கணக்குக் கேளுங்கள். ஒரு பொக்கிஷதாரியை யேற்படுத்துங்கள். உங்களால் ஸ்வராஜ்யம் ஸ்தாபிக்க இயலாதெனத் தெரிந்தால், ஸ்வராஜ்யம் ஸ்தாபிக்க முடியுமென்ற ஒருவருக்குப் பணத்தைக் கொடுத்து உதவி செய்யுங்கள். நீங்கள் பண உதவி செய்யாம லிருந்தால் ஸ்வராஜ்யம் கஷ்டமாக யிருக்கும். ஆனால் ஸ்வராஜ்யம் அசாத்ய மல்ல. இந்தியாவி லுள்ள பிள்ளைகள் எனக்கு உதவி செய்யாம லிருந்தாலும் அதைப்பற்றிய அக்கரை எனக்கு அவ்வளவில்லை. வக்கீல்மார்கள் உதவி செய்யாம லிருந்தாலும், எனக்கு அக்கரை யில்லை. பணக்காரர்கள் உதவி புரியாம லிருந்தாலும் அதைப்பற்றிய அக்கரையும் எனக்கு அவ்வளவில்லை. ஸ்வராஜ்ய ஸ்தாபனம் தொழிலாளர்களினாலும், விவசாயிகளினாலுமே கைகூடும். நானும் என்னுடைய பிறப்பால், உங்களுடைய ஜாதி தர்மத்தைக் கொண்டவன்; விருத்தியில் நானும் ஒரு வியாபாரிதான் : நான் வக்கீலாயிருந்து பணமும்சம்பாதித்தேன். உங்களுக்கு சக்தியிருந்தால், உங்களுக்குப் பலமும்திடமும்இருந்தால், இந்தியாவைஆளவேண்டுமென்கிற விருப்பமும் உங்களுக்கு இருந்தால், தியாகஞ்செய்யுங்கள். உங்களைத் தியாகஞ்

செய்து கொள்ளுங்கள். உங்களுடைய பெண்டு பிள்ளைகளையும், தாய்தகப்பன்மார்களையும், உங்களுக்குள்ள சம்பத்துக்களையும், நாட்டிற்காகத் தியாகஞ் செய்யுங்கள். ஸ்வராஜயம் விவசாயிகளாலேயே ஏற்படும். விவசாயிகள் உதவி செய்யாம லிருந்தால் ஸ்வராஜ்யம் கிட்டாது. அரசாங்கத்தாருடன் கலந்து அவர்களுக்கு உதவி செய்வீர்களானல், வியாபாரிகளாகிய உங்களிடத்தில் எவ்வளவு அருங் குணங்களிருந்த போதிலும், அக்குணங்கள் ஸ்வராஜ்யத்திற்குப் பயன்படா. இருபத்தைந்து கோடி சங்கியை கொண்ட விவசாயிகள் தங்கள் ஸ்வதர்மத்தைக் கைவிடுவார்களானல் ஸ்வராஜ்யம் ஸ்தாபிக்க முடியாது. மார்வாரிகளிலே பணக்காரர்கள் இங்கு விஜயமாக வில்லையென்று அக்கிராசனர் கூறுகிறார். அது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. என்றாலும், அவர்கள் வராமைக்குக் காரணம் உண்டு. அவர்கள் இந்த கவர்ன்மெண்டின் கீழிருந்து, அக்கவரன்மெண்டின் ஆதரவி லிருந்து, கவரன்மெண்டுடன் ஒத்துழைத்து வந்தமையால் அவர்கள் பணக்காரர்களானார்கள். ஆகவேதான் அரசாங்கத்தைக் காண அஞ்சுகிறார்கள். இந்தியர்களுடைய ஒத்தாசையினலேயே இங்கிலீஷ்காரர்கள் பணஞ் சம்பாதிக்கிறார்கள் என்பதை, மார்வாரிசகோதரர்கள் அறியாமலிருக்கிறார்கள். உங்களை வியாபாரஞ் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை; சத்தியமாகப் பொய்கூருமல், வியாபாரஞ் செய்யலா மென்பதாகத்தான் நான் கூறுகிறேன். வியாபாரத்தில் பொய்

சொல்லாம லிருந்தால், நாங்கள் ஒட்டாண்டியாகத் தான் போவோம், என நீங்கள் கூறலாம். ஒட்டாண்டியா யிருப்பது மேன்மை; ஆதலால் உங்களிட மிருந்து எனக்குப் பணம் வேண்டாம். நீங்கள் அன்னிய நாட்டுச் சாமான்களைக் கொண்டு வியாபாரஞ் செய்வதைத் தவிர்க்க வேண்டும். கடவுளுக்குப் பயப்படுகிறவர்கள், கடவுளின் ஆக்ஞையை நிறைவேற்ற வேண்டும். கடவுள் உங்களுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்திருக்கிறார்; அதனால் உங்கள் தேகங்களை சர்வ பூஷணத்துடன் அலங்காரஞ் செய்துக் கொள்ளுகிறீர்கள். ஐசுவரியத்தைக் கொண்டு மல்மல் பக்ரிகளைத் தரித்துக் கொள்ளுகிறீர்கள். இயந்திர சம்பந்தமான எதையும் வைத்துக் கொள்ளாமல் விட்டுவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன், நீங்கள் தைரியமாக இனி கதர்பக்ரிகளைத் (தலைக் குட்டை) தரித்துக் கொள்ள வேண்டும். என்னுடைய மகனை 'நீ செய்யும் வியாபாரம் ஸ்வதேசியாக வில்லாம லிருப்பதால் கதர் வியாபாரஞ் செய்ய வேண்டுமென்று நான்சொன்னதற்கு; அவன், 'கதர் வியாபாரஞ் சரியாக ஆகவில்லை, கதர் துணிகள் அப்படியே இருக்கின்றன' என்று கூறுகிறான். என்னுடைய சகோதர, சகோதரிகள் கதர் துணியைத் தான் உபயோகப்படுத்துகின்றார்கள். இயந்திரத் தொழிற்சாலை முதலாளிகள் பெருத்த அநியாயஞ் செய்கிறார்கள். பஞ்சு விலை ரூ. 9. ஆக இருக்கையில் நூல் விலை மட்டும் ரூ. 34. ஆக எப்படி யாகும். கதர் வியாபாரத்தில் ஒரு சிறிதளவு தான் லாபங் கிடைக்

கிறது. இதற்குக் காரணம் இயந்திரத்தொழிற்சாலை முதலாளிகள் நூல் விலையை அதிகமாக ஏற்றுவதேயாம். செருப்புத் தைக்கும் சக்கிலிக்கும், வீதி கூட்டும் பறையனுக்கும் உடுத்தத் துணிவேண்டும். இந்தக் கூட்டத்தில் வைஷ்ணவர்கள் இருந்தால், உண்கலத்தி லுள்ள மிச்சமும் கந்தைத் துண்டும் அத்திறத்தாருக்குப் போதும் என்றே கூறுவார்கள். ஆனால் நான் பிரதி காலையிலும் அவர்களை நினைத்து எனக்குச் சமமானவர்களென்றே கருதி வருகிறேன். இயந்தரத் தொழிற்சாலைகளின் துணியை விட்டு விட்டால் கதர் வியாபாரம் நன்றாக நடை பெறும். ஜனகபுரிக்கும், ஒரிஸாவுக்கும் போவீர்களேயானால், ஏழைகளின் துயரத்தைக் காண்பீர்கள். உணவிற்குப் பதிலாக மாவு கிடைக்கிறது. நெய் கிடையாது. நான் ரயில்வண்டியிலே மூன்றாவது வகுப்பில் ஏறிக்கொண்டு பிரயாணஞ் செய்கையில் தர்ம சத்திரங்களில் மனிதர்கள் மாவைப் பிசைந்து ஒரு கல் உப்பும் ஒரு சிடிகை மிளகாய்த் தூளும்சேர்த்து உண்பதைக் கண்ணாரக் கண்டிருக்கிறேன். எனக்குக் கண்ணிலிருந்து ஒரு துளி நீர் கூட வரவில்லை. அவ்வளவு நெஞ்சு உரப்புள்ள க்ஷத்திரியனாய் விட்டேன். ஐயோ! அன்னபூரணி என்று அழைக்கப்படுகின்ற இந்த நாட்டில் நெய் அகப்படவில்லை. இதுவும் காலத்தின் கோலமே. சம்பாரணில் ஜனங்கள் அன்னமின்றி மடிகின்றார்கள். இதற்கெல்லாம் விமோசனம் ஒன்று தான். அது நூல் நூற்பதேயாம். ஸ்வராஜ்யம் வந்தால் மல்மல் நமது நாட்டி

லேயே அப்பொழுது செய்து கொள்ளலாம். நானே நன்றாக நூல் நூற்பேன். 6-ம் நம்பரி லிருந்து 20-நம்பர் வரை புடவைகளுக்கும், பட்டிகளுக்கும், நூல் நூற்க வேண்டித்தா னிருக்கும். உங்களுடைய பக்ரிகளுக்கு 80-நம்பர் நூல் உபயோகிக்கப்படுகிறது. அது வெளி நாட்டுச் சாமான். ஆகவே அனுசாரங் கொண்டது. மார்வாரிகள் தங்களுடைய மத அனுஷ்டானத்தை விட்டு விட்டார்கள். பசுக்கள் (கோ) ரட்சிக்கப்பட வேண்டுமானால் கிலாபத்தை ரட்சியுங்கள். கோடீஸ்வரப் பிரபுக்கள், கோஹத்தியை நிறுத்திப் பசுக்களை ரட்சிப்பதாகப் பேசுகிறார்கள்; ஆனால், ஆங்கிலேயருடன் ஒற்றுமைழக்கிறார்கள். துன்புறுத்தும் ஆங்கிலேயன் பசுக்களைக் கொன்று ரத்தத்தைப் பானம் பண்ணுகிறான். ஆங்கிலச் சாமான்களுக்காக ஏஜண்டா யிருப்பது அனுசாரம். மத சம்பிரதாயத்திற்கு விரோதம். முகம்மதியர்கள் பசு வதை செய்கிறார்களென்று சொல்லப் படுகின்றது. பம்பாயி லுள்ள பாந்தராவில் நித்திய மாக நடக்கக் கூடிய பல பசு வதை விஷயங்களை ஒரு மார்வாரி சிநேகிதருக்குக் கூறினேன். அவர் உடனே கண்ணீர் விட்டார். எனக்கு அழுகை வரவில்லை. எத்தனை பசு மாடுகளை நம்மவர் துன்புறுத்துகிறார்கள். நீங்கள் பசுவைத் தொழுகிறீர்கள். எருதுகளைக் கொல்ல வைக்கிறீர்கள். பாற் சாலைகளிலுள்ள பசுக்களின் நிலைமையைக் கவனியுங்கள். அவைகளின் மடியி லிருந்து இரத்தம் வரும் வரை பால் கறக்கப்படுகின்றது. அதை நீங்கள் உண்கிறீர்கள். நீங்

கள் பசுக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் கிலாபத்திற்கு வாருங்கள். முகம்மதியர்கள் அவ்வளவு நன்றி கெட்டவர்க ளல்லர். கிலாபத்திற்கு (அவர்களுக்கு) உதவி செய்யுமுன் நீங்கள் அவர்களைப் பசுவதை நிறுத்த வேண்டுமென்று, வியாபாரம்போல் கேட்கக் கூடாது. உங்களுடைய சகோதரர்களுக்காகத் தியாகஞ் செய்யுங்கள். பக்கிரி வேடந் தரித்து நான் ஹிந்து என்று முன் வாருங்கள். ஹிந்துக்களாகிய நீங்கள் பயங் கொள்ளிகளாக விருத்தல் கூடாது. தைரியமா யிருப்பதே இந்துவின் லட்சணம். அன்னிய வியாபாரத்தை விட்டு விடுங்கள். திடீரென்று எல்லாவற்றையும் விடவேண்டாம். துணி சாமான்களை மட்டும் விலக்குங்கள். உங்களுடைய வீட்டிலிருக்கும் பர தேச சாமான்களை யொழித்து உங்கள் தாய்மார்களையும் மனைவிகளையும் இனி பரதேச சாமான்களைத் தரித்துக் கொள்ள வேண்டாம் என்று கூறுங்கள். இது உங்களுக்கு நஷ்டத்தைக் கொடுக்காது. தட்சிண ஆப்பிரிக்காவிற்கு அச்சாமான்களை அனுப்புங்கள். அங்கே அவை விலைபோம். நூல் நூற்கும் ராட்டினம் அங்கே கிடையாது. இந்தியா எப்பொழுதும் நல்ல பதிவிரதா ஸ்திரீகளினால் போற்றப்பட்டது. முஸ்லீம் ஸ்திரீகளும் வெகு நன்றாக நூல் நூற்கிறார்கள். பரதேசச் சாமான்கள் இருந்தால் அவைகளை விற்பனை செய்யுங்கள்; அல்லது கொளுத்துங்கள்; மறுபடியும் வாங்குவதில்லை யென்றும் தரிப்பதில்லையென்று சபதங்கூறுங்கள். பரதேச நூல்களை உபயோகிக்கக் கூடாதென்று நெசவுக்காரர்

களுக்குக் கூறுங்கள். 20-ம் நெ. நூலுக்கு மேற்பட்டவைகளை உபயோகப்படுத்தக் கூடாதென்று கூறுங்கள். எனக்கு மூன்று வஸ்துக்கள் தேவை. முதலாவது, காந்தியை உபத்திரவப்படுத்தாதீர்கள்; காந்திக்கு ஜேயென்றுகூவிக் கஷ்டப்படுத்தாதீர்கள்; அது தீங்கென்று நினையுங்கள். இரண்டாவது பணம் தேவை; உங்களா லியன்றளவு பணங் கொடுங்கள், உங்களா லியன்ற வளவு செய்யுங்கள்; தானியம் விற்போர் இன்று பதினாயிரம் ரூபாய் கொடுத்து இன்னமும் கொடுப்பதாக வாக்குறுதி சொல்லி யிருக்கிறார்கள். உங்களால் எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவையும் திருப்தியாகவும் பத்தியுடனும் கொடுங்கள். நான் கடவுளைப் பிரார்த்திப்பது போல உங்களையும் பிரார்த்திக்கிறேன். உங்களுடைய மத உணர்ச்சியையும் தேசாபிமானத்தையும் விர்த்தி செய்யுங்கள். மூன்றாவது சுத்தமா யிருங்கள், தேசாபிமான முள்ளவர்களாக விருங்கள். ஸ்வராஜ்ய காரியத்திலும் கிலாபத் விஷயத்திலும் அக்கரையுடன் உழையுங்கள். கிலாபத்தே காமதேனு. உங்களுடைய வீட்டில் சுதேசிச் சாமான்களையே உபயோகப்படுத்துங்கள். இது ஒன்றே உங்களுக்கு நன்மை செய்யும். 60-கோடி ரூபாய் வெளிநாட்டிற்குப் போகின்றது. அப்பணத்தைக் காப்பாற்றி ஒன்பது மாதத்திற்குள்ளாக ஸ்வராஜ்யம் எய்துங்கள். சகோதரர்களே ! இதுவரை நீங்கள் சாவதானமாகவும் பக்தியுடனும் நான் கூறுவதைக் கேட்டீர்கள். கண்மூடித்தனமாக என்னிடம் பக்தி

வைக்கவேண்டாம். உங்களுடைய இருதய கமலங்களினின்றும் இயற்கையாக எழும்பும் பக்தியே வேண்டும். அவ்வித பக்தியொன்றினாலேயே இந்தியாவைச் சுதந்தரமாக்க நான் வல்லேன். என்னுடைய வார்த்தையைக் கேட்டு பகவானைத் துதித்தால், அவர் உங்களுக்கும் எனக்கும் சக்தியைக் கொடுத்து ஸ்வராஜ்ய சித்தியுண்டாக அருள் புரிவார்.

Cndg
23 9 86
£ 12

28

Cndg
1-11-90

காமாட்சி

ஆரிய சந்ததியார்களாகிய யாவரும் பால்ய விதவைகளின் வாழ்வைச் சீர் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், மருந்தைச் சர்க்கரையில் கலந்தூட்டுவதுபோல், நன்னெறிகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஹிந்து மகா ஸமயத்தைக் கேடுறச் செய்துள்ள அதன் தத்துவங்களை உணர்ந்து காலதேசவர்த்தமானத்தைத் தழுவி உய்விக்கச்செய்ய வேண்டுமென்பதும் இந்நூலின் கருத்தாகும். மிகவும் அழகான நடை. நல்ல அச்சு.

இரண்டாம் பதிப்பு விலை அணா 8.

தமயந்தி

பாரத இதிகாசத்திற் சிறந்த பாகமாகவும், பல பாஷைகளில் புனையப்பட்ட அருங் கதையாகவுமுள்ள நளச்சக்கரவர்த்தியின் கதையைக் கொண்டு, நவரஸ அலங்கார நாடகத்திற் கேற்ப விஷயங்களைத் தொகுத்தும் விளக்கியும் செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றிருக்கும் இந்நூல் படிப்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பல நீதிகளையும் உணர்த்தும். ஆன்றோரியற்றிய பல அரிய பாக்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டிருப்பதோடு, ஆசிரியரால் சமயத்திற்கேற்பப் புனையப்பட்ட கண்ணிகளும், கீர்த்தனங்களும் அடங்கியிருக்கின்றன.

மூன்றாம் பதிப்பு விலை அணா 8.

ஆனந்த மடம்

ஆத்ம லாபத்தைக் கருதிக் கானகஞ் சென்று கடுந் தபமியற்றும் முனிவர்களைப்போல் தேச க்ஷேமத்தை நாடி, ஸகலத்தையும் துறந்து, தேசாபிமானப் பயிரை வளர்த்து மகசூல் காண முயன்ற வங்க நாட்டு ஆனந்தர்களின் செயலைக் காணும் திவ்யநூல். படிக்கப் படிக்க இன்பம் ஊட்டும்.

இரண்டாம் பதிப்பு விலை ரூ 1.

கணேஷ் கம்பெனி, 39 தம்புசெட்டி தெரு, சென்னை